MARUTHUVAN

மருத்துவன்

PHYSICIAN

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. 1928வூ டிசம்பர்மீ இதழ் ௩.

உள்ளுறை

அபிப்பிராயங்கள்	57
பொன்	61
மதுசாரம்	65
உடற்பயிற்சியும் சுகாதாரமும்	68
தமிழர்கள்	69
சுகவழி	72
சிறுத்தொண்டர் வரலாறு	75
ஒரு அருமைத்திருமணம்	79
பனகால் அரசர் விண்ணுற்ருர்	80
மருத்துவனுக்கு வாழ்த்து	81
மதிப்புரை	83
நன்கொடையாளர்கள்	83
பாலர் பரிபாலனம்	

மருத்துவன் காரியாலயம்

221, தங்கசாலை வீதி

சென்னை.

மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை.

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமை யாத வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய் களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன், பெண் கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங் களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேகபலத் தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்று மில்லையாதலால், ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனுவான்.

மருத்துவனின் சந்தா விவரம்.

ஆண்டு 1-க்குத் தபாற் கூலியுட்பட உள் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ 3—8—0.

தனிக்காப்பி அணு 0—4—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதக் கடைசியில் வெளிவரும்.

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை.

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும், முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடு தெளிவாக எழுத வேண்டும்.

சந்தா தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி-பி-யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரிகைகள் வேண்டுமானுல், இருக்கும் சஞ்சிகைகள் மட்டும் அனுப்பப்படும்.

மருத்துவச் செல்வனே

உன்வரவு நல்வரவாகுக !

மருத்துவச் சங்கமெனவும், மருத்துவ மகாநாடெனவும் சில்லாண்டுகளாக நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் அவைகளைப்பற்றிக் கூறும் எவ்வுருவத்தையும் நாம் நேரில் கண்டதில்லை. அத்தகைய விஷயங்களைக்கூறும் உருவமொன்று இது காறும், இல்லாமையினாற்றான் மருத்துவக் குலத்தினராகிய நாம் முன்னேற்றமடையும் மார்க்க மறியாமல் தவித்துக்கொண்டு இருந்தோம்.

நாடும், சமூகமும் முன்னேற்ற மடைவதற்குப்பத்திரிகைகள் ஏணிகளாய் இருந்து உதவுகின்றன. நமது சமூகமும், முன்னேற்றமடைகின்ற மற்றச் சமூகங்களைப்போல், முன்னேற்ற மடைவதற்கு நமக்கு ஏணியாகிய பத்திரிகை ஒன்று வேண்டியதாயிருந்தது. அந்த அவசியத்தை பூர்த்திசெய்யவே இப்போது, "மருத்துவன்" உதித்திருக்கிறான். இவன் தந்தையார் ஏனைய மருத்துவரைத் தட்டி விழிக்கச் செய்த பண்டிதர் திரு எஸ். எஸ். ஆனந்தம் அவர்களாவர். அவர், மருத்துவர் முன்னேற்ற மடைவதற்கு வழிகாட்டவந்த மாதாந்த மருத்துவச் செல்வனை அற்பிசித்திங்களில் உலகுக்களித்தார். மருத்துவச்செல்வன் வாயில் தந்தையாராகிய தாம் தமது கருத்தை ஊட்டினார். சீர்திருத்தக் கட்டுரைகளினால் அவனுடைய அங்கத்தை அலங்கரித்தார். பிறகு அவர் அம்மருத்துவனை, "மருத்துவர்களுக்குத் தொண்டு செய்யப்போ" வென்று கூறியனுப்பினார். அவன் நம்மைத் தபால்மூலமாகத் தேடிவந்து நமது கதவங்களைத் தட்டினான். நிற்க,

மருத்துவன் என்னையும் தேடிவந்தான். நான், நீயார், என்றேன். அவன், நான் மருத்துவன், என்றான். மருத்துவனைக் கண்டேன்; களிகூர்ந்தேன். அவனைவாரி எடுத்து முத்தமிட்டேன். மருத்துவன் திருவாய்ச் சொற்களைக்கேட்டு மகிழ்ந்தேன். மருத்துவச் சமூகத்தின்பால் உள்ள முன்னேற்ற மில்லாமையாகிய பிணியையும், மக்கள்பால்குடிகொண்டுள்ள உடம்பின் பிணியையும் தீர்க்கக் கருதி முன்வந்துள்ள மருத்துவனுக்கு நாம் செய்யும் கைம்மாறு யாது? என்று நான் எண்ணினேன். உடனே "மருத்துவன், மருத்துவர்களுக்குள் ஒற்றுமை அபிமானம் முதலியவைகளை வளரச்செய்யவேண்டும்" என்றான். பின்னும் அவன், "ஒற்றுமை, குலாபிமானம் முதலியவைகள் மருத்துவர்களிடம் வேண்டு மளவுக்கு இல்லை என்றெண்ணி என் தந்தையாராகிய ஆனந்தம் அவர்கள் ஏக்கமுற்று, நீயாவது அவைகளை மருத்துவர்களுக்குப் போதித்துவா உன் மீதாவது மருத்துவர்கள் இரக்கம் கொண்டு ஒற்றுமை அன்பு முதலியன உடையவர்களாகட்டும், என்று கூறினார்,' என்றான்.

உடனே நான், மருத்துவனே! உன்வரவு நல்வரவாகுக! உன் தந்தைக்கு, உன்னை வளர்ப்பதற்காகவே, இறைவன் நிறைந்த ஆயுளையும் தேக பலத்தையும் தருவானாக, என்று கூறி நான் கடவுளைத் துதித்தேன்.

க. ஜானகி, பினாங்கு.

இந்து பத்திரிகை, சென்னை

5-12-1928

'மருத்துவன்' பத்திரிகையின் அக்டோபர்மாதத்திய வெளியீடு (முதல் வெளியீடு) வரப்பெற்றோம். இது ஒருமாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள். இப்பத்திரிகை பொது ஜனங்களுக்கு சுகாதார விதிகளையும், பொதுவாக நோயணுகா விதிகளையும், குறிப்பிட்ட பல வியாதிகளை ஒழிக்கும் முறைகளையும் கூறுவதோடு, சித்தவைத்திய முறையை அநுசரித்து வியாதிகளைப்போக்கும் வழிகளைக் கூறுவதாக அறிகிறோம்."

ஜஸ்டிஸ், சென்னை

(1-12-1928.)

மருத்துவன் என்னும் புதிய தமிழ்வைத்திய மாதப்பத்திரிகையின் முதல் வெளியீடு வரப்பெற்றோம். அதன் ஆசிரியர் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள். நம்நாட்டு மருந்துகளைப்பற்றிய அறிவு வளர்ச்சியையும், பிரசவம், சிசு பரிபாலனம் ஆகிய இவைகளைப்பற்றிய முக்கியமான விஷயங்களையும் பரப்புவது அதன் நோக்கமாகும். அதன் முதல் வெளியீட்டில், மற்றவைகளுடன் ஆரோக்கியம், உடல் வலிமை, குழந்தை பிறந்ததும் அநுசரிக்க வேண்டிய சில முக்கிய விதிகள் ஆகிய இவைகள் அடங்கியுள்ளன. அப்பத்திரிகை நீடூழிவாழ்க.

இந்து சாதனம், இலங்கை

(29-11-1928.)

மருத்துவன்.

" இது சென்னையிலிருந்து மாதந்தோறும் வெளியாகும் சஞ்சிகை வடிவமான ஓர் பத்திரிகை. இதன் முதல் இதழ்வரப்பெற்றோம். இதன் கண் ஒவ்வொரு குடும்பமும் அநுசரிக்கவேண்டிய நோயணுகாவிதிகள், பெண்கள் கருப்பவதிகளாயிருக்கும்,காலங்களில் நடந்துகொள்ளவேண்டிய முறைகள், குழந்தைகளை நோயணுகா வண்ணம் வளர்க்கும் தன்மை, ஆபத்துக்காலங்களில் செய்யவேண்டிய உதவிகள், பதார்த்தகுணம் முதலிய அரிய விஷயங்கள் வெளியிடப்படுகின்றன. மருத்துவ விஷயமாக இது காறும் ஒருபத்திரிகையும் வெளிவந்ததில்லை. அதனையுணர்ந்து இதன் ஆசிரியர் அக்குறையை நிவர்த்திசெய்துள்ளார். ஒவ்வொரு குடும்பஸ்திரீயும் இப்பத்திரிகையை ஆதரித்து வருதல் அவர்களுக்கே நன்மையாகும்."

தென் இந்திய மருத்துவர் சங்கம்.

...ம் கூட்டப்பட்டது. மருத்துவர்களின் முன்னேற்றத்தைக்குப்
...பண்டிட் ஆனந்தம் அவர்களால் ஒரு உபந்நியாசம் நடைபெற்

...-4-24-ல் பண்டிட் ஆனந்தம் அவர்களும் அவர் கூட்டாளி
...ளும் நுவெரெலியாவை விட்டு கம்பளை வந்து சேர்ந்தார்கள்.
...அங்கே சுப்பிரமணிய பண்டிதரவர்களாலும் மற்ற மருத்துவர்களா
லும் வரவேற்கப்பட்டு ஒரு கூட்டம் நடைபெற்றது.

9-4-24-ல் மறுபடியும் தன் துணைவர்களுடன் பண்டிட் ஆனந்தம் அவர்கள் கொளும்புக்குத திரும்பி அன்று V. கணபதி பிள்ளையவர்கள் வீட்டில் சைவமத சம்பந்தமாக ஒரு உபந்நியாஸம் நடைபெற்றது. பின் தேதிகளில் பல இடங்களில் அநேக பொதுக் கூட்டங்களுக்குப் பிறகு 13-4-24ல் மறுபடியும் கணபதி பிள்ளையவர்களின் வீட்டில் சலூன் வைத்திருக்கும் மருத்துவ குலத்தவர்களில் பாலியர்களாய் இருப்பவர்களின் படிப்பை விருத்திசெய்ய இரவு 7 மணிக்கே கடைகளை மூடும் விஷயமாக கூட்டங் கூட்டித் தீர்மானிக்கப்பட்டது.

பண்டிதர் ஆனந்தம் அவர்கட்கு நேர்ந்த பெரிய ஆபத்து.

25-5-1924-ல் தஞ்சை ஜில்லாவில் கும்பகோணத்திற்கு அருகி லுள்ள திருவிடைமருதூர் என்னும் கிராமம் ஒரு பெரிய சி... மாகும். இங்கே திருவாவடுதுறை மடாதிபதி நிலையாக இ... மடமுமுண்டு. இவ்வூரிலுள்ள மருத்துவர்களை, அவ்வூரிலுள்ள ... சாதியார் என்போரும், சில துஷ்டர்களும் மிகக் கேவலமா... கொடுமையாகவும், நெடுநாள் நடத்திவந்தார்கள். அம்மருத்துவர் ...னச் சகியாமல் தங்கள் சுயமரியாதைக்காகத் தங்களுக்குள் ஒரு ... கத்தை நிறுவி ஒற்றுமையாக சில ஏற்பாடு செய்துகொண்டார்... அதனைக்கண்ட அவ்வூர் மேல் சாதியார் என்போர் பொ... கொண்டு, அம்மருத்துவர்களுக்குப் பதிலாக வேறு ஊர்களிலிருந்து சில மருத்துவர்களை வரவழைத்துத் தங்களுக்குவேண்டிய அலுவல் களைப் பார்த்துக்கொண்டு, உள்ளூர் மருத்துவர்களைத் துன்புறுத்தி தங்கள் இஷ்டப்படி நடத்திக் கொள்ளுவதற்காக, அவர்களு... கடைகளில் உணவுப் பொருள்களும், மற்ற சாமான்களும் ... மல் தடுத்து, ஆறு, குளம், கிணறுகளில் குடிக்கத் தண்ணீ... விடாமலும், அவர்களுடைய கால் நடைகளுக்குப் பு...

நிகழ்ச்சிக் குறிப்புகள்.

அவர்கள் சொல்வதுபோல் மருத்துவர்கள் ஒற்றுமையாகச் சே
காலத்துக்குத்தக்க மாதிரி கல்வியைக் கற்று வைத்தியத் தெ
பலர் திரும்ப வேண்டுமெனவும், கல்வியின் பெருமையைப் ப
மருத்துவகுலச் சிறுவர் சிறுமிகளைக் கட்டாயம் பாடசா
அனுப்ப வேண்டுமெனவும் பேசினர். திருநெல்வேலி ஜில்லாவி
மருத்துவ குலத்தவர்களுக்கு உயர்ந்த சாதியாரென்போர் செய்யு
கொடுமைகளை நீக்க சென்னை அரசாங்கத்திற்கும் இலங்கை அ
சாங்கத்திற்கும் தீர்மானங்கள் செய்தனுப்பப் பட்டது. அவைத்
தலைவர் ஐ. எக்ஸ். பெரைரா அவர்கள் உபந்நியாசகர்களின் விஷயங்
களை ஆதரித்து மருத்துவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச்
செய்வதாகக் கூறினர், பிறகு V. கணபதி அவர்கள் எல்லாருக்கும்
வந்தனங் கூறி முதல் நாள் கூட்டம் கலைந்தது.

1-4-24-ல் கொழும்பில் இரண்டாம் நாள் கொழும்பு டவுன் கிரேன்ட்பாஸ் ரோட் 188-ஆம் எண் கட்டிடத்தில் டாக்டர். எம். பி. சங்கர சுப்புபிள்ளையவர்கள் அவைத் தலைமையில் ஒரு கூட்டம் கூடியபொழுது பண்டிட். எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளையவர்கள் தமிழ் மருத்துவத்தைப பற்றியும் ஒற்றுமையைப் பற்றியும், மருத்துவர் களின் கடைமைகளைக் குறித்துப் விளக்கமுறப் பேசினர். பின்னர் ...ம் நாள் இலங்கை மருத்துவர் சங்கத்துக்கு வேண்டிய நோக் ...ும் சட்ட திட்டங்களும் தயாரிக்கப்பட்டன.

...-4-24-ல் கண்டி திருக்கோணமலை வீதி 337 ஆம் எண் கட்டி ...ல் கண்டி மருத்துவகுல சங்கத்தின் சார்பாக மருத்துவர்களின் ...துக் கூட்டமொன்று கூடியபொழுது பண்டிட். எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளையவர்கள் தமிழ் சித்தவைத்தியத்தின் உயர்வைப் பற்றியும் மருத்துவர்கள் முற்காலத்தில் அடைந்திருந்த செல்வாக் கைப் பற்றியும் சுமார் இரண்டு மணி நேரம் பேசினர்.

4-4-24-ல் கண்டியிலிருந்து பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் ...ிள்ளையவர்களும் அவருடைய சகாக்களுமாக நுவெரலியாவுக்குச் ...ன்றார்கள். அங்குள்ள மருத்துவர்கள் பெருங் கூட்டமாக வந்து ...ளை வரவேற்று அழைத்துச் செல்ல அவர்களுக்கென்று ...ல்யா அவர்களால் தயார் செய்யப்பட்டிருந்த பங்களாவில் ...கள். மறுநாள் மாலை 5 மணிக்கு மருத்துவர்களால் ஒரு

மருத்துவர் முதலிய தாழ்ந்த வகுப்பார்களை எல்லாம் கோயிலுக்குள் செல்லும் உரிமையைக் கொடுத்து சைவத்தை வளருங்கள், அதுதான் சைவ சமய பரிபாலனமாகுமன்றி கோயிலைக்கட்டி திருவிழா நடத்துவதால் மட்டும் சமயம் வளராது என்றுகூறி விடைபெற்று வந்து விட்டார்.

வந்தவுடன் ஊண் உறக்கத்தையும் விட்டு திருச்சியிலுள்ள மருத்துவர்களை யெல்லாம் அழைத்து கூட்டங்கூட்டி நடந்த விஷயங்களை எல்லாங்கூறி வைத்தியத்தொழில் செய்கிற மருத்துவர்களும், சவுளத் தொழில் செய்கிற மருத்துவர்களும், மருத்துவச்சிகளும் திருசசி மலைக்கோட்டை கோயிலுக்குள் மருத்துவ குலத்தினரை சுவாமி தெரிசனத்துக்கு விடுகிறவரையில் கோயில் குருக்கள்மாருக்கும், கோயிலிலுள்ள வேலைக்காரர்களுக்கும் உங்கள் தொழிலைச் செய்கிறதில்லை என்று ஒற்றுமையாக உறுதி செய்துக்கொள்ளுங்கள் என்று கண்ணீர் வடித்துக் கேட்டுக்கொண்டார். திருச்சி தி. மு. பெரியண்ண பண்டிதர் அவர்களும் திருச்சியிலுள்ள மருத்துவர்களை கோயிலுக்குள் செல்கிறவரையிலாவது பண்டிட் ஆனந்தம் அவர்கள் சொல்லுகிறபடி ஒற்றுமையாக இருங்கள் என்று எவ்வளவோ கேட்டுக் கொண்டார். திருச்சி மருத்துவர்கட்கு உணர்ச்சியும் ஒற்றுமையு மில்லாமல் கோயில் பிரவேசம் திருச்சி மருத்துவர்களுக்கு இதுகாறும் இல்லாமலிருக்கிறது வருந்தத்தக்கதாகும்.

2-10-23-ல் மதுரை விக்டோரியா எட்வர்ட் ஆலில் உத்தமபாளையம் எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அவைத் தலைமையில் பண்டிட் - ஆனந்தம் அவர்கள் மதுரையிலுள்ள மருத்துவர்களை யெல்லாம் ஒரு கூட்டம் கூட்டினார்கள். அப்பொழுது தென் இந்திய மருத்துவர் சங்கத்தலைவர் பண்டிட்-S. S. ஆனந்தம் அவர்களுக்கு ஆண்டியப்ப பண்டிதரால் மதுரை மருத்துவர்கள் நல்வரவு [illegible]ந்திரம்படித்துக் கொடுத்தார்கள். பண்டிட் ஆனந்தம் அவர்கள் [illegible]த்துவர்களைப் பற்றியும், தமிழ் மருத்துவத்தைப் பற்றியும் மூன்று [illegible]நரத்துக்குமேல் உபந்நியாசம் புரிந்தார்கள். பின்னர் எம். டி. [illegible]ிய முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு [illegible]கம் ஸ்தாபிக்கப்பட்டது.

பின்னர், சென்னையில் அக்டோபர்மீ 20, 21 ங் தேதிகளில் நடைபெறவேண்டிய தென் இந்திய மருத்துவர் மகா நாட்டிற்கு வரவேற்புக்கழக உறுப்பினர்களும் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

திருநெல்வேலி ஜில்லா மருத்துவ வகுப்பினரின் சீர்திருத்தம்.

5-10-23 ல் திருநெல்வேலி டவுன் கணபதி விலாச நாடக சாலையில், திவான் பகதூர் சர். T. N. சிவஞானம் பிள்ளை (Development minister) அவர்கள் தலைமையில் பண்டிட் - எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் திருநெல்வேலி ஜில்லா மருத்துவர்களின் பொதுக் கூட்டம் ஒன்று கூட்டினார்கள். அப்பெருங் கூட்டத்திற்கு அச் சில்லாவிலுள்ள ஆயிரக்கணக்கான மருத்துவர்களும், மற்ற வகுப்பினர்களும் வந்திருந்தனர். புதூர் ராயர், வக்கீல் சேதுபிள்ளை, திரவியம் பிள்ளை, சுந்திரமூர்த்தி ஓதுவார், திருவரங்கம் பிள்ளை, டாக்டர்-சங்கரன் பிள்ளை முதலிய பலரும் இன்னும் பல கனவான்களும் வந்திருந்தனர். திருநெல்வேலி ஜில்லா மருத்துவர்களின் சார்பில் தி. முத்துசாமி பண்டிதரால் பண்டிட் ஆனந்தம் அவர்கட்கு நல்வரவு பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. திருநெல்வேலி ஜில்லாவில் உயர் சாதியார் என்போர், இறந்ததின் பின்னும் தங்கள் பிணங்களுக் கருகில் தீண்டப்படாதார் என்னும் வகுப்பைச் சார்ந்த வெட்டியார் வந்து தகனம் செய்வது தமது சாதிக்கு மரியாதைக் குறைவென்று கருதி மருத்துவரில் சவுளத்தொழில் செய்வோர் பலரை மயானத்தில் ஈமக்கடன் முதலியவைகள் செய்யும்படி சில வருடங்களாகப் பழக்கிக் கொண்டு வந்தார்கள். இக்குலத்தினர்களுக்கு சிறிதும் பொருந்தாத இழிவான இம்மயானத்தொழிலை இவர்கள் செய்யத் தலைப்பட்டது முதல் அச்சில்லாவில் சவுளத்தொழில் செய்யும் மருத்துவ குலத்தினர் பொது ஜனங்களால் மிகக் கேவலப்படுத்தப் பட்டார்கள். இதனை அறிந்த பண்டிட்-ஆனந்தம் அவர்கள் அவர்களின் பரிதாபமான நிலையையும், உயர் சாதியார் என்போர்களின் இரக்கமற்ற செய்கையைய் கண்டு மனம் வருந்தி திருநெல்வேலி ஜில்லாவைத் தவிர மற்ற ஊர்களிலும் பிண தகன வேலையை சவுளத்தொழில் செய்ப செய்யவில்லை யென்றும், உயிருடனிருக்கும் மக்களை புனிதப் மங்கலகரமான தொழிலைச்செய்து மரியாதையாக வாழ்ந்

மயானத்தில் அமங்கலமான காரியத்தை செய்யச்சொல்லி சமூகத்த அவர்களை தீண்டப்படாதவர்களைப் போல நடத்திவருவது உ சாதியார் என்பவர்களுக்கு பெருமை அல்லவென பலமாகக் க டித்து பசுமரத்தாணியைப்போல் வந்திருந்தோர்களுக்கு மனதில் பதியும்படி மிக உருக்கமாகப் பேசினர். அந்த நிமிஷ முதல் அம் மருத்துவர்களுக்கு சுயமரியாதை ஏற்பட்டு மயானம் சென்று சவ தகனஞ் செய்வதை நிறுத்திவிட்டனர். அக்கூட்டத்தில் பண்டிட் ஆனந்தம் அவர்கள் மருத்துவர்களின் முற்கால நிலையைப்பற்றியும் தமிழ் மருத்துவத்தைப்பற்றியும் நெடுநேரம் உபந்நியாசம் செய்தார்கள். பின்னர் டாக்டர். சங்கரன் பிள்ளை, புதூர் ராயர், T. N. சிவஞானம் பிள்ளை முதலியவர்கள் தமிழ் மருத்துவத்தைப் பற்றியும் மருத்துவர்களைப் பற்றியும் பேசினர்கள். தென் இந்திய மருத்துவர் மகாநாட்டிற்கு வரவேற்புக்கழக உறுப்பினர்களும் பிரதிநிதிகளும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

9-10-23ல் கும்பகோணம் டவுன்ஹாலில் முனிசிபல் சேர்மன் M. C. N. முத்துக்குமார செட்டியார் அவர்களின் அவைத் தலைமையில் வக்கீல் M. C. கிருஷ்ணசாமி ஐயர், வக்கீல் R. கந்தசாமி மூப் திரு. T. S. இராமபத்திர உடையார், பண்டிட் K. S. பொன் லம் முதலியவர்களின் ஆதரவால் மருத்துவர்களும், பொது ரும் ஒரு கூட்டம் கூடினர்கள். பண்டிட்-ஆனந்தம் அவர்கள் சமயமும், சுகாதாரமுமென்பதைப் பற்றியும் பண்டைக்கால த்துவரைப்பற்றியும் நீண்டதோர் உபந்நியாசம் செய்தார்கள்.

7-12-23ல் சென்னையில் சங்கத்தின் நிலையத்தில் சென்னை மருத்துவர்களின் பொதுக் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பண்டிட்-எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் "தென் இந்திய மருத்துவர் முதல் மகாநாட்டிற்குப் பின்" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு மருத்துவர் முன்னேற்றத்திற்கான அரிய விஷயங்களை டுத்துரைத்தார். பின்னர், மருத்துவர் மகா நாட்டின் கணக்குகளை ளியிட வேண்டியதைப்பற்றி சில தீர்மானஞ் செய்யப்பட்டது.

6-12-23ல் சென்னை சட்டசபையில் மருத்துவக்குலப் பிரதி ஒபலேசப்பா என்பவரை நாமினேஷன் செய்ததற்காக ந்திய மருத்துவ சங்கத்தார் அவருக்கு ஒரு மகிழ்ச்சி

ருந்து நடத்தினார்கள். அது காலை மருத்துவ சிரோமணி வி. சக்கரவர்த்தி பண்டிதர் அவர்கள் அவைத் தலைமையில், பண்டிட்-ஆனந்தம் அவர்கள் தற்கால மருத்துவர்களின் நிலைமையைப் பற்றியும், முற்கால மருத்துவர்களின் பெருமையைப் பற்றியும், சட்டசபையின் மூலமாக ஒபலேசப்பா அவர்கள் மருத்துவர்களின் முன்னேற்றத்திற்காக செய்யவேண்டிய அலுவல்களைப் பற்றியும் ஒரு விரிவுரை செய்தார்கள்.

26-3-24ல் பண்டிட் எஸ்.எஸ். ஆனந்தம், திருநெல்வேலி ஜில்லா சங்கத்தலைவர்கள் M. குலசேகரம் பண்டிதர், டாக்டர் M. P. சங்கர சுப்புப் பிள்ளை, காரியதரிசிகள் தி. முத்துசாமி பண்டிதர், எஸ். முத்துசாமி பண்டிதர், முதலியவர்கள் கொழும்புக்குச் சென்றார்கள். கொழும்பு ரயில்வே ஸ்டேஷனில் கொழும்பிலுள்ள மருத்துவ குலத்தினரில் பலரும்,மற்றவகுப்பினர்களும் பெருங்கூட்டமாக வந்திருந்து மிகப் பெருமையாக வரவேற்றார்கள். கொழும்பு டவுன் கிராண்ட்பாஸ் வீதியில் இவர்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருந்த பெரிய கட்டிடத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். V. கணபதி பிள்ளை அவர்களால் பண்டிட்-ஆனந்தம் அவர்கட்கு நல்வரவு பத்திரம் படிக்கப்பட்டது. அன்று மாலை கொழும்பில் பெரிய வியாபாரிகளுக்கு சட்டசபை அங்கத்தினருமாகிய ஐ. எக்ஸ். பெரைரா அவர்கள் அவைத் தலைமையில் பண்டிட்-ஆனந்தம் அவர்கள் மருத்துவர் வன்று நாட்டில் மூவேந்தர் காலத்தில் ஐம்பெருங் குழுவிலிருந்து பெருந்தில் அடைந்ததையும், மருத்துவன் தாமோதரனார், மலையனார் போன்றவர்கள் சங்கப் புலவர்களா யிருந்ததைப்பற்றியும், சிறுத்தொண்டர், மாணிக்க வாசகர், இராமதாஸ் போன்ற பெரியோர்களைப் பற்றியும், இவர்கட்கு மருத்துவர், பண்டிதர், பரிகாரி, வைத்தியர், ஆயுள் வேதியர், நாவிதர், அம்பட்டர் முதலிய பெயர்கள் வந்ததற்குக் காரணமும் அப்பெயர்களின் பெருமையையும் விளக்கமாக எடுத்துக் கூறினர். பின்னர் அட்வகேட். அருளானந்தம் M. A. அவர்கள் பண்டிட் ஆனந்தம் அவர்கள் செய்துவரும் தொண்டைப்பற்றி அவர்கள் பேசிய விஷயத்தைப்பற்றியும் மிகப் புகழ்ந்து, மரு பழைய மரியாதையைப் பெற வேண்டுமாயின் தென் இந்திய வர் சங்கம் நிறுவியவரும், சங்கத் தலைவருமாகிய பண்டிட்

Regd. No. M. 2418

மருத்துவன் பத்திரிகை சந்தாதாரர் களுக்குள்ள பெரிய லாபம்.

பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம்

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பாரம்) 'பாலர்பரிபாலனம் பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப் பல அரிய பெரிய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் சுமார் முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்த்து ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இது வீணான வேடிக்கைக் கதைகளைப்போன்றதும், நாவலகளைப்போன்றதுமன்று, இல்லறத்திலிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் பெருநிதியைப் போனறது, இதில காணும் ஒவ்வொரு சொலலும் அமிர்தம்போன்றது. வீட்டிலுள்ள பெண் பாலருக்கு இது மிக முக்கியமாதலால் பெண்கள் படித்துணரும் படியான சாதாரண எளிய நடையில் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும் முறைகளும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம் செய்துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன, இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் படிப்பதால், சிசு தாயின்கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அருகிலிருந்து பரிகாரஞ்செய்ய மருத்துவச்சி தேடவேண்டியதில்லை. வீட்டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளலாம். தாய், கருஉயிர்த்ததுமுதல், குழந்தைக்குப் பன்னிரண்டு வயது ஆகும் வரையில் குழந்தைகளைச் சுகவழியில் அழகு பெற வளர்க்கவும், நோய்கள் வந்தால் மருத்துவர் (வைத்தியர்) உதவி இல்லாமல் தாங்களே பரிகாரஞ்செய்துகொள்ளவும் இப்புத்தகம் மிகவும் முக்கியமானது. இப்புத்தகம் மருத்துவர், மருத்துவச்சிகளுக்கும், மருத்துவ மாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோன்றாத்துணையாக உள்ளது.

மானேஜர்:— **மருத்துவன் காரியாலயம்,**

221, தங்கசாலை வீதி,

சென்னை.

Printed by The Sree Subramaniya Vilasam Press, NO 220. Mint Street. MADRAS
& Published by Pandit S. S. Anandam, 221, Mint Street, Madras.

வியாசம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை.

வியாசம் எழுதுகிறவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். இராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை, முதலியவைகளும் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. பிரசுரிக்காத வியாசங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா

வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

நமது ஆபீசிலிருந்து பதில் வர விரும்புவோர் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடிதம் எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

விளம்பர விகிதம்

முழுப்பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	ரூ. 8—0—0
அரைப் பக்கத்திற்கு	,,	ரூ. 5—0—0
கால பக்கத்திற்கு	,,	ரூ. 3—0—0

மானேஜர், மருத்துவன் ஆபீஸ்

221, தங்கசாலைத்தெரு, சென்னை.

கடிதம் எழுதுவோர் கவனிக்கவேண்டியது

நமது தமிழ் வைத்தியசாலைக்கு வழக்கமாக ஆர்டர் செய்கிறவர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் முழுவிலாசத்தையும் தெளிவாக எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஆர்டர் செய்தவர்களின் விலாசம் தெளிவாகவும் விரைமாகவும் இல்லாததினால் சில ஆர்டர்களுக்கு மருந்தனுப்பமுடியாமல் போனதற்கு மிகவும் வருந்துகிறோம்.

மானேஜர்:—

தமிழ் வைத்தியசாலை,

221 தங்கசாலைத்தெரு, சென்னை.

படைமருந்து

படை என்னும் இந்நோய் உடம்பில் இடுப்பு தொடை முதலிய இடங்களில் தோலின்மேல் படர்ந்து தடித்துத் தினவை யுண்டு பண்ணும், தோலின் மேனியைக் கெடுத்து பார்ப்பதற்கு வெறுப்பை உண்டாக்கும். இரவில் படுத்துறங்கப் போகும்போது படையுள்ள இடத்தைச் சிறுகத்தியினால் மெதுவாய்ச் சுரண்டி அதன்மேல் படை மருந்தைத் தடவித் தேய்த்துத் துணிபடாமல் வைத்திருந்து காலையில் இலுப்பைப் பிண்ணாக்கு அல்லது (சவர்க்காரம்) சோப்பினால் கழுவிக் குளிக்கவேண்டும். தொடர்ந்து நாலைந்து நாள் தடவினால் எப்போதும் வராது.

இப்படை மருந்து தடவுவதனால் எரிச்சல், நாற்றம், துணியில் கறைபிடித்தல் முதலிய கெடுதிகள் ஏற்படா.

படை மருந்து விலை அணா 0 8 0

தமிழ் வைத்தியசாலை 221, தங்கசாலை வீதி, சென்னை.

சித்தர் களஞ்சியம்

இஃதோர் அரிய நூல் சரியை, கிரியை, யோகம், ஞானம், வைத்தியம், சோதிடராசி, அட்டமாசித்து முதலியவைகளின் சாரம் அடங்கியுள்ளது. ஆண், பெண், இருபாலரும் பிறந்தது முதல் முடிவில் பிறப்பற்றுச் சாயுச்சிய பதவியை அடைய இந்நூல் ஒருசிறந்த துணையாகும்.

162–பக்கங் கொண்டது விலை ரூபா 1 8 0
காலிகோ பயிண்டு விலை ரூபா 2 0 0

வைத்திய பூபதி-பண்டிட் K. S. பொன்னம்பலம்,
பரஞ்சோதி வைத்திய சாலை,
கும்ப கோணம்.

முயல் இரத்த சம்பந்தமான கேச இரக்ஷணி தைலம்.

முயல் இரத்தம், ஆனைத்தந்தம், உயர்ந்த மூலிகை, பரிமள வாசனை திரவியங்களையும் சேர்த்து தயார் செய்யப்பட்ட இத்தைலத்தைத் தடவிவர மயிர் உதிர்தல், வெளுத்தல் செம்பட்டை முதலியவைகள் நிவர்த்தியாகி கூந்தலை கறுக்கச்செய்து ஆலம் விழுதுபோல் வளரச்செய்யும், வி. பி. சார்ஜ் வேறு.

புட்டி 1-க்கு விலை ரூபா 1 0 0
புட்டி 3-க்கு விலை ரூபா 2 10 0

எம். சி. நடேச வைத்தியர்,
சுதேச ஔஷத சாலை,
மேலவீதி, கும்பகோணம்

மூலநோய் மருந்து

இது ஒன்பது வகை மூலங்களையும், சீத இரத்தபேதி, அதிசார பேதி, கிராணிக் கழிச்சல்களையும் மிக விரைவில் கண்டித்து குடலில் ஏற்பட்டிருக்கும் புண்களை ஆற்றக்கூடியது. மூலரோகங்களை அறுக்காமல் (ஆப்பரேஷன் இல்லாமல்) நீக்கக்கூடியது.

இம்மருந்து இரண்டு வேளையில் குணம்தரும் இதனைச் சுண்டைக் காயளவு தேனில் கலந்து காலை மாலை சாப்பிடவேண்டும். சீத இரத்த பேதி, வயிற்றுளைவு நின்றவுடன் மருந்தை நிறுத்த வேண்டும். மலம் செம்மையாகக் கழியாமல் வெறும் சீதம், இரத்தம் மட்டும் போனால் கடுக்காய்த்தோல் கிழாயத்தில் ஆமணக்கெண்ணெய்கலந்து அருந்திபழைய மலத்தை முன்னர்க் கழித்துக்கொண்டு, பின்னர் மூல நோய் மருந்தை அருந்த வேண்டும்.

பத்தியம்:— பால்சேர்ந்த கஞ்சிகள் தான் சாப்பிடவேண்டும். உப்பு மிளகாய், புளி முதலிய காரமுள்ள குழம்பு கரி முதலியவைகளும் சோறும் ஆகாது.

மூலநோய் மருந்து புட்டி 1-க்கு விலை ரூபா 1 0 0

ஆனந்த பாம்

வலிகளுக்கு மேலே தடவும் மருந்து

இத்தைலம், தலைநோய், நெஞ்சுநோய், நெஞ்சடைப்பு, நெஞ்சிற் கபம், சுவாசநோய், கீல்வாயு, பக்கவாயு, அண்டவாயு,பல்நோய், முதுகு, இடுப்பு, கைகால் முதலியவைகளில் பிடிப்பு, சீதளம், குரல்வளைநோய், தேள், பூரான், நண்டு வாய்க்காலி முதலான விஷப்பூச்சிக்கடி இவைகளுக்கு மேலே தடவித் தேய்க்க மிக விரைவில் நோயை நீக்கி மகிழ்ச்சியைத் தரும் சஞ்சீவி போன்றது.

நோய் மிகுதியாயுள்ள விடத்தில், தவிடு அல்லது மணலை வறுத்து ஒத்துக்கொடுத்து, பின்னர் இம்மருந்தைத் தடவித் தேய்த்துக் கம்பளி அல்லது முறட்டுத் துணியினால் மூடிக் கட்டிவைக்கவேண்டும். நோய்க்குத் தக்கபடி அடுத்தடுத்து இதனைச் செய்யலாம். பல் ஈறு வீக்கம், பல்சொத்தை முதலிய பல்வலிக்கு இம்மருந்தைப் பஞ்சில் தடவி நோயுள்ளவிடத்தில் வைத்து உமிழ் நீரை விழுங்காமல் கொஞ்சநேரம் வைத்திருந்து எடுத்து விடலாம்.

(பல்லில் நோயுள்ளவர்களுக்கு நமது பற்பொடி மிக நன்மை செய்யும்)

ஆனந்தபாம் குப்பி விலை அணா 0 12 0

மலத்தில் புழுக்கள்

அவைகள் செய்யும் குணங்கள்.

மலத்திற் காணப்படும் புழுக்களை, சிறிய பொருள்களை நூறு அல்லது ஆயிரமடங்கு பெரிதாக்கிக் காட்டும் பெருக்கக் கண்ணடி (பூதக்கண்ணடி) முதலிய கருவிகளினால் பார்க்கக்கூடியவைகளென்றும், யாதொரு துணைக்கருவியுமின்றி வெறுங்கண்ணால் பார்க்கக்கூடியவைகளென்றும் இரண்டுவகையாகப் பிரிக்கலாம்.

ஒரு உதவியுமின்றி மலத்தில் சாதாரணமாகக் காணப்படும் புழு அல்லது கிருமியை இரைப்பூச்சியென்றும், நாகப்பூச்சியென்றும், கிருமியென்றுஞ் சொல்வார்கள். இப்புழுவானது நாகப்பூச்சி, பூநாகம், நாங்கூழ் என்று சொல்லும் மண் புழுவைப்போல் பருத்து நீண்டு ஆறு ஏழு அங்குல நீளமுள்ளதா யிருக்கும். தவிட்டுநிறமுடையதாய் மலக்குடலையே தனக்கு இருப்பிடமாகக்கொள்வது. குடலினுள் கீழும் மேலும் ஊர்ந்துதிரியும். இரண்டுமுதல் முப்பது நாற்பதுவரை குடலில் காணப்படும். இப்புழுவின் முட்டைகளானது சூரிய வெப்பத்தைக் கொஞ்சநாள் தாங்கவல்லது; அசுத்தமான இடங்களில் கிடக்கிற இப்புழுக்களின் முட்டையானது, அவ்விடங்களில் மண்ணளைந்து விளையாடுகிற சிறுவர்கள் கையில் ஒட்டிப் பின்னால் ஆகாரத்தின் வழியாய் குடலில் சென்று விருத்தியாய்விடும். ஆனால் இப்புழுவானது பயங்கரமான கெட்ட குணங்களைச் செய்வதில்லை. ஒருவன் குடலில் இப்புழுக்கள் இருபது முப்பது இருப்பினும் அதிக துன்பந் தருவதில்லை.

இப்புழு செய்யுங் குணங்கள் பலவுள. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களிடத்தே இவ்விரைப்பூச்சிகள் மிகுதியாகக் காணப்படும். ஏனெனில் சிறுவர்கள் அசுத்தமான இடங்களில் மண்ணளைந்து விளையாடுவது வழக்கம். பத்து அல்லது பன்னிரெண்டு வயதிற்கு மேற்பட்டவர்களிடம் பெரும்பாலும் காணப்படா. அதிகமாக இரைப்பூச்சிகள் மலக்குடலில் பெருகிவிட்டால் அவைகள் தங்கள் நிலையினின்றும் பிரிந்து கீழ்நோக்கி மலத்தோடும், மேல்நோக்கி வாந்தியோடும் வருகின்றன. இடையிடையே மலத்தோடு ஒன்றிரண்டாக விழும். சில வேளைகளில் வாந்தி பண்ணும்பொழுது வாந்தியோடும் வந்துவிழும். சிலசமயங்களில் இப்புழு சுருட்டிக்கொண்டு தொண்டைக்குழியில் கட்டைபோல்வந்து தட்டி நின்றுவிடும். நாசித்துவாரங்களிலும் புகுந்துவிடும். இப்புழுக்கள் ஒருவிதமான விஷ

நீரைக் கக்குவதால் வயிற்றில் இடையிடையே நோயுண்டாகும். வாந்தியும் ஏற்படும். இக்கிருமியால் ஏற்படும் வயிற்றுவலி விட்டுவிட்டு வரக்கூடியது. நறுக்குவலியாயிருக்கும். மலங்கழிந்தபோதிலும் நோய் விடாது. சிலவேளைகளில் புழுக்களெல்லாம் ஒன்ருய்ப் பந்துபோல் திரண்டு மலக்குழாயை அடைத்து ஆபத்தை விளைவித்துவிடுகின்றன. சில பிள்ளைகளுக்கு இக்கிருமி விஷத்தால் சிறிது காய்ச்சல் மாலைக் காலத்தில் ஏற்படுவதுண்டு. ஆகவே இந்த இரைப்பூச்சியின் முக்கிய செய்குணம் வாந்தி, வயிற்றுவலி, உணவில் மந்தவிருப்பம், சிலருக்குச் சுரம்முதலியவைகளேயாம். முக்கியமாய் இக்கிருமி சிறுவர்களிடத்தே விசேஷமாய்க் காணப்படும் வயிற்றுவலி என்று சிறுவர்கள் சொல்வார்களேயானல் முதலாவது இரைப்பூச்சிக்குத்தான் சிகிச்சைசெய்ய வேண்டும்.

இரண்டாவது

"கொக்கிப் புழு" இது முக்கியமான சாதாரணப் பூச்சி இப்புழுவானது அரை அங்குலம் நீளமுள்ளதாய் வெண்மை நிறமுடையதாயிருக்கும். அதன் வாயினிடத்தே கொக்கிபோன்ற கருவி ரோமம் போல் நீண்டிருக்கும். இக்கொக்கிகளின் உதவியால் இரைப்பையின்சுவரைப்பற்றிப்பிடித்து உதிரத்தைக் குடிக்கும். ஒவ்வொரு புழுவுக்கும் அத்தகைய கொக்கி நான்கு இருக்கின்றன. இப்புழுக்கள் அதிகமாகப் பெருகிவிட்டால் மலத்தோடும் காணப்படும். அசுத்தமான தண்ணீரைப் பருகுவதனல் இக்கிருமி ஏற்படக்கூடியது. இக்கிருமிகளின் முட்டையானது தண்ணீரோடு சேர்ந்து குடலுள்ளுக்குச் சென்று பெருகிவிடுகிறது.

இப்புழுவானது செய்கிற குணங்கள் அநேகம். இப்புழுவானது குடலில் விருத்தியாகவே இரத்தத்தைக் குடிக்க ஆரம்பிக்கின்றது. உடம்பில் இரத்தம் குறையத் தொடங்குகிறது. சாம்பல் மண் முதலியவைகளில் நோயாளனுக்கு விருப்பமுண்டாகிறது. மலமானது பல நிறமாகவும் தண்ணீராகவும் போகும். நாக்கு வெளுத்துவிடும். நகக்கண்கள், கண்ணிமைகளின் உட்பக்கம், உடல் முதலியவைகள் வெளுத்துவிடுகின்றன. முகவேற்றுமைப்பட்டுவிடும். வயிறுபெருத்து மகோதரம்போல் தோன்றும். பித்தசோகையென்றும் இதனைச் சொல்லுவார்கள். பெண்களுக்கு மாதவிடாய் நின்றுவிடும். கண் மாசுபடர்ந்துவிடும். உடம்பு மாறுபட்டுத் தோன்றும். காலத்தே அறிந்து தக்க மருந்து கொடுக்காவிடில் உயிருக்குத் தீங்கு விளைவிக்கும். நோய்

முதிர்ந்துவிட்டால் மிகவும் பயப்படத்தக்கது. அநேக சிறுவர்கள் இந்நோய்வாய்ப்பட்டு உயிர் விடுகின்றார்கள். இது ஆண் பெண் இரு பாலர்களுக்கும் எவ்வயதினும் வரக்கூடியது. பரிகாரஞ் செய்யாமல் தானே நீங்கும் சில நோய்களைப்போல் இந்நோய்ப்போவதில்லை. இவ் வியாதி நெடுநாள் நீடித்திருப்பது. அடிக்கடி ஏற்படும் மலேரியா என்னும் காய்ச்சலாலும், நீடித்த இரத்தபேதியாலும் ஏற்படுகிற இரத்தக் குறைவு நோயை இந்நோயுடன் கலந்துவிடக் கூடாது. இக்கொக்கிப் புழுவினால் ஏற்படும் தீயகுறிகளாவன, நாக்கு, கண், நகக்கண், உடம்பு ஆகிய இவைகளின் வெளுத்தநிறமும், சாம்பல், மண், செங்கற்றுண்டு முதலியவைகளில் விருப்பமும், மலம் கருத்தும் வெளுத்தும் பலநிற மாகப் போதலும், கை காலில் வீக்கமும் ஆகிய இக்குணங்கள் இப் பிணியைத்தெரிவிக்கும்.

மூன்றுவது

நெல்வால்பூச்சி அல்லது தானப்பூச்சி

இப்பூச்சியானது நெல்லளவு நீளமுள்ளதாய் வெண்மை நிறமாய் நூற்றுக்கணக்காய் மூலத்தைப்பற்றி மூன்று அல்லது நான்கு அங்குலம்வரை ஊடாடித் திரியும். இப்பூச்சிகளுக்கு இருப்பிடம் மூலத்தில் மூன்று அங்குலம்வரையுமே. அதிகமாய் விருத்தியாய்விட்டால் மலத்தோடு வெளிவரும். மலத்தின்மீது மொய்த்து ஊடித்திரியக் காணலாம்.

இப்பூச்சி குற்றமற்றதெனினும் பலவகை வருத்தத்தைச் செய்ய வல்லது. மலவாயிலைச்சுற்றி நமைச்சல் அல்லது சொரி ஏற்படும். மூலத்தில் குடைச்சலை உண்டுபண்ணிவிடும். நெடுநாள் மலச்சிக்கல் உடையார்க்கு இப்பூச்சிகளால் பக்க பவுத்திரம் என்னும் நோய் உண்டாகும். பவுத்திர துளைகளிலிருந்துகொண்டு சீழ், நீர் முதலியவை களை அதிகரித்துக்கொண்டிருக்கும். இராக்காலங்களில் தங்கள் நிலை யினின்றும் வெளியாகிப் பக்கங்களில் ஊர்ந்து திரியும். ஊர்ந்து திரிந்து மூலத்தின் பக்கங்களை அசுத்தமாக்கிவிடும். பெண்களுக்கு இதே மாதிரியாக மலவாயிலினின்று வெளிப்பட்டு மூலத்திலும் அல்குலின் பக்கத்திலும் நமச்சலை ஏற்படுத்துவதுடன் அல்குலினுள்ளேயும் சென்று ஒருவகை மேகவியாதியைத் தூண்டிவிடுகிறது. இப்பூச்சி உயிருக்குத் தீங்குவிளைவிக்காதெனினும் பலவகைத் துன்பங்களுக்கு உள்ளாக்கி விடுகின்றது. இப்பூச்சி கசப்பு அல்லது உவர்ப்பு இவை

களால்சாகுந்தன்மையுடையது. இப்பூச்சிகளைத் தன்னிடத்தே உடையவர்கள் அப்பூச்சியால் தினவு ஏற்படும்பொழுது கைவிரல்களை அப்பக்கங்களில் செலுத்துவதால், அவர்கள் விரல்கள் நகத்தினிடை முதலியவைகளில் இந்நுண்ணிய தானப்பூச்சி ஒட்டிக்கொண்டு மறபடியும் உணவோடு அல்லது தண்ணீரோடு குடலுள்ளுக்குச் செல்கின்றது. இப்பூச்சியும் அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதால் ஏற்படக்கூடியது.

நான்காவது

ஆணிவேர்ப்புழு

இப்புழு உடை மரத்துக்காய்போல் இரண்டு அடிமுதல் பதினைந்து அல்லது இருபது அடி நீளம்வரை இருக்கும். அசல் உடை மரத்துக்காய்போல் வட்ட வடிவமாகவும் ஒவ்வொரு வட்டமான பாகமும் கீழும் மேலும் இவைபோன்ற வட்டமான பாகத்தோடு சேர்க்கப்பட்டிருக்கும். கொஞ்சம் வெண்மைநிறமாகவும் தட்டையாகவும் இருக்கும். தலையானது கொஞ்சங் கோணலான ஈட்டியின் மேல் பாகம்போல் இருக்கும். மிக நீளமாயிருக்கும்.

இப்பூச்சியானது ஒன்றுக்குமேல் காணப்படமாட்டாது. இப்பூச்சி முதிர்ந்தவுடன் ஒவ்வொரு வட்டமானபாகமும் பிரிந்து தனித்தனிப்பூச்சிகளாய்விடும். முதலில் ஒரு பூச்சியாயிருந்து வரவர பல புழுக்களாகிவிடும்.

இப்புழுவானது ஒருவகைத் துன்பத்தையும், நோயையும் உண்டு பண்ணுவதில்லை. இடையிடையே மலத்தில் ஒவ்வொரு வட்டமான பாகங்கள் பிரிந்து தனித்தனி பூச்சியானவுடன்தான் காணப்படும். இப்பூச்சியானது பன்றியின் ஊன் உண்பவருக்கே ஏற்படக்கூடியது. பன்றியோடு வாழும் சில வகுப்பினரிடத்திலும் காணப்படும். பொதுவாக இந்துக்களிடத்தில் இப்புழு காணப்படுவதில்லை. மாடு, பன்றி முதலியவைகளின் இறைச்சியைத் தின்போரிடத்தே காணப்படுகின்றது. பூசணிக்காயின் விதைக்கு இப்புழு குடலைவிட்டு வெளிப்பட்டு விடுகிறது.

திருநெல்லைச்சுந்தரனார்

சிந்தாப்பள்ளி.

திரு. C. வேணுதாஸ் அவர்கள்
நஞ்சன்கோடு, திருவனந்தபுரம்

,, M. இயக்கிமுத்து பண்டிதர் அவர்கள்
அப்புதளை, சிலோன்.

,, S. சப்பாணி பண்டிதர் அவர்கள்
அம்பாசமுத்திரம், திருநெல்வேலிஜில்லா.

,, S. பிரமநாயகம்தாஸ் அவர்கள்
ஆழ்வார் திருநகரி, திருநெல்வேலிஜில்லா.

,, M. கணபதி பண்டிதர் அவர்கள். கொழும்பு.

,, P. பாப்பு பண்டிதர் அவர்கள்
கொள்ளுப்பட்டி, கொழும்பு.

,, S. இருளசாமி பண்டிதர் அவர்கள்
ஆத்தூர், திருநெல்வேலிஜில்லா.

,, M. நமசிவாய மருத்துவர் அவர்கள்
முட்டுவால், கொழும்பு.

,, சுவாமிநாதன் அவர்கள், கொழும்பு.

,, P. சுப்பய்யா பண்டிதர் அவர்கள்
ஆழ்வார்குரிச்சி, திருநெல்வேலிஜில்லா.

,, M. பிரமநாயகம் பண்டிதர் அவர்கள்
பாளையங்கோட்டை, திருநெல்வேலிஜில்லா.

,, வெள்ளையன் பண்டிதர் அவர்கள்
சேர்மாதேவி, திருநெல்வேலிஜில்லா.

,, S. விசுவநாததாஸ் அவர்கள்
நஞ்சன்கோடு, திருவனந்தபுரம்

,, N. பிச்சன் பண்டிதர் அவர்கள்
மூலக்கரைபட்டி, நாங்குநேரி தாலுக்கா.

,, S. பாப்பய்யா அவர்கள், கண்டி, சிலோன்.

,, A. K. காளிமுத்து பண்டிதர் அவர்கள்
குருநாக்கல், சிலோன்.

,, U. A. தளவாய் பண்டிதர் அவர்கள்
மொரட்டுவா, சிலோன்.

,, M. S. நாதன் அவர்கள், பினங்கு.

மருத்துவனுக்கு

நன்கொடை அளித்த அன்பர்கள்

(136-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு - வி. சக்கரவர்த்தி ஏகாம்பரம் அவர்கள்
சக்கரவர்த்தி சித்தவைத்தியசாலை,
பாரிஸ் வெங்கடாசல அய்யர் தெரு,
சென்னை ரூ 7 0 0

" பார்த்தசாரதி பண்டிதர் அவர்கள்
கச்சேரிசந்து, மயிலாப்பூர், சென்னை ,, 2 0 0
(இவர் மனைவி இறந்த கருமாதிக்காக நன்கொடை)

" வ. பெ. பெருமாள் பண்டிதர் அவர்கள்
வல்லநாடு, திருநெல்வேலிஜில்லா ,, 2 0 0

மருத்துவனின் அன்பர்கள்.

திரு - R. M. நடேசன் அவர்கள்
இராயப்பேட்டை, சென்னை.

" P. S. பகவதி பண்டிதர் அவர்கள்
புலியூர் குறிச்சி, திருநெல்வேலிஜில்லா.

" S. இயக்கிமுத்து பண்டிதர் அவர்கள்
மருதானை, கொழும்பு.

" V. பலவேசம் பண்டிதர் அவர்கள்
வியாங்கொடை, சிலோன்.

" M. முருகலிங்கம் பண்டிதர் அவர்கள்
பாளையங்கோட்டை, திருநெல்வேலிஜில்லா.

" P. S. திருவடி பண்டிதர் அவர்கள்
திருநெல்வேலி டவுன்.

" E. அமுர்தலிங்க பண்டிதர் அவர்கள்
நாகல் நகர், திண்டுக்கல்.

" P. சுந்தரம் அவர்கள்
வீரராகவபுரம், திருநெல்வேலிஜில்லா.

" E. முத்துசாமிதாஸ் அவர்கள்
அம்பாசமுத்திரம், திருநெல்வேலிஜில்லா.

" K. S. சுப்பையா அவர்கள்
புசலவா, சிலோன்.

திருச்சி மருத்துவர் சங்கத்தில்

ஓர் இறங்கர் கூட்டம்

1-3-29. ஆம் நாள் திரு எஸ். அய்யாகண்ணு அவர்கள் தலைமையில் மருத்துவர்களின் கூட்டம் கூடியது. திருச்சி தாலுக்கா சித்தாம்பூர் மருத்துவர் ரா. அங்கமுத்து அவர்கள் செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டுக்கு தமது நண்பர்களோடு சென்று திரும்பி வரும்போது, ரயிலில் காய்ச்சல்கண்டு திருச்சியில் தமது மைத்துனர் வீட்டில் 23-2-29 ஆம் நாள் காலமாகிவிட்டார். இவர் குலாபிமானமுள்ளவர். தாழ்ந்தவகுப்பினரிடத்தும் ஏழைகளிடத்தும் மிகக் கருணையுடையவர். சுயமரியாதையுடையவர். இவர் தமது வீட்டில் நடைபெற்ற திதிமுதலிய சடங்குகளை தாமே செய்துக்கொண்டு ஆங்குள்ள மற்றவர்களுக்கும் இவ்விஷயங்களைப் போதித்துவந்தார். இதனைக் கண்டு மனம்பொறாத அவ்வூர் பார்ப்பனப் புரோகிதர் கோடரிக்காம்புகளான நமது சகோதரர்களைத் தூண்டிவிட்டு அவர் வீட்டுக்குத் தீவைத்துவிட்டார்கள். அதற்கும் அஞ்சாது பிறகு வீட்டை பலமாகக் கட்டிமுடித்து, அவ்வீட்டிற்கு பங்குனிமீ சுயமரியாதைத் தலைவரைக்கொண்டு புதுமனை புகுவதென்று தீர்மானித்திருந்தார். அவர் எண்ணம் நிறைவேறுமுன்னம் திடீரென்று காலமானதால் மிக வருந்துவதாகவும், தங்கள் வருத்தத்தை அவரது குடும்பத்திற்கு அறிவித்துக்கொள்ளுவதாகவும் தீர்மானம் நிறைவேறியது என்று ஒரு நிருபர் எழுதுகின்றார்.

சுயமரியாதைத் திதி

நாளது விபவஹு மாசிமீ 25உ வெள்ளிக்கிழமை ஆம்பூர் திருவாளர். சு. அய்யாபிள்ளை தமது தகப்பனார் சு. சுப்பிரமணியம் பண்டிதர் அவர்கள் வருட திதியை கண்டியில் தமது இல்லத்தில் கூலிப் புரோகிதர், போலிப்புரோகிதர், பார்ப்பனப்புரோகிதர் முதலியவர் யாவருமின்றி திதியைத் தாமே நடத்தி பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்புடன் உண்டி அளித்தனர் என கண்டி தி. நடனமுத்து எழுதுகிறார்.

விருதுநகர் மருத்துவர்சங்கம்.

13-2-29 ஆம் நாள் புதன்கிழமை விருதுநகர் மேல்புறம் ஐயனார் கோயில்முன் திருவாளர் சாமிநாதபண்டிதர் அவர்கள் அவைத்தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மருத்துவர்களின் முன்னேற்றத்தைப்பற்றியும், மருத்துவர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும், பலர் பேசினார்கள். பிறகு விருதுநகரில் தென் இந்திய மருத்துவர் சங்கத்திற்கு ஒரு கிளைச்சங்கம் நிறுவப்பட்டது என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

பமான காரியமாகும். சுருங்கச்சொல்லுமிடத்து இவர்களுக்கு இரவும் பகலும் ஒன்றுதான்.

இவ்விதம் ஓய்வின்றி உழைப்பதில் கடைகளின் சொந்தக்காரராயுள்ள முதலாளிகளுக்கு லாபம் சிறிது அதிகம் கிடைப்பதாகக் கருதியபோதிலும், வேலையாட்களின் உடல்நலங்கெட்டு அவர்களின் அறிவும், உடம்பும் வளர்ச்சியின்றி சீர்குலைந்துவிடுமென்பது திண்ணம்.

சிலோன் ஷாப்புகளில் வேலைப்பார்ப்பவர்கட்கு 'மருத்துவன்' என்ற பத்திரிகையைப்போல் இன்னும் பல பத்திரிகைகள் இலவசமாய்க்கிடைப்பினும், அப்பத்திரிகைகளைப்படித்து அதிலுள்ள விஷயங்களைக் கிரஹித்து நன்மையடைய சிறிதும் ஓய்வுநேரம் இல்லாமற்போனால், எத்தனை நூற்றாண்டுகள் முயற்சித்தாலும் நம் தலைவர்கள் எதிர்பார்க்கிறபடி மருத்துவ குலமக்கள் நன்மையையடைவது கஷ்டமாகிவிடும்.

தென் இந்திய மருத்துவசங்கத் தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் 1924 ஆம் ஆண்டு இலங்கைவந்திருந்தபோது, கடைகளிலுள்ள இளைஞர்கள் காலை 7-மணிமுதல் இரவு 7-மணிவரையில் வேலைசெய்து இரவில் இரண்டுமணிநேரம் படிப்பதற்கு விட்டுவிடும்படி முதலாளிகளுக்கு எவ்வளவோ சொல்லிக் கேட்டுக்கொண்டார்கள். அதைப்பற்றி ஆயிரக்கணக்காக நோட்டீஸ் அச்சிட்டு இலங்கை பொதுஜனங்களுக்கும் கொடுக்கப்பட்டது. முதலாளிகள் தங்கள் சுயநலத்தைமட்டும் கவனித்தார்களே தவிர குலநலத்தைச் சிறிதுங் கவனிக்கவில்லை.

ஆதலால் இலங்கையில் கடைகள் வைத்திருக்கும் முதலாளிமார்கள் எல்லோரும் தமது குலமக்கள்மீது கருணைவைத்து மேற்கண்ட நியாயங்களை ஊன்றிக் கவனித்து, கடைவேலையாட்கள் காலை 7-மணிக்கு வேலைக்குவந்து இரவு 8-மணிக்கு போகும்படியாவது உதவிசெய்வதோடு, முக்கியமான திருநாட்களிலும் அவர்களுக்கு விடுமுறைகொடுத்து முதலாளிமாரும் வேலையாட்களும் மனவெறுப்பின்றி அன்புடன் ஒற்றுமையாயிருந்து, நமது மக்களின் எதிர்கால நன்மையைக் காப்பாற்றவேண்டுமென்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்.

மு. உலகநாதன்

கொழும்பு.

இலங்கை மருத்துவர்களுக்கு

ஓர் வேண்டுகோள்

நமது தேசத்தில் மற்ற ஜாதியினரால் மருத்துவகுலத்தினருக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இம்சையைநீக்கி அவர்கள் மருத்துவ வகுப்பினரையும் தங்கள் சகோதரரென உணர்ந்து ஒருவருக்கொருவர் உதவிசெய்து அன்புடன் கலந்து வாழ்வதற்கு தடையாயுள்ள நமது அறியாமையைப்போக்கி நாம் முன்னேறவேண்டுமெனத் தளரா ஊக்கத்துடன் உழைத்துவருவதோடு, இப்போது மருத்துவன் பத்திரிகை மூலமாகவும் அதிகமான நன்மையை நமது சமூகத்திற்குச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து நமது தலைவர் பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் நமது வகுப்பினற்குரிய மருத்துவன் என்னும் பெயரிட்டே ஓர் மாதப்பத்திரிகையை வெளியிட்டு வருகின்றார்கள்.

மற்றப் பத்திரிகைகளில் காணக்கூடாத பல அரிய வைத்திய முறைகளும், சாஸ்திரங்களும் இம்மருத்துவன் பத்திரிகையில் வெளியாகிவருகின்றன. மக்கள் நோயின்றி உயிர்வாழவோ, வைத்தியசாஸ்திரங்களை எளிதாகக் கற்று மக்களுக்கு உதவிசெய்யவோ மருத்துவன் ஓர் சிறந்த அறிவுக்களஞ்சியமென்பதில் ஐயமில்லை. மருத்துவன் பத்திரிகைக்கு போதுமான சந்தாதாரர்கள் சேர்ந்தால் இப்போது அதற்கு ஏற்பட்டிருக்கும் சந்தாதொகையைக் குறைத்துவிடுவதாக முன்னரே தெரிவித்திருக்கிறார்கள். ஆதலால் நமது மருத்துவ குலத்தினர் தங்களாற்கூடியமட்டும் இம் மருத்துவனை ஆதரித்து தலைவர் பண்டித ஆனந்தம் அவர்களுக்கு முகமலர்ச்சியுடன் உதவிசெய்ய வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

இலங்கைத்தீவில் வசிக்கும் நம் மருத்துவகுலத்தினர் கடைகள் வைத்து வியாபாரம்செய்து வருகின்றார்கள். இவ்விதகடைகளின் முதலாளிகள், தங்களிடமிருந்து வேலைசெய்பவர்களை ஒருவகையில் அன்பாக நடத்திவருகின்றார்களென்பதிற் சந்தேகமில்லை. சிற்சில இடங்களில் சற்று வெறுப்பான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பினும் பெரும்பாலும் அவ்விதமேயிருந்து வருகிறதெனச் சொல்லுவதற்கில்லை. ஆனாலும் கடைகளில் வேலைசெய்வோர் தங்கள் குறைந்த கல்வியைச் சிறிது வளர்த்துக்கொள்ளவோ, சிறிதும் கல்வி இல்லாதவர்கள் எழுத்துவாசனையறியவோ, மற்றும் நல்ல விஷயங்களில் தமது காலத்தில் கொஞ்சமேனும் செலுத்தி அதனால் நன்மையடையவோ போதுமான சந்தர்ப்பமில்லாதிருந்து வருவது மிகவும் பரிதா

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆளுகை ஏற்பட்டு இப்போது 200-வருடங்களாகியும் மருத்துவ குலத்தாரும் இன்னும் சில குலத்தினரும் முன்போல பிற்போக்கான நிலைமையிலேயே இருக்கின்றனர். சமுதாயத்திலே அவர்கள் இன்னும் முன்னேற்றநிலைமை அடையவில்லை. இவ்வாறு பல திறப்பட்ட சிக்கலான இந்திய வியவகாரங்களையெல்லாம் அவைகளின் முக்கியத்துக்கு தக்கதாக கவனத்துடன் விசாரித்து நடைமுறையில் வரத்தக்க ஏற்பாடுகள் செய்வார்களென்று நம்புகிறோம்.

முடிவுரை.

இந்த மாகாண ஜனங்களெல்லோரும் இந்திய அரசியல் மகா சபையினிடத்தில் பூர்ண நம்பிக்கை யுள்ளவர்களா யிருக்கின்றனர். ஒரு சிலர் கமிஷனை ஆட்சேபித்தாலும், கமிஷனுடன் ஒரு வழியில் இல்லாவிட்டால் இன்னொரு வழியில் ஒத்துழைக்க விரும்பாதவர்கள் கிடையாது. இந்திய அரசியல் திருத்தம் செய்வதற்கு பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு உரிமையில்லை என்றுகூறும் பகிஷ்காரக்காரர்களின் நோக்கம் எதுவாயினும் மருத்துவ குலத்தாராகிய நாங்களும் எங்களைப்போல் கஷ்டப்படுகிற பலரும், சமூக முன்னேற்றத்துக்காகவும் சம உரிமைக்காகவும் இதுவரையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டை நம்பியிருந்ததுபோல எப்பொழுதும் பிரிட்டிஷ் சர்க்காரிடம் ராஜவிசுவாசமுள்ளவர்களா யிருக்கிறோம். இந்திய அரசியல் கமிஷனுடன் ஒத்துழைக்கும் உண்மை விருப்பத்துடன் இந்த அறிக்கையை (மெமோராண்டத்தை) கொடுக்கின்றோம்.

சர் ஜான் ஸைமனும் அவர் சகாக்களும் இந்திய அரசியல் விசாரணையை வெற்றிபெற நடத்தி முடிக்க விரும்புவதுடன், இந்திய சக்கரவர்த்திக்கு பூரண சுகமும் நீடிய ஆயுளும் ஏற்பட வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவனுக்கு

உதவி பத்திராசிரியர் வேண்டும்

தமிழில் இலக்கிய இலக்கண ஞானமும், ஆங்கிலத்தில் ஸ்கூல் பைனல் படிப்பும், சிறிதாவது தமிழ்வைத்திய ஞானமும் உள்ள ஒருவர் மருத்துவன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியர் வேலைக்குவேண்டும். சம்பள விவரம் கடிதமூலமாகவாவது நேரிலாவது தெரிந்துகொள்ளலாம்.

மருத்துவன் ஆபீஸ், 221, தங்கசாலைத்தெரு, சென்னை.

பொது ஸ்தாபனங்களிலும், பொதுச் சத்திரங்களிலும் மருத்துவ குலத்தாருக்கு இவ்விதமே உரிமை கொடுக்கப்படுகிறதில்லை. மருத்துவர்கள் சிறப்பும் கண்ணியமுமான தொழில் நடத்திவருகிறவர்களென்பதை மறக்க முடியாது. புராதனகால முதலே மருத்துவ குலத்தார் வைத்தியராயிருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் முன்னோர் மூவேந்தரிடம் அரச வைத்தியர்களாக இருந்தனர். தமிழ் நூல்களிலே ஞானிகளும் அறிஞரும் அவர்களைப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர்.

தற்காலத்திய மருத்துவர்களும் தங்கள் புகழ்பெற்ற முன்னோரின் தொழிலை ஓரளவு மேற்கொண்டு நடத்தி வருகின்றனர். மருத்துவ குலத்தவரில் ஆண்கள் வைத்தியராகவும், பெண்கள் மருத்துவிச்சிகளாகவும் இருக்கின்றனர். நோய்வந்த காலத்திலும், பிரசவகாலத்திலும் தீண்டப்படாதார் என்று கருதப்படும் மருத்துவ குலத்தாரின் உதவியை உயர்ந்த வகுப்பார் ஆவலாய் விரும்புகின்றனர். ஆனால் மற்றகாலங்களில் பிறப்பினால் கேவலமாகக்கருதி எல்லாச் சிறுமைகளுக்கும் அவர்கள் உட்பட்டிருக்க வேண்டி யிருக்கிறது.

சமூக திருத்தத்துக்கு சர்க்கார் உதவி வேண்டும்.

இந்தியாவின் தற்கால அரசியல் நிலைமையிலே மருத்துவ குலத்தினர் தங்களுக்கு எவ்வித இழிவுமின்றி சமத்துவ அரசியல் உரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்பதை அலட்சியம் செய்யமுடியாது. சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரதிநிதிகள் இந்து சமுதாயத்திலுள்ள இந்தக் கதைகள் தேசீய வளர்ச்சிக்கு தடையாயிருக்கிறதென்பதை உணர்ந்து, அறியாமையிலும் குருட்டாட்டத்திலும் ஆழ்ந்து கிடக்கும் பொது ஜனங்களை பிரசாரத்தினால் திருத்த முடியாமையால் சட்டங்களினால் இந்த தீமைகளை நீக்க பல தடவைகளிலும் முயற்சித்திருக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளிலேயே இவ்வித சட்டம் செய்ய முடியுமாயினும், சர்க்கார் சமூதாய விஷயங்களில் தலையிட முடியாதென்ற காரணத்தினால் அவ்வித சட்டங்களுக்கு சம்மதம் கொடுக்க மறுத்தே வந்திருக்கின்றனர். பிரிட்டிஷ் சர்க்கார் இந்த முறையை மாற்றி சமூக திருத்தவிஷயமாய் இந்திய சட்டசபைகளுக்கு அதிகார மிருக்கும்படி அடுத்த சீர்திருத்த திட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும். சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதுவிஷயமாய் பராமுகமாயிருந்தால், சர்க்காரே முன்வந்து சமூதாய தீமைகளை ஒழிப்பதற்கான சட்டங்கள் செய்தல் வேண்டும்.

விட்டுவிடவேண்டும். இந்தியா இன்னும் சமூக விஷயங்களில் பிற்போக்கான நிலைமையிலே இருக்கிறது. இந்திய ஜனங்கள் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட பலவித ஜாதிகளாகவும், உட்பிரிவுகளாகவும் பிரிந்துபோ யிருக்கின்றனர். இதில் பார்ப்பனர் எல்லாரினும் உயர்ந்தோராகவும், ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தோர் மிகத் தாழ்ந்த ஜாதியாகவும் கருதப்படுகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தனக்கு கீழ்ப்பட்ட வகுப்பாரினும் தன்னை உயர்ந்தவனாக மதித்துக்கொள்ளுகிறான். ஆனால் அவனுக்கு மேலான வகுப்பார் எனப்படுவோர் அவனைக் கேவலமாகவே நடத்துகின்றனர். இதனால் பொதுஜனங்களுக்குள் எவ்வித அனுதாபமும், ஒற்றுமையும் வளருவதற்கு இடமில்லை. சூத்திரர் பிர்மாவின் காலிலிருந்து பிறந்தவர்களென்று சொல்லப்படுகிறபடியால் இந்து சமூகத்திலுள்ள நாலு வகுப்பில் கடையராக கருதப்படுகின்றனர். இந்தச் சூத்திரர் யாரென்றால் பார்ப்பனரல்லாதாரே. அவர்களுக்குக் கீழாக பிற்போக்கான வகுப்பாரும் ஒடுக்கப்பட்ட மக்களு மிருக்கின்றனர். இவர்கள் பிர்மாவின் உடலின் எந்தப் பாகத்திலிருந்து தோன்றினர்களென்று சாஸ்திரத்திலாவது சரித்திரத்திலாவது சொல்லப்படவில்லை. இந்த வகுப்பார்கள் இந்துமதத்தை சேர்ந்தவர்களாயிருந்தும், இந்து தெய்வங்களை வணங்கிவந்தும் இவர்களில் பெரும்பாலோர் தீண்டாதாராக கருதப்படுகின்றனர். அவர்களை கிட்ட அணுகாதாராகக் கருதும் உயர்சாதியார் உண்டு. மலையாளத்தில் நம்பூதிரிப் பார்ப்பனர் இந்த வகுப்பாரைத் தங்கள் தெருக்கள் வழியாகச் செல்ல அனுமதிப்பதில்லை. பிறப்பினாலே ஏற்பட்ட இந்த ஜாதிக் கட்டுப்பாட்டுக் கொடுமைகளினால் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள் வருந்துகின்றனர். மதத்தின் பெயரால் மகத்தாகிய பாதகங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

மருத்துவரில் உயர்ந்த வைத்தியராயினும், என்ன அந்தஸ்துள்ளவராயினும், பெரிதும் மதிப்புப் பெற்றவராயினும், தமிழ்நாட்டில் திருநெல்வேலி மதுரை முதலிய இந்துக் கோயில்களுக்குள் செல்லக் கூடாது.

உயர் வகுப்பினரால் மக்களுக்குப் பொதுவான கோயில் வணக்க உரிமையே மறுக்கப்படுகிறதென்றால், ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமை சமூகத்தில் மிக கேவலமாயிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

கிராமப் பிரதேசங்களை அபிவிருத்திசெய்கிறதிலே வேலையில்லாதாருக்குப் போதிய வேலை கிடைக்கக்கூடுமென்று அந்தக் கமிஷன் சிபார்சு செய்ததுண்டு. ஆனால் அது நடக்கிற காரியமல்ல. நடுத்தரவகுப்பைச் சேர்ந்த இந்தியமாணவர்கள் மேனாட்டுக்கல்வி கற்றவுடனே அரசாங்க இலாகாவில் ஏதோ ஒரு குமஸ்தா அல்லது நிருவாக வேலைதான் தங்களுக்குக் கௌரவமானது என்று நினைக்கின்றனர். படித்தவர்களில் ஒருவருக்கேனும் ஒரு கிராமத்தில்போய் உழவுத்தொழில், கைத்தொழில் இவைகளை மேற்கொள்ள வேண்டுமென்று விருப்பம்கிடையாது. அவர்கள் அப்படிப்பட்ட படிப்பே படிக்கவில்லை. இந்தியாவில் இப்போது பல தொழிற்துறைகள் கிடையா. வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவேண்டுமாயின் புதிது புதிதாய் தொழிற்துறைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். நாட்டிலே கைத்தொழிற்சாலைகளை அதிகப்படுத்தினால் வேலையில்லாக் கஷ்டத்துக்கு நிவர்த்திமார்க்கம் ஏற்படுமென்று தோன்றுகிறது.

கைத்தொழில் அபிவிருத்தி.

கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தால் நாட்டுப்பொருளாதார நிலைமை சீர்படுமென்று உணருகிறோம். இந்திய முதலைக்கொண்டே சர்க்கார் இந்தியாவில் கைத்தொழில்கள் ஏற்படுத்துவார்களானால் இப்போது இந்தியாவிலிருந்து அயல்நாடுகளுக்குச் செல்லும் பொருளில் பெரும்பாகம் இந்தியாவுக்கே பயன்படுமென்று நம்புகிறோம்.

அயல்நாடு செல்லுவோருக்கு தொழில்.

இந்த மாகாணத்திலே விஸ்தாரமான நிலம் பயிருக்காக பண்படுத்தப்படாமல் கிடக்கிறது. இந்த நிலமெல்லாம் பண்படுத்தப்பட வேண்டும். சர்க்கார் இந்த வேலையை மேற்கொண்டு வேண்டிய விவசாய வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தால் அதன் பலனாக சர்க்காருக்கு அதிக வரி கிடைப்பதுடன் இப்போது இங்கு வேலையில்லாமையால் சிங்கப்பூர், பினாங்கு, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் செல்லுகிற தொழிலாளர் பெரும்பாலோருக்கு இந்த நாட்டிலேயே வேலை கிடைக்கும்.

சமூக மத விஷயங்கள்.

சமூக விஷயங்களில் சர்க்கார் தலையிடுவதில்லையென்று விக்டோரியாராணி அறிக்கை காலம்முதல் அனுட்டித்துவரும் நடுநிலைமையை

உயர்ந்த வகுப்பினர் சர்வ கலாசாலைப்பட்டம் பெற்றிருந்தபோதிலும் அந்த உத்தியோகத்துக்கு போதுமான படிப்புள்ளவராயிருந்தால் அந்தத் தாழ்ந்த வகுப்பினரையே அந்த உத்தியோகத்துக்குத் தெரிந்து கொள்ளப்படவேண்டும். இவ்விதமே தாழ்ந்த மருத்துவ குலத்தார் கல்வியில் பிற்போக்கான நிலைமையி லிருக்கின்றனர். ஆதலால் இந்த வகுப்பைச் சேர்ந்த ஒருவர் போதிய சர்வ கலாசாலை படிப்புள்ளவரா யிருந்தால் அவருக்கு உயரிய அரசாங்க உத்தியோகம் கொடுக்கப்பட வேண்டும். அப்படி உத்தியோகம்கொடுப்பதால் அது இந்த வகுப்பார் உயர்தரக் கல்வி கற்பதற்கு தூண்டி விடுவதாகும்.

இலவசக் கல்வி வேண்டும்.

மருத்துவர்கள் தற்காலம் தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்ட போதிலும், பரம்பரையாக பெருமையுள்ள வைத்தியரா யிருந்து வரும் சமூகத்தாராவர்.

இந்த நாட்டில் அறியாமையே எங்கும் காணப்படுகிறது. மருத்துவரில் நூற்றுக்கு 10-பேர் வீதம்கூட படித்தவர்களல்ல என்று கூறினல் மிகையாகாது. பையன்களுக்கு ஏழு அல்லது எட்டு வயது ஆனவுடனே அவர்களை ஒரு தாழ்ந்த தொழில்களிலோ அல்லது ஏதாவது கடைகளிலோ மாதம் 4-அல்லது 6-ரூபா சம்பளத்துக்கு வேலைக்கு அனுப்பிவிடுவது மருத்துவகுல பெற்றோருக்கு வழக்கமா யிருந்து வருகிறது. இது நிறுத்தப்படவேண்டும். ஆகையால் ஆரம்பக்கல்விக் கட்டாயமாக கற்றுக்கொடுக்கப்படவேண்டும். ஆண் பெண் இருபாலாரும் பன்னிரண்டு வயது வரையிலாவது பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். மருத்துவ குலத்தாரைப்போலவே ஒடுக்கப்பட்ட வகுப்புப் பிள்ளைகளுக்கும் இரண்டாந்தரக் கல்வி இலவசமாய் கற்பிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். அதற்குமேல் உயரிய படிப்புக்குப் போக விரும்புகிறவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுத்து உதவிசெய்தல் வேண்டும்.

வேலையில்லாக் கஷ்டம்.

பொது ஜனங்களில் படித்த நடுத்தர வகுப்பாருக்கு வேலை யின்மையால் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இது விஷயமாய் விசாரித்து ஆலோசனை கூறும்படி இரண்டுவருட காலத்துக்குமுன் நியமிக்கப்பட்ட கமிஷன் இந்த வேலையில்லா கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக காரியத்தில் கொண்டுவரக்கூடிய எவ்வித திட்டமும் செய்யவில்லை.

எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் இந்தியா பல அரசியல் திருத்தங்களைக் கடந்து செல்லுவது அவசியமாகும். எனவே இதற்கடுத்த திருத்தமாக மாகாண சுய ஆட்சி கொடுக்கப்படவேண்டும். இரட்டையாட்சி சரியாய் நடத்தப்படக்கூடிய ஒரு ஏற்பாடல்லவென்றும், அப்படி அதை நடத்துகிறதானால் அதற்கு குறிப்பிட்ட சில நிலைமைகள் ஏற்பட்டிருந்தாலொழிய சரிவராதென்றும்கருதுகின்றோம். இரட்டையாட்சி ஏற்படுத்தி மாற்றப்பட்ட இலாக்காக்களை இவ்வளவுகாலம் மந்திரிகள் நிருவகித்து வந்திருப்பதால் இந்த திருத்தங்களை எடுத்துவிடுவது புத்திசாலித்தனமான முறையல்ல. இப்போதைய இரட்டையாட்சியிலும் நல்ல சீர்திருத்த ஏற்பாடு செய்ய முடியாவிட்டாலும், இப்போது மாற்றப்படாமலிருக்கும் இலாக்காக்களில் பலவற்றை மந்திரி ஆளுகைக்குள் மாற்றுவது நல்லதாகும். அதிலும் மாகாண சுய ஆட்சிதான் மிகச் சிறந்த ஏற்பாடாகும்.

மாகாண சட்டசபையில் இரண்டாவது சபை.

சட்டசபையில் விரும்பப்படாத் தகாதசட்டங்கள் செய்யாதபடி தடுக்க இரண்டாவது சபை ஏற்படுத்தவேண்டும். அதன் அமைப்பும் வல்லமையும், தன்மையும், இந்தியா சட்டசபையையும், அரசாங்க சபையையும்போ லிருக்கவேண்டும்.

மருத்துவரும் அரசாங்க உத்தியோகங்களும்.

இப்போது மாகாண இந்திய அரசாங்க உத்தியோகங்களெல்லாம் இந்நாட்டிலே உயர்ந்த ஜாதிக்காரர் என்று சொல்லப்படும் சமூகத்தாராலேயே ஏகபோக மிராசாய் அனுபவிக்கப்பட்டு வருகின்றன. இந்த வகுப்பாரிடம் தான் எல்லா அறிவும் அடங்கியிருக்கிறதென்று நம்பிக்கை யிருப்பதால் இவர்களை அரசாங்க உத்தியோகங்களிலிருந்து நீக்கிவிட்டால் நிருவாகத்திறமை கெட்டுப்போகும் என்ற தவறான அபிப்பிராயமும் ஏற்பட்டிருக்கிறது. இந்த வகுப்பாருக்கு அரசாங்க உத்தியோகங்களில் உரிமை கொடுக்கக்கூடாதென்று நாம் கூறவில்லை. ஆனால் மற்ற வகுப்பாருக்கு இடம் கிடையாதபடி இந்த சமூகத்தார் அரசாங்க உத்தியோகங்களில் அதிகரிக்காதபடி ஏற்பாடு செய்யப்படவேண்டும். சர்வ கலாசாலை பட்டங்களை கவனியாமல் வகுப்புவாரி உரிமைகளைக் கவனித்தே மாகாண இந்திய அரசாங்க உத்தியோகங்கள் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும். ஒரு வேலைக்கு ஒரு உயர்ந்த வகுப்பினரும், ஒரு தாழ்ந்த வகுப்பினரும் அபேட்சகராய் நின்றால்

வகுப்புவாரித் தனித்தேர்தல் தொகுதிகளால்தான் துவேஷம் அதிகரிக்கிறதென்றும் சொல்லப்படுவதை நாங்கள் ஆதரிக்கவில்லை. அதற்கு மாருக தனித்தேர்தல் தொகுதிகளினுல் ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு தங்கள்சமூகத்திலுள்ள குற்றங்குறைகளை நீக்கி துரிதமாய் சீரேற்றமடைவதற்கு அனுகூலமுண்டாகும். ஆகையால் வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகளும், நியமன முறையும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நாங்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிருேம்.

மேஜர்களுக்கு ஓட்டுரிமை.

இப்போது இந்திய சட்டசபை, ஜில்லாபோர்டு, தாலுக்காபோர்டு, முனிசிபாலிட்டி ஆகிய ஸ்தாபனங்களுக்கு ஓட்டு கொடுக்கிறவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சொத்து, அந்தஸ்து மிகவும் உயரியதாயிருப்பதால் இந்த சுயஆட்சி ஸ்தாபனங்கள் தகுந்த ஜனப்பிரதிநிதித்துவமுள்ளதா யிருக்கவில்லை. எனவே, இந்த ஸ்தாபனங்களை யெல்லாம் உண்மையில் ஜனப் பிரதிநிதித்துவ முள்ளதாக்குவதற்காக இப்போதைய ஓட்டுரிமை அந்தஸ்தை நீக்கிவிட்டு அதற்குபதிலாக வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கவேண்டும். இப்போதுவழங்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களினுல் தங்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகளை உபயோகப்படுத்த முடியாதபடி சில வகுப்பார்கள் பிற்போக்கான நிலைமையிலிருந்தாலும், நாடு முழுவதையும் மொத்தமாய்ப் பார்க்குமிடத்து பொது ஜனங்கள் அரசியல் விஷயமாய் தேர்ச்சிபெற்று வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்குவதற்கு நாடு தகுதியடைந்திருக்கிறது. தேர்தல் தொகுதிகளை விஸ்தாரமாக்கினுல் தற்கால நிலைமையில் அவற்றை நிருவகிப்பது கஷ்டமென்று தோன்றலாம், என்ருலும் தேசம் குடியேற்றநாட்டு அந்தஸ்துக்காக தயாராகி வருவதால் இந்த கஷ்டத்தை மேற்கொள்ள வகைதேட வேண்டும்.

மாகாண சுய ஆட்சி.

இந்தியா, கிரேட் பிரிட்டன் இவ்விரு நாடுகளின் நன்மைக்காக கிரேட் பிரிட்டனுடன் இந்தியாவுக்கு தொடர்பு இருக்கவேண்டுமென்றே நாங்கள் எப்போதும் நம்பி வந்திருக்கிருேம். இந்தியாவுக்கு சுயராஜ்யம் என்ருல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இந்திய குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடைவதென்றே அருத்தமாகும். அப்படி இந்திய பிரிட்டிஷ் பொது ராஜ்யத்தில் ஒரு சம பங்காளியாக

பக் கல்விகூட கிடையாது. அரசியல் கல்வியில் அவர்கள் நிலைமை இன்னும் கேவலமானதா யிருக்கிறது. ஒரு வகுப்பார் தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதிலே கட்சிப் பிரதிகட்சிப் போட்டியும் குழப்பமும் நேரிடுகின்றன. பொதுத்தேர்தல் தொகுதியில் இந்த வகுப்பாருக்குக் கல்வி யில்லாமையால், உயர் ஜாதிக்காரர் தங்களை ஏமாற்றுவதற்கு இடங்கொடுத்து விடுகின்றனர். அரசியல் சமுதாயத் துறைகளில் முன்னேற்ற மடைந்த வகுப்பாரின் தலைவர்கள் தங்கள் கட்சிக் கொள்கைகளை கபடமறியாத கல்வியில்லாத மருத்துவ குலத்தாருக்குக்கொணர்ந்துபுகுத்தி அவர்களுக்குள் கட்சிப்பிரிவினை உண்டாக்குகின்றனர், எனவே மேற்குறிப்பிட்டவாறு நியமனமுறை ஏற்படுத்தினால் தகுதியுள்ள பிரதிநிதிகளை தேர்ந்துகொள்ளுவதற்காக சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஏதுவாகும். அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டால் அந்தந்த வகுப்பாருக்குள் ஒற்றுமை ஏற்படவும், அவர்கள் தங்கள் ஓட்டுரிமையைச் சரியாய் பிரயோகிப்பதற்கு அவர்களுக்குத் தேர்ச்சி யுண்டாகவும் ஏதுவாகும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், நியமனமும் வேண்டும்.

சீர்திருத்தத்துக்கு பின் சிறுபான்மை கட்சியாருக்கும், பிரதிநிதித்துவம் இல்லாத வகுப்பாருக்கும் நியமனத்தின் மூலமாக ஓரளவு நன்மை ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆகையால்நியமன முறையை நீக்கிவிடுகிறதாயின், அதற்குப்பதிலாக அதன் நோக்கம் நிறைவேறும்படியான தக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். சிறுபான்மைக் கட்சியார் பொதுத் தொகுதிகளில் சேர்க்கப்பட்டால் அரசியல் சமூதாயத் துறைகளில் அபிவிருத்தி யடைந்துள்ள வகுப்பார்கள் அவ்விஷயங்களில் பிற்போக்கான நிலைமையிலுள்ள ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக வர நேரிடும். அப்படி நேரிட்டால் பிற்போக்கான நிலைமையிலுள்ள ஜனங்களுக்கு தக்க பிரதிநிதித்துவம் கிடையாமற்போகும். இதனால்தான் நாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்கிறோம். இது பிற்போக்கான வகுப்பார்களைபாவது அல்லது இந்த மாகாணத்தை மாத்திரமாவது பொருத்ததல்ல. உண்மையில் இது இந்தியா முழுவதிலுமுள்ள எல்லா வகுப்பாருக்குமே அவசியமான தொன்றாகும்.

பொதுத்தேர்தல் தொகுதிகள் ஏற்பட்டால் இந்தியாவிலுள்ள பல வகுப்பார்களுக்குள்ளும் அதிக ஒற்றுமை ஏற்பட்டுவிடுமென்றும்,

நியமன முறை.

3. அடுத்த சீர்திருத்த திட்டத்திலே நியமன முறை முழுதும் ஒழிக்கப்பட்டுவிட்டால் ஒவ்வொரு சமூகமும் தன் தன் சொந்தப் பிரதிநிதியை தெரிந்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டியது அவசிய மாகும். அப்போது மருத்துவகுலத்தார் ஏறக்குறைய 11-லட்சம் ஜனத்தொகை யுள்ளவர்களாக யிருப்பதால் அவர்களுக்கும் அவ்வி தமே சொந்தப் பிரதிநிதி தேர்ந்துகொள்ளும் உரிமை கிடைக்கும்.

4. அப்படி நேரிடாமல் நியமனமுறையே இன்னும் இருக்குமா யின், சட்டசபையிலும் மற்ற சுய ஆட்சி ஸ்தாபனங்களிலும் மருத் துவ குலத்தவர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் கொடுத்து மருத்துவ குலபிரதிநிதிகள் நியமிக்கப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும். ஆனல் தற்போது வழக்கத்திலிருக்கிற நியமனமுறை அந்தந்த வகுப்பாரின் உரிமைகளை முழுவதும் பாதுகாப்பதாயில்லை. நியமிக்கப்படுகிற பிரதி நிதிகளிடத்தில் அந்தவகுப்பாருக்கு நம்பிக்கை உண்டோ இல்லையோ என்பதை கவனியாமலே சர்க்கார் இப்போது ஒரு வகுப்புக்கு அல் லது ஸ்தாபனத்துக்கு சட்டசபையிலே பிரதிநிதிகளை நியமித்து வரு கின்றனர். இந்த முறையை நீக்கிவிட்டு இதற்குப் பதிலாக எந்த பிற் போக்கான அல்லது ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கு அந்த வகுப்பா ரால் ஆதரிக்கப்படுகிறவரும், அவர்களின் நம்பிக்கையைப் பெற்றவரு மான பிரதிநிதிகளை பல ஸ்தாபனங்களிலும் நியமிக்கவேண்டும். நிய மனகாலத்தில் அந்தந்தவகுப்பாரின் சங்கங்களில் விசாரணைசெய்தால் இவ்வித அந்தஸ்துள்ள பிரதிநிதிகளை எளிதில் தெரிந்தெடுக்கலாம். உதாரணமாக மருத்துவ குலத்தாருக்கு பிரதிநிதி தெரிந்துகொள்ள வேண்டுமாயின் தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் மூலமாக தெரி ந்துகொள்ளல் வேண்டும்.

5. மற்றெல்லா மாகாணங்களின் நிலைமைகளிலிருந்தும் பெரி தும் மாறுபட்ட இந்த சென்னை மாகாணத்தின் ராஜீய நிலைமைகளைப் பற்றி தீர விசாரித்ததின்மேல் தென் இந்தியாவிலுள்ள மருத்துவ குலத்தினர் இன்னும் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கத்தக்க தகுதியடையவில்லை என்று நானும் எனது குலத்தாரும் கருதுகின் றோம். எனவே, மருத்துவ குலத்தவர் உரிமைகளைக் காப்பாற்றுவ தற்கு நியமனமுறை ஒன்றுதானுண்டு. கல்வியில் அவர்கள் பிற்போக் கான நிலைமையிலிருக்கின்றனர். ஆயிரத்தில் ஒருவர்கூட உயர்தரக் கல்வி பெற்றிருக்கவில்லை. மீதமுள்ள நூற்றுக்கு 99-பேருக்கு ஆரம்

சுய ஆட்சி ஸ்தாபனங்களில் மருத்துவருக்கு பிரதிநிதித்துவம் இல்லை.

1. தென் இந்தியாவில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மருத்துவகுலத்தார் சுமார் 11-லட்சம்பேர் இருக்கின்றனர். வைத்தியம், இரணவைத்தியம், சங்கீதம், பிள்ளைப்பேறு பார்த்தல், விவசாயம், சவரம்செய்வதுமுதலியன இவர்களின் முக்கிய தொழில்களாகும். இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் மருத்துவர்கள் தென் இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்டோரில் ஒரு வகுப்பாராக கருதப்படுகின்றனர். சமுதாய அரசியல் துறைகளில் முன்னேற்றமடைந்துள்ள வகுப்பார் அனுபவிக்கிற பல சுதந்தரங்கள் மருத்துவ குலத்தாருக்கு மறுக்கப்பட்டுள்ளன. 1919-ம் வருடத்திய சீர்திருத்தங்களுக்கு பின்னரும் அரசியல் துறையில் மருத்துவ குலத்தாருக்கு நன்மை ஏற்படவில்லை. பொது ஸ்தானங்களிலே அவர்களுக்கு தேர்தல் மூலமாகவேனும், அல்லது நியமன மூலமாகவேனும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. சீர்திருத்தப்படி ஒடுக்கப்பட்ட அல்லது பிற்போக்கான வகுப்பார்களில் ஒரு வகுப்பாருக்கு அல்லது சில வகுப்பார்களுக்காக சென்னை சட்டசபையில் ஒரு பிரதிநிதியை நியமிப்பது சர்க்காருக்கு வழக்கமாயிருந்து வந்தது. சட்டசபையிலும் மற்ற சுயாட்சிஸ்தாபனங்களிலும் சில ஒடுக்கப்பட்ட பிற்போக்கான வகுப்பார்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அப்படிப்பட்டவர்களுக்கு வகுப்புக்கொரு பிரதிநிதியேனும் சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். மருத்துவ குலத்தாருக்கோ அப்படியில்லாமல் மேற்குறிப்பிட்டபடி பொதுப் பிரதிநிதித்துவம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தனிப் பிரதிநிதித்துவம்.

2. சட்டசபையிலும், ஜில்லா போர்டு, லோக்கல்போர்டு, முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்களிலும் மருத்துவ குலத்தாரிலிருந்து ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டால் மருத்துவ குலத்தார் உரிமைகளுக்கு போதிய பாதுகாப்பு ஏற்படுமா என்பது. (1) சைமன் கமிஷன் அறிக்கை ஆதாரமாகக்கொண்டு தயாரிக்கப்படும் சீர்திருத்தங்களையும் (2) அப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியமன முறையையும் பொருத்ததாயிருக்கும்,

இந்திய அரசியல் மகாசபையாகிய

சர். ஜான் சைமன் கமிஷனுக்கு

தென் இந்திய மருத்துவர் சங்கத்தின்

அறிக்கை.

(Memorandum)

தென் இந்திய ஆயுர்வேத (சித்த வைத்திய) சங்கத்தின் ஸ்தாபகரும், தென் இந்திய மருத்துவர் சங்கஸ்தாபகரும், ஷெ சங்கத்தலைவரும், மருத்துவன் பத்திராதிபருமான பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள் தென் இந்திய மருத்துவர்சங்கத்தின் பிரதிநிதியாக சைமன் கமிஷனுக்குக் கொடுத்த மெமோராண்டத்தின் சாரம்:—

1928-ம் வருடம் மார்ச்சுமாதம் முதல்தேதி சென்னையில் தென் இந்திய மருத்துவர் சங்கத்தார் சைமன் கமிஷனுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தது நினைவிலிருக்கலாம். அவ்வாறு வரவேற்புபத்திரம் வாசித்துக்கொடுப்பதுடன் நில்லாமல் அச்சங்கத்தலைவனுகிய நான் கமிஷன் இரண்டாவதுதடவை இந்த நகரத்துக்கு வரும்போது கமிஷன்முன் மருத்துவ குலத்தவரின் கஷ்டங்களை எடுத்துக் கூறி அவர்களுக்கு சமூகத்தில் தக்க சம உரிமைகளும், ஸ்தலஸ்தாபனங்களில் பிரதிநிதித்வமும் கிடைக்கும்படி கேட்கவேண்டுமென்று தென் இந்திய மருத்துவ சங்கத்தார் விரும்பினர். ஆதலால் இந்த மெமோராண்டத்தில் மருத்துவகுலத்தாரின் சமூக அரசியல் நிலைமைகளை விவரித்து அவற்றை சீர்படுத்த என்னென்ன செய்யவேண்டுமென்று என்னுல் இயன்ற அளவு இந்திய அரசியல் கமிஷனுக்கு எடுத்துரைத்திருக்கின்றேன்.

ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை, ஒட்டுரிமை வழங்குவதின் விஸ்தாரம், அரசாங்க உத்தியோகங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இன்னோரன்ன விஷயங்களைப்பற்றியும், எனது சங்கத்தார் கருதுகின்றபடி எவ்வித அரசியல் திட்டம் இந்த மாகாண அபிவிருத்திக்கு ஏற்றதென்பதைப்பற்றியும் நான் இந்த அறிக்கையில் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

இந்திய அரசியல் மகாசபையாகிய

சைமன் கமிஷனும்

தென் இந்திய மருத்துவர்சங்கப் பிரதிநிதிகளும்

2-3-29 ஆம் நாள் சென்னை மெஸானிக்லாட்ஜில் சர் ஜான் சைமன் முன்பாக தென் இந்திய மருத்துவர் சங்கஸ்தாபகரும், சங்கத் தலைவரும், மருத்துவன் ஆசிரியருமாகிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களும், அட்வகேட் டி.எம். வேணுகோபால் B. A. B. L. அவர்களும், மருத்துவர் சங்ககாரியதரிசிகளில் ஒருவராகிய எஸ். தருமாம்பாள் அம்மை அவர்களும், தமிழ்மாதர் சங்கக்காரியதரிசி பண்டிதை. எ. நாராயணி அம்மை அவர்களும் வந்தார்கள். பண்டிட். ஆனந்தம் அவர்கள் சர் ஜான் சைமனுக்கு தென் இந்திய மருத்துவ சங்கத்தின் சார்பாக ரோஜாமலர்மாலை சூட்டி, முதன் முதல் ராயல் கமிஷன் பம்பாய் துறைமுகத்தில் வந்திறங்கும்போது, தென்னிந்திய மருத்துவர் சங்கத்தினர் கமிஷனை நல்வரவுகூறி தந்திகொடுத்ததையும், பிறகு சென்னையில் கமிஷன் வந்தவுடன் 1-2-29 ஆம் நாள் பப்ளிக் ஓர்க்ஸ் பில்டிங்கில் தென் இந்திய மருத்துவசங்கத்திலிருந்து பலர் ஒரு டெபுடேஷனாகவந்து சர்ஜான் சைமனுக்கும் கமிஷனுக்கும் நல்வரவு பத்திரம் படித்துக் கொடுத்ததையும் அந்த நல்வரவுப் பத்திரத்திலேயே தென் இந்திய மருத்துவர்களுக்கும், ஒடுக்கப்பட்ட மற்ற வகுப்பினர்களுக்கும் உயர்ந்த சாதியார் என்பவர்களால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப்பற்றியும் குறிப்பாய்க் கூறப்பட்டிருக்கிறது என்றுகூறி, தென் இந்திய மருத்துவர்களைப்பற்றியும், இந்திய அரசியல் திட்டத்தைப்பற்றியும் எழுதிய மெமோராண்டம் ஒன்றை சர்ஜான் சைமன் கையில்பண்டிட் ஆனந்தம் அவர்கள் கொடுத்தார்கள். சர்ஜான் சைமன் அதனைப்பெற்று மெமோராண்டம் கொடுத்ததற்காக மிக்க வந்தனமளிப்பதாகவும், மெமோராண்டத்தை முற்றும் தான் படித்துப்பார்த்து வேண்டியதைச் செய்வேனென்றும், நாங்கள் முதல்தடவை சென்னை வந்தவுடன் நீங்கள் டெபுடேஷனாகவந்து எங்களை வரவேற்று மரியாதைசெய்ததையும், இரண்டாவது இந்தியாவுக்கு வந்து சென்னையில் கமிஷன் அலுவல்முடிந்து ஊருக்குப் போகிறபோதும் நீங்கள்செய்த மரியாதையும் மறக்கமாட்டோம் என்றும் பதில்கூறினர்.

அட்வகேட் டி-எம். வேணுகோபால் அவர்கள் பண்டிட் ஆனந்தம் அவர்களைப்பற்றியும் தமிழ்நாட்டில் மருத்துவர்களுடைய கஷ்டங்களைப்பற்றியும் சிலவார்த்தைகள் சொன்னார். கஷ்டப்படுகிறவர்கட்கு வேண்டியதை செய்வதற்காகத்தான் நாங்கள் வந்திருக்கின்றோம் என்று சைமன் பதில் கூறினர்.

தையும் உறிஞ்சிவிடுகிறது. அது, வயிற்றிலுள்ளவரையும் கண்ணறைகளுக்குக் கேட்டை விளைக்கின்றது.

இதனைத் திருட்டாந்தப்படுத்துவதற்கு மதுசாரத்தின் தன்மையைப்பற்றிச் சில ஆராய்ச்சியைப்பார்ப்போம்.

பண்டிதஹாட்ஜ் (Professor Hodge) என்பவரது நாய்க்குட்டிகள்:—

பண்டிதஹாட்ஜ் என்பவர், ஏறக்குறைய சமமானவயதும் உருவமும் உயரமுமுள்ள நான்கு நாய்க்குட்டிகளை வளர்த்துவந்தார். அந்நான்கும் ஒன்ருகவசித்தும் விளையாடியும், ஒன்ருகவுண்டும் உறங்கியும், ஒன்ருகப் பயிற்றப்பெற்றும், மற்றெல்லாவகைகளிலும் ஒரேவிதமாக உபசரிக்கப்பெற்றும் வந்தன, ஆனல், அந்நான்கில் இரண்டுக்குமாத்திரம் ஒவ்வொருநாளும் அவற்றின் ஆகாரத்தோடு சிறிது மதுசாரஞ் சேர்த்துக்கொடுக்கப்பட்டது. C யும் D யும் மதுசாரமில்லாதிருந்தன. A யும் B யும் மாத்திரம் சிறிது மதுசாரமுண்டுவந்தன. அந்நான்கு நாய்களும் பந்து உருட்டினல் அதனைக் கொண்டுவருவதற்கு ஆறுமாதகாலம் பழகிவந்தன. அவைகளால் அவ்விளையாட்டை நன்ருகச்செய்ய இயன்றபிறகு, அவை ஒருவிசாலமான 300-அடி நீளமுள்ள அறைக்குள் கொண்டுபோகப்பட்டன. அங்கே ஒவ்வொருநாயும் எண்ணிடப்பெற்று, நாளொன்றுக்கு 100-தடவையாக 14-நாளைக்குப் பந்து உருட்டி விளையாடின. அவ்வாறு உருட்டின பந்துகளையுந் திரும்பக்கொண்டுவந்த அந்நாய்களின் கணக்கையும் சாக்கிரதையாகக் குறித்துக்கொண்டார். ஒவ்வொருநாயின் கழுத்துப்பட்டியில் (Collar) ஒவ்வொரு பாதைமானியந்திரம் (Pedometer) பொருத்தப்பட்டது. பாதை மானியந்திரமென்பது, துவிச்சக்கரவண்டி (Bicycle) அல்லது மோட்டார் இரதத்தில் (Motorcar) பிரயாணஞ்செய்யும் வேகத்தையுந் தூரத்தையுங்காட்ட, வேகமானியந்திரத்தில் (Speedomotor) பதிவுசெய்ய வைத்திருப்பதுபோலவே, அவ்வொவ்வொருநாயும் சென்றதின் அளவையும் வேகத்தையுங் காட்ட வைத்த சிறிய யந்திரமாம். பந்துகள் 1400-தடவை யுருட்டியதில், அவை ஒவ்வொன்றும் கொண்டுவந்த பந்துகளின் தொகையாவன:—

மதுபானமில்லாத C யும் D யும் 922 தரம்

மதுபானமுண்ட A யும் B யும் 478 தரம்

இவ்வித்தியாசம் எதனலுண்டாயிற்று? Aயும் Bயும் தங்கள் ஆகாரத்தோடு மதுசாரமுண்டு வந்ததினலாயிற்று. உண்டதினலென்னவாயிற்று? அவையுண்ட மதுசாரம் மூளையின் கண்ணறைகளுக்குச்சென்று, ஜீவதாதுவை விஷமாக்கிப் பந்துகளைக்கொண்டு வருவதற்கு மனதைச் சோர்வடையச்செய்து, புத்தியை மந்தப்படுத்தி, ஊக்கத்தைக்குறைத்துச் சுறுசுறுப்பில்லாமற் செய்துவிட்டது.

களுக்கு ஒரு நோயுமில்லையே! இனிமேலாவது இதனை நினைத்துப் பாருங்கள்.

தலை முழுக்காட்டும் போது குழந்தை அழாமல் மகிழ்ச்சியாய் விளையாடும்படி செய்விக்க வேண்டும். அப்படி செய்யுந் தாய் தான் அறிவுடையவள். திடீரெனவெந்நீரை வார்க்காமல்மெள்ளத் தலையை நனைத்து அப்பால் படிப்படியே உடம்பில் நீரை அள்ளிச் சிறுகச் சிறுக விடவேண்டும்.

வைத்தியருடைய அநுமதியின்றி இலை தழைகளைப் போட்டு வேக வைத்த நீரில் முழுக்காட்டக் கூடாது.

குழந்தைகளுக்கு நீராட்டு விப்பதில் அனுசரிக்க வேண்டிய முறைகள்:—

குழந்தைகள் இரண்டு வயதாகுமட்டும் அதிகாலையில் ஆகாரங் கொடுக்குமுன் முழு உடம்பும், மாலையில் ஐந்து மணிக்கு கழுத்துக்குக் கீழ் கண்ட முழுக்குஞ் செய்விக்க வேண்டும். ஆரம்பத்தில் தேக சூட்டுக்கு அதிகப்படாத இள வெந்நீரும், ஆறு மாதத்திற்கு மேல் வரவர சூட்டைத் தணித்து இரண்டு வயதாகும் பருவத்தில் குளிர்ந்த தண்ணீரும் உபயோகப்படுத்த வேண்டும். தலையை முதலில் நனைத்துப் பிறகு உடலை நனைக்க வேண்டும். சோப்பினால் சந்துக்கள் மடிப்புகளெல்லாம் நன்றாய்த் தேய்த்துக் கழுவவேண்டும். மெல்லிய துணியினாலாவது பஞ்சினாலாவது உடம்பைத் தேய்த்துச் சுத்தஞ் செய்ய வேண்டும். ஐந்தாறு நிமிஷத்திற்குள் நீராட்டி உடம்பை நன்றாய்ச் சூடாகும்படி மெல்லிய சல்லாவினால் விரைவாகத் தேய்த்து ஈரமின்றித் துடைக்க வேண்டும், உடனே தூய்மையான காய்ந்த உடுப்புகளை உடுத்த வேண்டும்.

தகாத செய்கைகள்:—

காலில் கிடத்திக்கொண்டு புரட்டி உருட்டித் தேய்த்து காதை மூக்கைப் பிடித்திழுக்கிறதினால் காது செவிடாகக் காரணமுண்டு. அதிகச் சூடான வெந்நீர் வார்க்கிறதனால் பலவீன முண்டாகும் எண்ணெய் ததும்பத் தேய்க்கிறதினால் வியர்வை உள்ளடங்கி நோயுண்டாகும். நன்றாய் அரைபடாத சிகைக்காய் அரைப்பு, மஞ்சள் மாவுகள் தேய்க்கிறதினால் தோல் சுரசுரப்பாகும், காயப்படும்.

அவை கண்ணில் விழுந்தால் கண்ணோவுண்டாகும். கண்ணில் கண்ட எண்ணெய்களைக் கட்டுகிறது கண்ணுக்குக் கெடுதி. குபீரென நீரை வார்க்கிறதினால் மூச்சுத் திணறிக் குழந்தைக்குத் திகிலுண்டாகும். குளிர்ந்த நீர் வார்க்கிறதினால் இரத்த ஓட்டம் உள்ளடங்கி வியாதி நேரிடும். மேற் கூறிய செய்கைகளை முற்றிலும் தள்ளவேண்டும். இவைகளெல்லாம் தீமையென்றறியாமல் செய்து, சிறு குழந்தைகளை துன்புறுத்தி, நோயாளியாகச் செய்கிறார்கள்.

5-ம் அத்தியாயம்

உடை:—முந்தின அத்தியாயத்தில் சொல்லியபடி தோலானது உடம்பையும், இரத்தத்தையுஞ் சுத்தி செய்யும் உறுப்பாயிருக்கின்றது. ஜீவாதாரமாகிய இந்தப்பெரிய வேலையை அது ஒழுங்காகச் செய்து வரத்தக்கதாக அதைச்சுத்தமாகவும், வெப்பம் குளிர்ச்சி இவைகளால் அதன் வேலைக்கு இடையூறு நேரிடாமல் பதனமாகவும் காப்பாற்ற வேண்டியதவசியம். பரிசபுலனுக்கடுத்த நரம்புகளும், வியர்வைக்குழாய்களும் தத்தம் வேலைகளைச் செய்து வர தோலுக்கு மிகுதியான இரத்த ஓட்டமிருக்கிறது. குளிர்ந்த காற்று உடம்பில் தாக்கும்போது இரத்த நரம்புகள் சுருங்கி அவைகளிலுள்ள இரத்தமெல்லாம் உடலினுட்புறம் ஓடுகிறது. ஆதலால் வியர்வையும், தோலினின்றும், மயிர்க்காலினின்றும் கழியும் கெட்ட காற்றும் வெளியேறாமல் நின்று போகும். இதனால் குண்டிக்காய்கள் எனும் பிருக்கம், மிகுதியான சிறு நீரையும், நுரையீரல் அதிகமான ஆவியையும் வெளியேற்றும்படி கஷ்டப்பட வேண்டியதாகும். சுவாசிப்பதும் வருத்தமாயிருக்கும். மேலும் தோலின் மேல் வெப்பக் காற்று தாக்கினால், இரத்த நரம்புகள் விரிந்து, இரத்த ஓட்டம் மிகுந்து அதிக வியர்வை உண்டாகும். அதனால் நுரையீரலுக்கும், பிருக்கத்துக்கும் வேலை சற்று எளிதாகும். ஆனால் நெடு நேரமாவது அல்லது அடிக்கடியாவது இப்படி அதிக வியர்வைக்கு இடங்கொடுத்தால் சீக்கிரம் பலவீனம் ஏற்பட்டு வியாதி நேரிடலாம். ஆகையினாலே குளிரும் வெப்பமும் சமமாயிருக்கும்படி குழந்தைகளுக்குத் தகுந்த உடுப்புகள் போட்டு வர வேண்டும். இது தெரியாமல் நம் நாட்டுப்பெண்கள் குழந்தை

தோல் மறத்தல், தோல் வெடித்தல், தோல் சுருங்கல், தோல் புண்ணாகி, நீர்வடிதல், கை, கால் விரல்களில் புண்ணாகிக் குட்டை யாகுதல், விரல்கள் மடிப்புண்டாகுதல் முதலியநோய்களை எல்லாம் மிக விரைவில் குணமாக்கும் அருமருந்து.

இந்த நெய்யைக் கடுக்காய்த்தோல், நிலாவாரை, (சூரத்தாவாரை) கியாழத்தில் மூன்று நாள் காலையில் ஒருரூபா அகலம் விட்டு சாப்பிட வேண்டும். பின்னர் நாள் தோறும், இரவில் உறங்கப் போகும்போது காய்ச்சின பசும்பாலில் அல்லது வெந்நீரில் அரை ரூபா அகலம் விட்டு சாப்பிட வேண்டும்.

பத்தியம்:—நல்லெண்ணெயில் தலைமுழுகுதல், கறிகுழம்பு தாளித்தல் கூடாது. நெய், தேங்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், சேர்த்துக் கொள்ளலாம். மீன் வகைகள் கூடாது, வெள்ளாட்டிறைச்சி, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, வெண்டைக்காய், பீர்க்கங்காய், புடலைப் பிஞ்சு, அத்திக்காய், அவரைக்காய் பொன்னாங் கண்ணிக்கீரை, முளைக்கீரை, அறுகீரை, துவரம்பருப்பு, பச்சைபருப்பு முதலியவைகள் சேர்த்துக் கொள்ளலாம். தினம் இள வெந்நீரில் தலை முழுகலாம், எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுவதற்குப் பதிலாக மிளகு, சீரகம், இவை இரண்டையும் பசும்பால் விட்டு அரைத்து பாலில் காய்ச்சி தலை முழுகவேண்டும். தலை முழுக்கு அன்று இரவு மருந்தை நிருத்திவைக்கவும், நோயாளி நல்ல காற்றில் படுத்து உறங்கவேண்டும். மாலை வெய்யிலில் உடம்பை இரண்டுமணிநேரம் காய்ச்சவேண்டும், இந்த நெய்யை உபயோகித்துகுணமடைந்தவர்களின் நற்சாட்சியை எங்கள் மருந்து விலைப்பட்டியில் (கேட்லாக்கில்) காணலாம்.

குஷ்டநோய்க்கு குடிநெய் புட்டி விலை ரூபா 5 0 0
வி-பி. தபால் செலவு வேறு.

பூ எண்ணெய்

(ஆனந்தஹேராயில்)

இது மணத்திலும், குணத்திலும், மாண்புமிக் குடையது.

நறுமண மிகுந்த பூக்களின் சத்துக்களால் செய்துள்ளது. இந்த எண்ணெயைக் கூந்தலில் தடவி வாரிக்கொள்ளுவதனால் அன்று மலர்ந்த மலரின் மணம்போல் மணங்கமழும். இதன் மணம் மயிரைவிட்டு நெடுநாள் விலகாது தலையில் பேன், பொடுகு,சொறி, சிரங்கு முதலியவைகளை அணுக விடாது.

மயிரைக் கருநிறமாக்கி விரைவினில் வளர்க்கும்.
பூ எண்ணெய் குப்பி 1 க்கு விலை ரூபா 1.

வெள்ளை வெட்டைக்கு

(கனேரியா கியூர்)

இது ஆண் பெண்களுக்கு ஏற்படும் நீர் எரிச்சல், நீர்த்தாரை இரணம், வீக்கம், குத்தல், வலி, சீழ், இரத்தம்வருதல், முதலிய நோய்களை மிகவிரைவில் கண்டிக்கக்கூடிய மருந்து.

இம்மருந்து அருந்தின 12 மணி நேரத்திற்குள் நோயைக் கண்டிக்கும். இம்மருந்து அரை அவுன்சும் தண்ணீர் ஒரு அவுன்சும் கலந்து நாளொன்றுக்கு மூன்று வேளையாக மூன்றுநாள் அருந்த நோய் முற்றிலும் நீங்கும்.

மருந்து சாப்பிடும் மூன்று நாளும் உப்பு, புளி, மிளகாய், முதலிய மசாலைப் பொருள்கள் ஆகாது. பகலில் மோர்ச்சோறு,இரவில் பால்சோறு உண்ணவேண்டும். சர்க்கரை, வெண்ணெய், நெய், பச்சரிசி, பச்சைப் பயறு, கோதுமை, பழவகைகள் உபயோகித்துக் கொள்ளலாம். காபி, ஊன் (மாமிசம் வகைகள்), பிராந்தி, சாராயம், புகையிலை, புகையிலைச் சுருட்டு, இராவிழிப்பு, பகல் உறக்கம், வெயிலில் அலைச்சல், பொருந்தல் முதலியவைகள் ஆகா. நாள்தோறும் இளவெந்நீரிலாவது, தண்ணீரிலாவது தலை முழுகலாம்.

இந்நோய் கண்டவர்கள் முதலில் கடுக்காயின் தோல், நிலாவரை இலை இவைகளின் கியாழத்துடன் நமது மருந்து விலைப்பட்டியில் கண்டுள்ள கணைக்கிருதமாவது, ஆமணக்குநெய்யாவது ஒரு அவுன்ஸ் கலந்து ஒரு வேளை சாப்பிட்டு மலத்தைக் கழித்துக்கொண்டு பின்னர் இம்மருந்தைச் சாப்பிடுவது நலம். நோய் நீங்கின பின்னர் நமது அமுத சுரபி இலேகியத்தைச் சிலநாள் அருந்துவதால் நோய் திரும்பி வராது. தேக பலமும் தாதுவிருத்தியும் உண்டாகும்.

வெள்ளை வெட்டை மருந்து விலை ரூபா 3 0 0

சகலவித குஷ்டநோய்களுக்கும் மேக நிவாரணகிருதம் என்னும்

குடிநெய்.

இம்மருந்து பதினெண் வகை குஷ்டநோய்கள், கருப்பத்தில் உண்டான மேக நோய்கள், நடுவில் தனது செய்கைத் தவறால் வந்த மேக நோய்களாகிய, வெள்ளை, கிரந்தி வகைகள், புண், சதை அடைப்பு, நீரடைப்பு, லிங்கபுற்று, யோனிப்புற்று, அறையாப்புக்கட்டி, கண்டமாலை, கருமேகம், செம்மேகம், வெண்மேகம்,தோல் தடித்தல், உணர்ச்சி அற்று

வாதநிதானி அருந்தி மலப்போக்கு நின்றபின் வெந்நீரில் உடம்பு குளிக்கலாம்.

வாதநிதானி சாப்பிட்டு நிறுத்தின பின்னர் மறுபத்தியம் இரண்டு நாள் இருப்பது நலம். இயலாதவர்கள் இச்சாபத்தியமாகவாவது இருத்தல் வேண்டும். பத்தியம் தீர்ந்தபின் நல்லெண்ணெய் தேய்த்துத் தலைமுழுகலாம்.

வாதநிதானி:— சாப்பிட விரும்புகிறவர்கள் தங்கள் நோயின் தன்மைகளை விளக்கமாக எழுதினால் அதற்குத் தக்க பக்குவங்களையும் மருந்தனுப்பும்போது எழுதி அனுப்பப்படும்.

வாத நிதானி விலை ரூபா 2 8 0

காய்ச்சல் குளிகை

(சுர மாத்திரை.)

மலைக் காய்ச்சல், முறைக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், நெறிக்கட்டி காய்ச்சல் முதலான சுரங்களை மிக விரைவினில் நீக்கக்கூடியது. சுரம் அடிக்கடி வந்து வயிற்றில் மண்ணீரல் பருத்திருப்பவர்கள் (காய்ச்சல் கட்டியுள்ளவர்கள்) இம் மாத்திரையைத் தொடர்ந்து 40-நாள் சாப்பிட்டுவரின் சுரக்கட்டி (ஸ்பிளீன்) தன் நிலையில் சுருங்கிவிடும். இஃது இரத்தத்திலுள்ள நச்சுநீர், முதலிய மேக நோய்களைப்போக்கி மெலிந்த உடம்பைத் தேற்றிப் பலத்தைத் தரும். இதை ஒவ்வொருவரும் அநுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

காய்ச்சல் வந்தவர்கள் முதலில் மலத்தைக் கழித்துக்கொள்ள வேண்டும். சுரம்காய்ந்து விட்டிருக்குஞ் சமயத்தில் குளிகையை வயதுக்குத் தக்கபடி, சிறுவர்கள் ஒரு குளிகையையும், பெரியவர்கள் இரண்டு குளிகையையும் வாயிலிட்டு, இஞ்சிச்சாறு, சுக்குநீர் (கியாழம்), வெந்நீர் இவைகளுள் யாதேனும் ஒன்றுடன் கலந்து விழுங்க வேண்டும். விழுங்குவதற்கு இயலாத சிறுவர்களும் மற்றவர்களும் குளிகையை இஞ்சிச்சாற்றில் அல்லது நிலவேம்பு கியாழத்தில் இழைத்துக்கரைத்து அருந்தலாம்.

காய்ச்சல் வருமுன் குளிர் மிகுதியாயிருக்கும்போது மிளகுத்தூள் கியாழம் சூடாய்ச் சாப்பிடக் குளிர் விரைவில் நீங்கும்.

பத்தியம்:—காய்ச்சல் நிற்கும் வரையில் புனற்பாகக் கஞ்சி, புழுங்கல் அரிசி நொய்க்கஞ்சி, கோதுமை நொய்க்கஞ்சி இவைகளில் ஏதாவதொன்றில், சிறிது உப்பு அல்லது இனிப்புச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். சோறு உண்ணக்கூடாது. காய்ச்சி ஆறின நீரைக் குடித்தல் வேண்டும்.

24 குளிகைகள் விலை ரூபா 2 0 0
12 குளிகைகள் விலை ரூபா 1 0 0

வாத நிதானி

வாத ரோகங்களுக்கு இணையற்ற மருந்து

இது அண்டவாதம், யானைக்கால், குடல்வாதம், பக்கவாதம், கீல் வாதம், நெறிக்கட்டி சுரம் முதலிய எண்பதுவகை வாதநோய்களையும், காக்கை வலி, வயிற்றுநோய் (குன்மம்,) மார்பு நோய், பக்கசூலை முதலிய வியாதிகளையும் மிகவிரைவில் கண்டிக்கக் கூடியது.

வாதநிதானி சாப்பிடும் அளவு, வகை: சுக்கு ஒரு அங்குலத் துண்டு, மூன்று கடுக்காயின் தோல், இரண்டு ஏலக்காய் இவைகளை நசுக்கி மண் சட்டியில் போட்டு, அரை ஆழாக்குத் தண்ணீர்விட்டு, அரைக் கால் ஆழாக்கு நீராகச் சுண்டக் காய்ச்சிச் சிறிது சருக்கரையிட்டு வடிக் கட்டின குடிநீரில் (கியாழத்தில்) வாதநிதானியில் பத்துத்துளி முதல் இருபது துளிவரையில் விட்டுக் காலையில் அருந்தல் வேண்டும். நாளொன்றுக்கு ஒருவேளையாக அவரவர் நோயின் தன்மைக்கும், உடம்பின் வன்மை, மென்மைக்குந் தக்கபடி மூன்றுநாள் முதல் ஐந்து நாள்வரையில் சாப்பிடலாம்.

வாதநிதானியைச் சிறுவர்களும், கிழவர்களும் மேற்காட்டிய அளவில் பாதி அருந்த வேண்டும்.

வாதநிதானி மலத்தைக் கழிக்கும் குணமுள்ளதாகையால் மலப்போக்கு உள்ள காலத்தில் இதனைச் சாப்பிடக் கூடாது.

வாதநிதானி சாப்பிட்டு மலம் மிகுதியாகப்போனால் சோற்றில் வடித்த கஞ்சி நீரும், சிறிது மோரும் கலந்து குடிக்க மலப்போக்கு நிற்கும்.

வாதநிதானி:— அருந்தும்போது பொதுப் பத்தியத்தோடு (இச் சாபத்தியம்) அடியிற் குறிக்கும் பத்தியப்படி நடந்து கொள்வது நலம்.

புழுங்கல் அரிசி கிடைக்காதவிடத்தில் பச்சரிசி அல்லது கோதுமை சேர்த்துக்கொள்ளலாம். துவரை, பச்சைப்பயறு, கத்தரி, முருங்கை, அவரை, பீர்க்கு, வெண்டைக்காய் முதலிய இளங்காய்கள், பொன்னாங்கண்ணி, அரிகீரை, முளைக்கீரை, புளியாரை முதலிய கீரைகள், உப்பு, மிளகாய், வெங்காயம், பசுநெய் அல்லது ஆட்டுநெய், கலப்புநெய், சோறு கரையக் காய்ச்சின புனற்பாகக் கஞ்சி, கோதுமை நொய்க் கஞ்சி இவைகள் ஆகும்.

சீரணி இலேகியம் உண்ட உணவை நன்ருய்ச் செறிக்கச்செய்து நாள்தோறும் மலத்தைச் செம்மையாய்க் கழிக்கும்; பசியின்மை, புளி, ஏப்பம், குலே எரிச்சல், வயிற்றுநோய், குன்மம், மார்புநோய், இடுப்பு நோய், இருமல், மயக்கம், வாந்தி, சுவையின்மை முதலிய நோய்களே நீக்கும். சீரணி இலேகியத்தை குழந்தை முதல் கிழவர் வரையில் ஆண் பெண் இரு பாலரும் அருந்தலாம்.

மலப்போக்குள்ளவர்களும், வயிற்றளேவு, சீதபேதி உள்ளவர்களும் சீரணிலேகியத்தை சாப்பிடக்கூடாது.

பெரிய டப்பி விலே ரூபா	3	0	0
சிறிய டப்பி விலே ரூபா	1	10	0

அயச்சிந்தூரம்

இரத்தக் குறைவுக்குச் சிறந்த மருந்து.

'இளேத்தவன் இரும்பைத் தின்பான்'

துரும்புபோல் இளேத்தவன்

இரும்பை அருந்தத் தூண்போல் ஆவன்'

இது இரத்தக் குறைவிஞல் உண்டாகும் பித்தபாண்டு, சோகை, காமாலே, வீக்கம், உடல் வெளுத்தல், மிகப்பருத்தல், உடம்புமிக இளேத்தல் முதலிய நோய்களே மிக விரைவில் போக்கி நல்ல இரத்தத்தை உண்டாக்கும். அயச்செந்தூரம் அருந்தும்போது, நமது சீரணி என்னும் இலேகியத்தையும் ஒருநாளேக்கு ஒருவேளே கலந்து சாப்பிடுவது நலம்.

அயச் செந்தூரத்தை, உணவு உண்ட பின்னர் ஒரு நெல்லிடை முதல் மூன்று நெல்லிடை வரையில், காலே மாலே தேனில் சாப்பிடவேண்டும். அயச்செந்தூரம் அருந்துகிறவர்கள் மாதம் இருமுறை மலக்கழிவுக்குச் சாப்பிடவேண்டும்.

அயச்செந்தூரத்துக்கு மிகுதியான பத்தியமில்லே. இயன்ற வரையி பொதுப்பத்தியம் (இச்சா பத்தியம்) இருப்பது நலம். புளிப்புள்ள பழங்கள், உணவுகள் மிகுதியாகச் சேர்க்கக்கூடாது.

40-நாள் மருந்து விலே ரூபா	5	0	0
20-நாள் மருந்து விலே ரூபா	2	10	0

அமுத சுரபி

சிறந்த தாது விருத்தி லேகியம்.

இஃது ஆண், பெண் இருபாலருக்கும் எவ்வகைக் காரணங்களி ளுலாவது விந்து கெட்டு, வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சி அடைந்து, இந்திரியக் கசிவு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், பொருந்த விருப்பின்மை, குறி துவளல் முதலிய துன்பங்களால் புத்திரப் பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி, அமுத மயமான உடம்பையும், வலிவையும், நல்லறிவையும், அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட் பேற்றையும், பொன் போன்ற மேனியையும் தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

அமுத சுரபி உயர்ந்த பல்வகைப் பிசின் வகைகள், வித்து வகைகள், அரிய மூலிகைகளின் சத்துக்கள் முதலிய அரும்பொருள்களைக் கொண்டு செய்துள்ளது. இஃது அருந்துவதற்கு இனிமையாகவும், இலேகிய பாகமாகவும் செய்யப் பட்டுள்ளது.

அமுத சுரபியை காலை மாலை நெல்லிக்காயளவு நெய், அல்லது வெண்ணெய் கலந்து. அருந்துவது நலம், தனியாகவும் அருந்தலாம்.

அமுத சுரபியை அருந்தி அநேகர் பெருந்துன்பங்களி னின்றும் நீங்கி இன்பமடைந் திருக்கின்றனர்.

40-நாள் மருந்து விலை ரூபா	5	0	0
20-நாள் மருந்து விலை ரூபா	2	12	0

சீரணி இலேகியம்

நமது உயிரைப் பற்றி ஆணவ மலம் நீங்காது அடிக்கடி துன்பத்தில் அழுத்துவதைப் போல்; நமது உடம்பிலிருந்து நாள்தோறும் கழியவேண்டிய மலம் நீங்காமல் உடம்பில் தங்கித் தீமை செய்குவதால் நாம் அடிக்கடி நோயால் வருந்துகின்றோம். ஆதலால் மல பந்தத்தை நாள்தோறும் கழிப்பதே நோயற்ற வாழ்க்கைக்கு முதற் காரணமாகும்.

சீரணி இலேகியம் யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழித்து, மலச்சிக்கலால் வரும் நோய்கள் எல்லாவற்றையும் நீக்கும் ஓர் அருமருந்து.

கம், ஒற்றைத் தலேநோய், பிடரி நோய் முதலியவைகளேயும், இளமை யில் மயிர் நரைத்தல், மயிர் உதிர்தல், தலேவழுக்கை, புழுவெட்டு, பொடுகு முதலியவைகளேயும், மூக்கைப்பற்றி வரும் பீனசநோய்களே யும், பல்லின்வேரைப் பற்றிவரும் நோய்களேயும்; பொதுவாகக் கழுத் திற்கு மேற்பட்ட எல்லாப் பிணிகளேயும் கண்டிக்கும், மிகுந்த மூளே உழைப்புள்ளவர்களுக்கும், கல்வி பயிலும் மாணவர்களுக்கும், இத் தைலம் மூளேச்சோர்வை நீக்கிக் குளிர்ச்சியைத் தரும், தலேமயிரைக் கறுக்கச்செய்து மிகவிரைவில் வளர்க்கும், பக்கவாதம், காசம், இரு மல், நீர் வியாதி (மதுமேகம்) கரப்பான், சொரி, சிரங்கு, கைகால் எரிச்சல், தேமல், கற்றுழைநாற்றம் முதலிய நோயுள்ளவர்கட்கு இந்தச் சந்தனுதித் தைலம் இன்றியமையாது வேண்டப்படுவதா கும். வைசூரி நோயால் உடல் வெதும்பி, இரத்தம்சுண்டி, மயிர் உதிர்ந்து, அம்மைத் தழும்பினல் அழகற்று வலிவற்றிருப்பவர் கட்கு இது மிக விரைவில் அக்குறைகளே நீக்கி நலந்தரும், நோயில்லாத ஆண் பெண் சிறியோர் முதல் முதியோர்வரை எல்லோ ரும் இதனேப் பயன்படுத்தலாம். இது சூரியவெப்ப மிகுந்த கோடைக் காலத்திலும், மற்றக் காலங்களிலும் யாதொரு ஐயமுமின்றி நாள் தோறும் தலேயிற்றடவி மயிர் வாரிக்கொள்ளவும், தலே முழுகவும் படும்; இனிய மணமும் உயர்ந்த குணமுமுடையது.

இத் தைலத்தை காலேயில் தேய்த்துக்கொண்டு இளஞ்சூடான வெந்நீரில் தலே முழுகலாம். இச்சாபத்தியம். கண், காது, மூக்கு முதலிய வெளி உறுப்புக்களில் ஏற்பட்டுள்ள நோயின் விவரத்தை அறிவித்தால் அதற்குத் தக்க மற்ற பக்குவங்களும் தெரிவிக்கப்படும்.

இம் மகா சந்தனுதித்தைலத்தைப் பல அரசர்களும், பல ஆங்கில மருத்துவர்களும், மற்றும் பல செல்வர்களும் ஆண்டு அனுபவித்த நற்குணங்களே எழுதி இருக்கின்றூர்கள் அவைகளே நமது மருந்து விலேப்பட்டியின் நன்மதிப் பிதழ்களில் காணலாம.

24-அவுன்சு ரூபா	4	4	0
12-அவுன்ஸ்	2	4	0
6-அவுன்சு	1	3	0

எட்டயபுரம் அரசர்

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்கள் தமிழ் வைத்திய முறையில் மிகத் திறமையும். அநுபவமு முள்ளவர். எனக்கு சென்னையில்நேர்ந்த கொடிய பல் நோய்க்கு பலமருந்துகள் உபயோகித்தும் பயன்படவில்லை. கடைசியாகப் பண்டிதர் ஆனந்தம் அவர்களின் பற்போடி, ராயல் டூத் பேஸ்ட் என்னும் பல் துலக்கும் மருந்தினை உபயோகித்து விரைவில் நலமடைந்தேன். அவருடைய அமுத சுரபி என்னும் தாது விருத்தி மருந்து, போன் மருந்து சந்தனாதித் தைலம் முதலியவைகள் எவ்வகையிலும் திருப்தியைத் தருகின்றன. நமது நன்மதிப்புக் குறியாகத் பொற்றோடா. பொற்பதக்கம் முதலிய வெகு மானங்களும் செய்துள்ளோம்."

சேற்றூர் ஜமீன்தார் அவர்கள் எம். எல். சி.

சென்னை, பண்டிதர். எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் வைத்திய சாலையில் செய்யப்படுகிற அரச அமுத சுரபி என்னும் தாது புஷ்டி மருந்து என் அனுபவத்தில் மிகவும் நல்லகுணத்தை உண்டு பண்ணுகிறது. தாது விருத்தி இலேகியங்களுக் கெல்லாம் இ[illegible] சிறந்ததாகச் சொல்வதில் தடையில்லை. நான் அவருடைய [illegible] மருந்து, மகா சந்தனாதித் தைலம், பற்போடி முதலியவற்றையும், உபயோகித்திருக்கிறேன் அவையும் நல்லமருந்துகளே.

மகா சந்தனாதித் தைலம்

வெண்பா.

"இன்ப மணம்வீசும் இளநரையத் தான்தடுக்கும்
துன்பமெலாந் தூர விலக்கிவிடும்—அன்பாக
ஆநந்த ரின்சந்த னாதித்தை லந்தன்னை
ஆநந்த மாயாண்டு பார்"

இம் மகா சந்தனாதித் தைலம் கண்சிவத்தல், கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், இமை தடித்தல், கண்ணிற் பூவிழுதல், படலங்கள், பார்வைக் குறைவு முதலிய கண்ணோய்களையும், காது இரைச்சல், காதில் நீர்வடிதல், சீழ்வடிதல், நோதல், கேள்விக் குறைவு (காது மந்தம்) முதலிய செவிநோய்களையும், மூளையின் வலிவுக் குறைவு, மயக்

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ்

சர். சி. சங்கரன் நாயர் அவர்கள் சி. ஐ. இ;

பண்டிட் ஆனந்தம் பிள்ளை அவர்களின் வைத்தியசாலையில் செய்யப்படும் பற்பொடியை நான் உபயோகித்து வருகின்றேன், அதனால் எனக்கு மிக நன்மை யுண்டாகியது. அவருடைய மகா சந்தனாதித் தைலம் எனது குடும்பத்தில் உபயோகப்படுகிறது.

சர். சி. சங்கரன் நாயர் அவர்களின் மனைவி, (லேடி சங்கரன் நாயர்)

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை உபயோகித்து வருகிறேன். அது மிகவும் குளிர்ச்சியாயும் இனிய மண முள்ளதாயும் இருக்கிறது.

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ்

சர். டி. சதாசிவ ஐயர் எம். ஏ. பி. எல். அவர்கள்

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் புகழ்பெற்ற பரம்பரை மருத்துவ குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய மருத்துவ சாலையில் செய்யப்படும் மருந்துகளில், ஜீரணி லேகியம், மகா சந்தனாதித் தைல[illegible]ல்நார் பற்பொடி முதலியவைகளை நானும் எனது குடும்ப[illegible]ரும் உபயோகித்து அதன் குணத்தைப்பற்றி மிக மகிழ்ச்சி அ[illegible]ன்றோம். இவர் நமது நாட்டு மருத்துவத் தொழிலுக்குரிய மருத்துவ வகுப்பினர்களை நல்ல மருத்துவர்களாக்கவும் மிகப் பாடுபட்டு வருகின்றார்.

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ்

ஆனரபில் டி. வி. சேஷகிரி ஐயர் அவர்கள்

"பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் சந்தனாதித் தைலம் கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் உண்டு பண்ணுகிறது."

இராமநாதபுரம் அரசர் எம். எல். சி (ராஜ ராஜேசுவர சேதுபதி அவர்கள்)

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை வெகுகாலமாக எமக்குத் தெரியும். அவர் வழி வழி வந்த மருத்துவ குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய அமுத சுரபி என்னும் தாதுவிருத்தி லேகியம், மகா சந்தனாதித் தைலம், ஆனந்த பாம், பற்பொடி முதலிய மருந்துகளை உபயோகித்துக் குணமடைந் திருக்கின்றோம். அதைப் பலர்க்கும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

டாக்டர் டி. வடிவேலு அவர்கள்

என்னிடம் வரும் நோயாளிகள் பலருக்கும் பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தைச் சிபார்சு செய்ததில், அவர்களில் அநேகர் அதைப்பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள். மேலே சொல்லிய பண்டிட் அவர்களை வெகு காலமாக எனக்குத் தெரியும். அவருடைய மருந்துகள் வெகு குணமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன.

டாக்டர் எஸ். திருவேங்கடம், எல். எம். பி.

மெடிகல் ஆபீஸர், ராயகடா கஞ்சம் ஜில்லா.

அன்புள்ள பண்டிதர் ஆனந்தம் அவர்கட்கு வந்தனம். தங்களுடைய மகா சந்தனாதித் தைலத்தை நான் உபயோகித்து நல்ல குணத்தைக் கண்டேன். பலருக்கும் அதை நான் தெரிவித்தேன், அதை வாங்கி உபயோகித்தவர்களெல்லாம் அதன் நற்குணத்தைப் பற்றிப் புகழ்ந்து கூறுகின்றார்கள். தற்காலம் சந்தனாதித் தைலம் என்ற பெயரால் பல போலித் தைலங்கள் வியாபாரத்திற்காக விளம்பரப்படுத்துகின்றார்கள், அதனை வாங்கிப் பலர் மோசம் போகிறார்கள். தங்களுடைய மகா சந்தனாதித் தைலத்தின் பெருமையை எல்லோரும் அறியும்படி பல பத்திரிகைகளில் தாங்களும் விளம்பரம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஐக்கோர்ட்டு ஜட்ஜிகளின் அபிப்பிராயம்

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ்

டாக்டர் சர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

கே. டி., சி. ஐ. இ.

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை எங்கள் குடும்பத்தில், உபயோகித்துமிக நன்மைஅடைந்தோம். அது மனோகரமாக இருப்பதோடு நல்ல குணமும் செய்கிறது நெடுநாளாக அத் தைலத்தையே உபயோகித்து வருகின்றோம். அவருடைய மற்ற மருந்துகளை, பலரும் உபயோகித்து நலமடைவதாகத் தெரிகிறது."

டாக்டர் ஏ. என். வெர்க்கீஸ், எல். எம். எஸ்.

"பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின் சந்தனாதித் தைலத்தை உபயோகித்திருக்கிறேன். அது குளிர்ச்சியாயும் இனிய வாசனை யுள்ளதாயு மிருக்கிறது."

டாக்டர் சி. ஆர். குப்புசாமி, எல். எம். பி.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களைச் சென்ற பத்து ஆண்டுகளாக நான் நன்கறிவேன். அவர் மிகவும் சிறந்த குணமுள்ள சித்த மருந்துகளைத் தயாரித்து, அவற்றைப் புத்தி கூர்மையாய் பிறருக்குக் கொடுத்து உதவி வருகின்றார். அவருடைய மகா சந்தனாதித் தைலம் மிகச் சிறந்த குணமுள்ளது. அதை என்னிடம் வரும் பல நோயாளிகளுக்குச் சிபார்சு செய்கிறேன். தமிழ் மருத்துவத்தை விருத்தி செய்வதில் அவருக்குள்ள விருப்பம் நிறைவேற வேண்டுமென்பது எனது விருப்பமாகும்.

டாக்டர். எம். பி. சங்கரசுப்புப் பிள்ளை எல். எம். எஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் சித்த மருந்துகள் சிலவற்றை நான் உபயோகித்துப் பார்த்திருக்கின்றேன். 1925-ம் வருட[illegible] இரண்டரைமாதஞ் சென்னையில் தங்கும்படி நேரிட்டகாலத்தில் [illegible]ர்களுடைய தரும வைத்தியசாலையில் நாள்தோறும் வைத்தியஞ் செய்துக்கொண்ட பலரையும், அவர்கள் மருந்துகளை வாங்கி உபயோகித்த சிலரையும் நேரில் பார்த்திருக்கிறேன். தமிழ் மருந்தின் பெருமையும் பண்டிட் ஆனந்தம் அவர்களின் திறமையும் வியக்கத் தக்கதாய் இருக்கின்றது.

டாக்டர் வி. எல். குப்புசாமி முதலியார், எல். எம். பி.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகாசந்தனாதித் தைலத்தை எனது குடும்பத்தில் உபயோகித்திருக்கின்றேன். என்னிடம் வரும் நோயாளிகளுக்கும் நான் அதைச் சிபார்சு செய்கின்றேன். அதன் குணத்தைப் பற்றிப் பலரிடத்திலும் மிக நன்மையாகக் கேள்விப்பட்டு வருகிறேன். குளிர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும், மருந்து குணத்திற்கும், சிறந்த மணத்திற்கும், அதைச் சாதாரணமாய் மயிருக்குத் தடவிக் கொள்ளுவதற்கும், தலை முழுகுவதற்கும் மிக நல்லதென்று கூறுகின்றேன். முக்கியமாய் நோயினால் மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மயிர் வளர்வதற்கும் அது மிகவும் குணமுள்ளதென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

டாக்டர் பி. என். ரங்கசாமி, எல். எம். எஸ்.

வைத்தியர், கண் வைத்தியர்.

(ஜெனரல் அண்டு ஆப்தல்மிக் ஸர்ஜன்) சென்னை.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை கண்ணேயுள்ளவர் பலருக்கு நான் சிபார்சு செய்திருக்கிறேன் அதனால் அவர்கள் நன்மை அடைந்திருக்கின்றார்கள். பண்டிதரின் பற்பொடியை நான் உபயோகித்திருக்கின்றேன், அது பற்களை நன்றாக சுத்தப்படுத்துகிறது, பல்லில் இரத்தம் வருதல், சீழ்வருதல் முதலியவைகளையும் கண்டிக்கிறது, அவருடைய மருத்துவசாலையில் தயாராகிற மற்ற மருந்துகளும் மிக நல்ல முறையில் செய்யப்படுகிறதென்பதை நான் பார்த்திருக்கிறேன்.

ராவ்பகதூர்

டாக்டர் சி. நடேச முதலியார் அவர்கள்

எல். எம். எஸ். சென்னை.

"பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களிடம் எனக்கு சுமார் இருபது வருடங்களாகப் பழக்கமுண்டு. அவர்சிறந்த [illegible] மருத்துவக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவர் சித்த வைத்தியத்தில் பெரும்புலமை வாய்ந்து, மனிதர்களுக் கேற்படும் பிணிகளைப் போக்கி இன்பத்தை விளைவித்துக் கொண்டு வருகின்றார். அவருடைய மகா சந்தனாதித் தைலத்தையும், கல்நார் பற்பொடியையும் உபயோகித்துப் பார்த்ததில், எவ்விதமான நன்மைகளுண்டாவதற்காக அவைகள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவ்விதமான நன்மைகளெல்லாம் அவற்றால் உண்டாகக் கண்டேன்.

டாக்டர் ஜி. நாராயணசாமி எல் எம் எஸ்.

சென்னை.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் மகா சந்தனாதித் தைலம் குளிர்ச்சியா யிருப்பதுடன் மயிரை வளரச் செய்கிறது ராயல் டூத் பேஸ்ட் என்னும் பல் விளக்கும் மருந்து மனோகரமாயும் மிக்க உபயோகமுள்ள தாயுமிருக்கிறது."

டாக்டர் ஜெ. எம். ஞானவொளி
பி. ஏ., எம். பி. ஸி. எம். சென்னை.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் மகா சந்தனுதித் தைலம், அமுத சூரபி முதலிய மருந்துகளை நான் உபயோகித்துப் பார்த்தேன். அவை நேர்த்தியாய்ச் செய்யப் பட்டிருக்கின்றன; நல்ல மருந்துகள்."

டாக்டர் டி. எஸ். இராமசாமி அவர்கள்
பி. ஏ. எம். பி. ஸி. எம்.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளையவர்கள் கீர்த்தியுள்ள தமிழ் வைத்தியக் குடும்பத்தினர், அவருடைய அமுத சூரபி என்னும் தாது விருத்தி மருந்து. சந்தனுதித் தைலம், ஹேர் ஆயில், ராயல் டூத் போஸ்ட் என்னும் பல் விளக்கும் மருந்து முதலியவைகள் சாஸ்திர முறைப்படித் தயார் செய்யப் பட்டிருக்கின்றன. குறித்த நோய்களைக் கண்டித்து நல்ல குணத்தைத் தருகின்றன."

டாக்டர். ஜெ. ஆர். ஆசீர்வாதம் அவர்கள்
பி. எ. எல். எம். எஸ்.

கிருஸ்டியன் கலாசாலை, மேடிகல் ஆபீஸர் சென்னை

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுடைய மகா சந்தனுதித் தைலம், ராயல் டூத் போஸ்ட், கேசாமிர்தம், கல்நார் பற்பொடி முதலியவைகளை நான் உபயோகித்து பரீட்சித் திருக்கிறேன் அவைகள், குறித்த நோய்களைப் போக்கி அதிக நன்மையடையச் செய்கின்றன. அருமையான சரக்குகள் அவைகளில் சேர்க்கப்பட்டிருந்தும் சொற்ப விலைகட்கு விற்பனை செய்யப்பட்டு வறுகிறது, இவைகள் அநேகருக்குப் பிரயோசனத்தைக் கொடுக்குமென நிச்சயிக்கிறேன்.

டாக்டர் ஜே. என். ராஜ ரத்தினம், பி. ஏ. எல். எம். எஸ்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனுதித் தைலத்தை நெடுநாளாக உபயோகித்து வந்திருக்கின்றேன். அது மிக ஆரோக்கிய முள்ளதாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கின்றது. அதன் இனிமையான மணமும் எல்லோராலும் விரும்பத் தக்கதாயிருக்கின்றது.

களை ஆடையின்றி வைத்திருக்கிறார்கள். சீமான்கள் வீடு முதல் ஏழைத்தொழிலாளர் கூலிக்காரன் வீடு வரையில் எங்குமிப்படியே வழக்கமாயிருக்கிறது. சாதாரண மென்றெண்ணும் விஷயங்களில் குழந்தைகளின் சுகத்தைப்பேண வேண்டிய முறை தெரியாமை யினால் தான் நோய் உண்டாகிறது. "நோய்க்கிடங் கொடேல்" என்ற நீதி மொழியை மறவாமல் குழந்தைகளை வளர்த்து வந்தால் இளமையிலும், முதுமையிலும், இப்போது நேரிடும் பல பிணிகள் வராமல் தேகம் வலுத்திருக்கும். சீமான்கள்தான் தங்கள் குழந்தை களுக்குத் தகுந்த உடுப்புகள் செய்வித்துப் போடக்கூடும்; மற்ற ஏழைகள் என்ன செய்வார்கள் என்று சொல்லலாம். நமது நாட்டில் எவ்வளவு ஏழையாயிருந்தாலும் அரைப்பணத்துப் பொன் நகையா வது நமது நாட்டுப் பெண்கள் அணியாமலிருக்க மாட்டார்கள் அவர்கள் மக்களுக்கும் பொன்னாவது வெள்ளியாலாவது ஒரு. நகையேனும் பூட்டாதிருக்க மாட்டார்கள். அக்குழந்தைகளைக் கள்வர் கொண்டு போய் நகையைக் கழற்றிக்கொண்டு கழுத்தை முறித்துப் போடவும் விடுவார்கள். அறிவில்லாத தாய்மார் ஆடை யைவிட ஆபரணம் அருமை என்றெண்ணுகிறார்கள். ஏழை[illegible] லும் அவரவர் சக்திக்குத் தக்கதாகத் தம் குழந்தைகளுக்கு [illegible]டுப்பு உடுத்தலாம்.

நம்நாட்டில் பல குழந்தைகளுக்கு மூக்கிலிருந்து எப்போதும் சளி வடிந்து கொண்டிருப்பதையும், அச்சளியை அக்குழந்தைகள் நாவினால் நக்குவதையும் யாரும் கவனித்திருக்கலாம். இது தகுந்த உடுப்புகள் உடுத்திக் குழந்தையின் உடம்பைப் பேணாததினாலுண் டாகிற கெடுதியும் அதற்கு ஒரு காரணமாகும்.

குழந்தைகளுக்கு உடுப்பு செய்வதில் நான்கு விஷயங்கள் கவனிக்க வேண்டும்.

1. துணி மெல்லியதாய் இருக்க வேண்டும். சிசுவின்தோல் மிக மென்மையாதலால் முரட்டுத் துணிகள் தோலிலழுத்தி உறுத் தித் தோல் கன்றிப்போய் காய முண்டாகும். மேலும் பலமில்லாத சிசுக்கள் முரட்டுத் துணிகளால் செய்த உடுப்புகளின் பளுவைத் தாங்கமாட்டாமல் வருத்தப்படும்.

வருத்தமுந் திகிலு முண்டாகி, அது கூப்வென்று கத்தி அரை நாழிகை வரை விடாமல் அலறுகிறதை யாவரும் பார்த் திருக்கலாம். இது மிகக் கொடிய வழக்கம். குளிப்பாட்டுதல் குழந் தைக்கு மகிழ்ச்சியும் இன்பமுமாயிருக்க வேண்டியதல்லாமல் குழந் தைக்குப்பயங்கரமும் பெருந்துன்பமுமாய் மாறக்கூடாது. முழுக் காட்டத் துவங்கியவுடனே குழந்தை திகிலடைந்து கூச்சலிடுகின்ற வழக்கம் மிகக்கொடியது. இதை முற்றிலும் விட்டுவிட வேண்டும்.

மூக்கையும் காதையும் பிடித்திழுக்கும்போது வலிக்கிற தென் றுவது, மிக வெப்பமான வெந்நீரைக்குபீரென வார்க்கும் போது சூடு அதிக மென்றுவது, மூச்சடக்கக் கூடவில்லை யென்றுவது குழந்தை தன் துன்பத்தைச் சொல்லிக்கொள்ளக் கூடாமையினுல் அது தனது மொழியாகிய அழுகையினுலே தன் வருத்தத்தை வெளிப்படுத்துகிறது. இதையறியாமல் மேன் மேலும் அப்படிச் செய்யும் அறிவில்லாத தாய்மார்கள் இனியாவது இது கருணையற்ற மூடச்செய்கை யென்றறிந்து விட்டுவிடுவார்களாக.

குழந்தைகட்கு எண்ணெய் தேய்க்கிறதென ஆரம்பித்து. கண்ணுக்குக் கட்டுகிறதென்றும், தலையிலும், கண்களிலும், மூக்கி லும், காதுகளிலும் எண்ணெயைத்தளும்ப வார்த்துத்தலையைத் தானே நிமிர்த்திக்கொள்ளக் கழுத்தில் வலிவில்லாத சிசுவுக்கு உச் சியில் உள்ளங்கையை வைத்துத்தடதட வென்று கீரைகடையும் மத்துப்போலத் தலை நாலாபக்கமும் சுழன்று உருண்டு வரும்படி தேய்க்கிறதும், பெருவிரல்களினுல் கண்களையும் மூக்கையும் அழுந்த அழுந்தத் தேய்க்கிறதும், காதுகளை உள்ளங்கைகளால் காகரவென்று தேய்க்கிறதும் எவ்வளவு குரூரமான செய்கை களென்பதை அறியாமற் செய்கிருர்கள்.

குழந்தை பிறந்து எழெட்டுமாதம்வரை தலை உச்சிக்குழியில் தோல்மாத்திரம் மூளையை மூடிக்கொண்டிருக்கும். அந்த இடத் தில் கையைவைத்து அழுந்தத் தேய்க்கும் போது மூளை கலங்கிப்போம். மூளை உயிர் நிலைக்கு முக்கியமான பொருளா தலால் அதற்கு ஒரு கெடுதி நேரிட்டால், சிசுவின் உயிருக்கே ஆபத்து நேரும். இதுவன்றி கண்ணனது உடலுக்கு மிகவும் அவ

சியமும் அருமையுமான உறுப்பாகும். அதையிப்படி அனுவசியமாக அழுத்தி அழுத்தித் தேய்க்கும் போது விழியின் பின் புறத்திலிருக்கும் கொழுப்புடன் கூடிய ஜவ்வை அது தாங்கக்கூடிய அளவுக்கு மிஞ்சி ஒரு சமயம் அழுத்தி விட்டால், உடனே கண்ணுக்கும், அதன் மூலமாய் உயிருக்கும் நஷ்டம் நேரிடும். அல்லது இப்படித் தேய்க்கும் போது கண்ணுக்கு அதிக நோயுண்டாகும். நோகிறதென குழந்தை சொல்ல மாட்டாமல் வீறிட்டழுகிறது மேலும் கண், மூக்கு, செவிகளுக்கு எண்ணெய் கட்டுவதினால் பயனில்லை. இது வீண் வேலை. இவைகளெல்லாம் அறியாமையினால் செய்யும் செய்கைகள். இனிமேலாவது பெற்றோர் இத்தீய வழக்கங்களை விட்டு முந்திய பாகத்தில் சொல்லிய முறைப்படி குழந்தைகளை நீராட்டு வித்தல் வேண்டும்.

வெப்பம் மிகுந்த நமது நாட்டில், தோல் சற்று உலர்ந்து சுரசுரப்பாகும். ஆகையினால் முக்கியமாய் தலையிலும், சிறிது உடம்பிலும் எண்ணெய்ப்பத மிடுவது நலம். இரும்பு, பரச்சாமான்களுக்கு எண்ணெய் வருணம் பூசுவதுபோல எண்ணெயைத் [illegible]ப்பது நன்றல்ல. ஏனென்றால் இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தி[illegible] சொல்லியபடி உடம்பிலிருந்து வியர்வை வெளியேறுங் குழாய்களினுள் எண்ணெயிறங்கி வியர்வைக்கால்களிலிருந்து வியர்வை வெளியேறாமல் அக்குழாய்களை அடைத்துவிடும். அப்போது வியர்வை உள்ளடங்கி நோய்க்கிடமாகும். சிகைக்காய், இலுப்பைப்பிண்ணாக்கு அறைப்பு முதலியவை தேய்த்துக்கழுவினாலும் மேலேயிருக்கிற எண்ணெய் போகுமேயன்றி, வியர்வைக் குழாய்களினுள்ளிருக்கும் எண்ணெய் வெளியேறமாட்டாது. ஆகையினாலே மிகுதியாக எண்ணெய் தேய்க்காமல் சற்று பதமிருக்கத்தக்க விதமாய் லேசாகத் தடவவேண்டும். அதையும்சிகைக்காய்அறைப்பு அல்லது (சோப்பு) சவர்க்காரம் தேய்த்துக்கழுவினால் எண்ணெய் கழிந்து விடுவது மன்றி, தோலும் அழுக்கறச் சுத்தமாகும். வெள்ளைக்கார குழந்தைகளுக்கு எண்ணெய் ததும்பத் தேய்க்கப்படுகிறதா? கண், மூக்கு, செவிகளில் எண்ணெய் கட்டப்படுகிறதா? மஞ்சள் நலுங்குமா தேய்க்கப்படுகிறதா? இல்லை! நமது குழந்தைகளிலும், அவர்களுடைய குழந்தைகள் நன்றாயிருக்கின்றனவே! அவை

பொன்னை மருந்துக்காகச் சிந்தூரம் அல்லது நீறு (பஸ்மம்) செய்ய சுத்திசெய்து புடமிட்டெடுக்க வேண்டும்.

பொன் சுத்தி வகை

பொன் தகட்டின்மேல் செம்மண்ணைக் குழைத்துப்பூசி, கரி நெருப்பில் நெருப்பைப்போல் பழுக்கக்காய்ச்சினுல் சுத்தியாகும்.

பொன்னைச் சிறிது கனமாய்த் தகடடித்துக் கரிநெருப்பில் பழுக்கக் காய்ச்சி, நல்லெண்ணெயில் துவைக்க வேண்டும். நன்ருய்க்குளிர ஆறினபின் மறுபடியும் முன்போற் பழுக்கக்காய்ச்சி முன்போல் துவைக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் எண்ணெயைப் புதிதாக வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வகை ஏழுதடவைகள் காய்ச்சி நல்லெண்ணெயில் துவைக்க பொன் சுத்தியாம். இவ்விதமே வெள்ளியையும் சுத்தி செய்து கொள்ளலாம்.

மற்ருெரு முறை

கறையான் புற்றுமண், செங்கற்பொடி, ஓட்டடை, காவிமண், ஆகியவைகளைச் சமபாகம் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் காடியையும் எலுமிச்சம் பழச்சாற்றையும் சமமாகக் கலந்து சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமமரைத்துத் தகட்டின்மீது கனமாகப் பூசிக் கரி நெருப்பில் வைத்து நன்ருக ஊதிப் பழுக்கக் காய்ச்சவேண்டும். இவ்விதம் செய்தெடுத்து ஆறவைத்து மேலுள்ளவைகளை நீக்கிச் சுத்திசெய்துகொள்ளவும். நன்ருய்ச் சுத்தியாகவில்லையெனத்தோற்றுமாயின் முன்போல மற்ருெரு தடவையும் சுத்திசெய்து கொள்ளவும்.

இந்துப்பு, காட்டெருச்சாம்பல், கறையான் புற்றுமண், செங்கற்பொடி, காவிமண், புகையூறல் ஆகிய இவைகளைச் சமபாகமாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மூன்றுநாளரைத்துப் பொற்றகட்டின்மீது பூசிக் கரிநெருப்பிற் பழுக்கக் காய்ச்சியெடுத்துக் கொள்ளச் சுத்தியாம்.

பொன்நீறு (தங்கபற்பம்)

சுத்திசெய்த தங்கம் வராகனெடை 4-இதனை வட்டமான தகடாகச் செய்து கொள்ளவேண்டும். சுத்திசெய்த பாதரசம் வராகனெடை 4-சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் வராகனெடை 4-இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டு, கச்சினுரி யிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமமரைத்து முன் தகட்டின்மேலெங்கும் சமமாகப்பூசி உலர்த்

திக்கொண்டு மேற்படி கச்சினுரிப் பட்டையை மைபோலரைத்து அதன் மேல்தடவி ஒன்ருெடொன்றுவாய்மட்டமாய்ப்பொருந்தக்கூடிய இரண்டு குகைகள் செய்து, முன் சித்தப்படுத்தி யிருக்கிற தகட்டை ஒருகுகைக் குள்வைத்து அதன்மேல் மறு குகையால்மூடி வாய் நன்ருய்ப் பொருந் தும்படியாகச்செய்து கொள்ளவேண்டும். பின்னர் இக்கவசம் கொள்ளும் படியான இரண்டு குகைகள், களி மண்ணுற்செய்து ஒன்றிற்குள்வைத்து மறு குகையால் மூடி, இரண்டுவாய்களும் ஒன்ருகப் பொருந்தும்படியா கச்செய்து, அதன்பிறகு குகை முழுவதும் ஏழுசீலை மண்செய்து, ஈரமு லர்ந்தபின் ஒருகஜ அகலம் ஒருகஜ ஆழமுள்ள ஒருகுழிதோண்டி, அதில் பாதி காட்டு எருமுட்டையை நிறைத்து, அதன்மேல் நடுவில் முன்கவ சத்தை வைத்து, அதன்மேல் காட்டு எருமுட்டைகளைக் குழிநிறையப் போட்டுப் புடமிடவும்.

இரண்டு மூன்று நாட்கள் வரையில் தீயிருக்கும். மறுநாள் நன் ருகக்குளிர ஆறவிட்டு எடுத்துக் கவசத்தை பதனமாகப்பிரித்து முன் போல் பாதரசத்தையும் கெந்தகத்தையும் முன்னளவே, முன்சாற்ருல ரைத்து முன்போலவே கவசித்து முன்போலவே புடமிட்டு எடுத்துமூன் ரும் தடவையும் முன்போலவே செய்து புடமிட்டெடுக்க உயர்ந்த பற்ப மாகும். இதனைக்கண்ணுடிக் குப்பியில் காற்றுப்புகாமல் பதனமாய் வைக்க வேண்டும்.

பொன் பொடி

செய் முறை:—தங்க ரேக்கை, தேனிலாவது, ஸல்பேட் ஆவ் பொடாஷ் என்னும் உப்புடனுவது கலந்து, அரைத்து பிறகு நீர் விட்டுக் கழுவி விட்டால், தங்கம் மிக சன்னக்கறுப்புப் பொடியாய் நிற் கும். அத்தங்கப்பொடியை $\frac{1}{4}$-முதல் ஒருகிரேயின் அளவு எடுத்து, குல் கந்துடன் சேர்த்து, மாத்திரைசெய்து, மேகரோகங்கள், கண்டமாலை ரோகங்கள், நாள்பட்ட சருமரோகங்கள் இவைகளுக்கு நாள் ஒன்றுக்கு 2-3–தடவை கொடுக்கலாம். இந்தப்பொடியை பல்லிலாவது நாக்கிலாவது தேய்த்து உடம்பில் பற்றும்படிச் செய்கிறதும் உண்டு. கொருக்கு ரணத் தின்மேல் போட்டால் புண் ஆறும்.

பொன் பொடி

வேறு முறை:—வெடியுப்புத் திநீரில் பொன்னைக்கரைய வைத்து மெதுவாய் அந்நீர் வற்றும்படி காயவைத்தால் மஞ்சள் நிறமுள்ள பொடி களாக விளையும். இது தண்ணீரிலும், சாராயத்திலும், (ஆல்ககாலிலும்) ஈதரிலும் கரையும். இது கரைந்திருக்கும் நீரால் தோலையாவது வேறெந்த இந்திரப் பொருள்களையாவது நனைத்தால் காய்ந்தவுடன் அது செந்நீல நிறங்கொள்ளும்.

தங்கரஸாயனம்

செய் முறை:—24-கிரெயின் தங்கப்பொடி, ஒரு அவுன்ஸ் சருக் கரைப்பாகு இவைகளைச் சேர்த்து நன்ருகக் கலந்துக்கொள்ளவும்.

மதுசாரம்
(கள், சாராயம், பிராந்தி, ஒயின் முதலிய மயக்கப் பொருள்கள்)
மனிததேகத்திற்கு விஷமாகும்

(ஸ்ரீமான். ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது)

தன்னடக்க மென்பதென்ன? What is Self-control?

(காபிரைட்)

தன்னடக்க மென்றால் தன்னையடக்கி யாளுதல், அதாவது, உடம்பின் ஒவ்வொரு பகுதியையும் தன்வசத்தில் வைத்திருப்பதாம். அது மனிதனை மற்றெல்லாப் பிராணிகளுக்கும் மேலானபதவியில் வைக்கின்றது. அஃது, அவனுக்கு "இன்னது வேண்டும்" என்று சொல்ல விருப்ப முண்டாகும்போது "அது வேண்டாம்" என்று சொல்ல அல்லது அவன் துர்ச்செய்கையைச் செய்ய விரும்பினும் அதைத் தவிர்த்து நற்செய்கையைச் செய்யச்சொல்லச் சக்திகொடுக்கிறது. அஃது, அவனுடைய எண்ணங்கள், சொற்கள், குணம், பழக்க வழக்கங்கள், ஆட்டம், வேலை இவற்றை யடக்கியாளுகின்றது. அது, நற்குணத்திற்கு மூலமாயிருக்கிறது. அஃது, ஒருவனைப் பெருமானாகவும், ஒருத்தியைப் பெருமாட்டியாகவும் செய்கிறது. தன்னடக்கம் நெடுநாட் பழக்கத்தால் தான் விருத்தியடைகின்றது. குழந்தைகள் ஓடலாம், பேசலாம், ஒன்றைக் கற்றுக்கொள்ளலாம், விளையாடலாம். ஆனால், குழந்தை தரையில் விழுந்தால் அது சாதாரணமாக ஓய்வின்றி அலறி அழுகிறது. ஒரு மனிதன் தரையில் விழுந்து காயமடைந்தாலும் அவன் குழந்தையைப் போல் அழுகிறதில்லை. அஃதேன்? அவனிடத்தில் தன்னடக்க மென்பதிருத்தலால் அவன் தானே தன்னையடக்கிக் கொள்ளுகிறான்.

நாகரிக மற்ற காட்டுச் சனங்களுக்குத் தன்னடக்க மென்பதில்லை. அவர்கள் மிக்க மன வலிமையுடையவர்கள், தேகவலுவுள்ளவர்கள்; அவர்கள், எண்ணிப்பார்க்குந்திறம் அல்லது விவேகமில்லாமையினாலேயே எதையுந் துணிகரமாகச் செய்கிறார்கள். ஆத்திரக்காரனாக அல்லது திருடனாக அல்லது கொலைபாதகனாக விருக்கும் ஒருமனிதனுக்குத் தன்னடக்கங் குறைவாகவே யிருக்கின்றது. ஆகையால், தன்னடக்கமானது, குற்றமான செய்கைக்குச்செல்லும் நம்முடைய் விருப்பத்தைக் குதிரையின் வேகத்தை யடக்குங் கடிவாளத்தைப் போலவும் கடிவாளவார்போலவு மிருந்து தடுக்கவும், நம்முடைய ஆத்திரத்தின் வேகத்தை யடக்கி நம்மைக் கண்டிப்பில் வைக்கவும் சக்தியாகிறது. அவ்வாறின்றித் தன்னடக்கமில்லாதிருப்பதற்கு நம்மிடத்திலுள்ள ஏதோ சிலகுறைவே காரணமாகின்றது.

தன்னடக்க மென்பது, மூளையின் உத்தமமும் உயர்ந்ததும், அருமையானது மான பகுதியாம்:—அதன் உண்மைகளையெல்லாம் இப்போது தெரிந்து கொள்வோம்.

மதுசாரம், மூளையின் உத்தம பகுதிகளையும், மிகுமேன்மையான பகுதிகளையும், மற்ற முக்கிய பகுதிகளையும் முதலில் சேதப்படுத்துகிறது.

அப்பகுதிகள் யாவை ? தன்னடக்கம் (Self-control), நிர்ணயம் (Judgment), விவேகம் (Reason), தன்மதிப்பு (Self-respect), இவைகளே யாம்.

நல்லொழுக்க முள்ளவன் தன்னடக்க மிழந்தமை.

இவ்விஷயம் இலண்டன் (London), நகரத்துத் தினசரி பத்திரிகை (London Daily Paper), யொன்றில் காணப்பட்டது.

ஒருவாலிபன் டாக்டர் பட்டம் பெறுவதற்கு வேண்டிய எல்லாப் பரிட்சைகளிலுந் தேறினன். வைத்தியசாலை (Hospital) யிலிருந்த எல்லா மாணுக்கருள்ளும் அவன் மிகத்திறமைசாலியாயும், சாமர்த்தியமுள்ளவனயும் விளங்கினன். அவன் வைத்தியசாலையை விட்டு விலகும் அன்றிரவு அவனைக் கௌரவிப்பதற்காக ஒரு விருந்தளிக்கப்பட்டது. அவ்விருந்தில் ஒயினும் பலவகைச்சாராயங்களும் மிகுதியாகவைக்கப்பட்டிருந்தன. விருந்துமுடிந்ததும் அவன் தன் வீடுபோய்ச்சேர ஸ்டேஷனுக்குச்சென்று டிக்கெட் வாங்கினன். அங்கே டிக்கெட் கலெக்டர் அவனை டிக்கெட்டைக் காட்டும்படி கேட்டார். அவனுடைய மூளை எதனலேனுங் கெடாதிருந்திருக்கு மாயின், அவன் யாதொரு சங்கடமுமின்றி டிக்கெட்டைக் காட்டியிருப்பான். ஆனல், அச்சமயம் டிக்கெட்டைக் காட்டமறுத்தான். டிக்கெட் கலெக்டர் அவனை டிக்கெட்டைக் காட்டும்படி யெவ்வளவுபாடுபட்டும் பயன் உண்டாகவில்லை. கோபத்தினலும் சண்டைக்கேதுவான குணத்தினலும் (தன்னடக்கம் போய்விட்டதின் குறி) டிக்கெட் கலெக்டர் தடையை மீறிக்கடந்து போவதற்கு அவன் முயற்சி செய்தான். முடிவில், கெட்டிக்காரனும், பரிட்சையில் பட்டம் பெற்றவனும், எல்லாராலும் நன்கு மதிக்கப்பெற்றவனுமான அவ்வாலிபன் தன் விரல்களை மடக்கிக் கைமுட்டி (fist) யால் டிக்கெட்கலெக்டரை யொரு குத்துக்குத்திக் கீழேதள்ளிவிட்டான். கீழேவிழுந்தவரை மிருகத்தன்மையாக உதைத்தான். பிறகு, அவன் மாஜிஸ்டிரேட்டின் முன் கொண்டுவரப் பட்டபோது மாஜிஸ்டிரேட் அவர்கள் "எனக்குத் தெரிந்திருக்கும் வரையில் இது குரூரமான மிருகச்செயலாகும்" என்று

K. பிச்சைமுத்து பண்டிதர்
சித்தவைத்தியசாலை, திருச்சி.

E. சுப்பையா மருத்துவர்
பெரிய பொரளை, கொழும்பு.
ராஜுபண்டிதர், எழும்பூர், சென்னை.

K. பெரியசாமி பண்டிதர்
காட்டுபுத்தூர் Po. திருச்சி ஜில்லா.

பண்டிட். P. S. நாராயணன்
அம்பலங்கொட, சிலோன்.

C. முத்துசாமி தாஸ்
தென்காசி.

K. V. S. சுந்தரம்
பெட்டா, சிலோன்.

S. வீராசாமி, எட்மாஸ்டர்
கோவில் வெண்ணி, தஞ்சை ஜில்லா.

தமிழ்நாடு ஆசிரியர்

டாக்டர் வரதராஜுலு நாயுடு
அவர்கள் என்ன சொல்லுகின்றார்?

சென்னைத் தமிழ் வைத்தியசாலைத் தலைவர், பண்டிட், எஸ் எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித்தைலத்தைச் சில வருடங்களாக உபயோகித்து வருகின்றேன். சிறந்த குணம் அதில் இருப்பதை அறிந்தேன்.

பண்டிட் ஆனந்தரின் மகா சந்தனாதித்தைலம்.

24-அவுன்சு ரூபா	4	4	0
12-அவுன்சு ரூபா	2	4	0
6-அவுன்சு ரூபா	1	3	0

தமிழ் வைத்திய சாலை,
221, தங்கசாலைத் தெரு, சென்னை.

M. சரவணபிள்ளை, சைதாபேட்டை.

V. கிருஷ்ணன்,
திருச்செந்தூர், திருநெல்வேலி ஜில்லா.

T. M. லாஸரஸ், தூத்துக்குடி.

N. பீர் முகம்மது ராவுத்தர்
கிளாத் மர்ச்சண்ட், திருத்துறைப்பூண்டி.

V. M. சுவாமி பிள்ளை,
தலைவாக்கெலை, சிலோன்.

A. S. ஆறுமுகம், கடுவெளை Po. சிலோன்.

V. செல்லையா, நுவரெலியா, சிலோன்.

M. A. A. கதிரேசன் செட்டியார்,
வேகுபட்டி Po. புதுக்கோட்டை.

T. வைத்தியநாத முதலியார்
C/o. பாரம் சூபர்வைசர் நெல்லிக்குப்பம்.
செக்ரடரி திராவிடசங்கம், நாகூர்.

T. N. வேலு மருத்துவர்,
முதல் மருதானை, கொழும்பு.

N. S. பொன்னையா
கொட்டாஞ்சேனை கொழும்பு.

T. நடனமுத்து, கண்டி, சிலோன்.

N. ராமையா மருத்துவர்
பெரியபுரளை, கொழும்பு.

S. இயக்கி முத்து மருத்துவர்
பெரிய பொரளை, கொழும்பு.

முத்து மருத்துவர்
முதல் மருதானை, கொளும்பு.

N. விசுவநாதன் மருத்துவர்
பெரிய பொரளை, கொழும்பு.

வேலாயுதபண்டிதர்
தெரிசனகொப்பு, நாகர் கோயில்.

R. கணபதி பண்டிதர்
கூனியூர், திருநெல்வேலி ஜில்லா.

தட்சிணமூர்த்தி பண்டிதர்
தெற்குவெளிவீதி, மதுரை.

சுந்தரம் பண்டிதர்
தெமட்டகொடரோட், கொழும்பு.

ரெங்கசாமி பண்டிதர்
பெருகவாழ்ந்தான், மன்னார்குடி தாலுகா.

P. நல்ல பெருமாள் பண்டிதர்
1.14. கோர்ட்போம் ஸ்திரீட், கொழும்பு.

S. வேலாயுதம் பண்டிதர்
நாவல் பிட்டியா, சிலோன்.

S. சுடலைமுத்து பண்டிதர், கம்பளை, சிலோன்.

S. பொன்னையா பண்டிதர்
அம்பலங்கொட, சிலோன்.

K. ராமு பண்டிதர் கமுதி, ராமநாடு ஜில்லா.

சுப்பிரமணிய பண்டிதர்
தமிழ் சித்தவைத்தியர், பெரியகருப்பூர்
திருச்சி ஜில்லா.

M. வெள்ளையன் பண்டிதர்
சின்னமனூர், மதுரை ஜில்லா.

K. வீரபத்திர பண்டிதர்
நாகல் நகர், திண்டுக்கல் டவுன்.

S. முத்துமாலை தாஸ்
சாத்தான் குளம், திருநெல்வேலி ஜில்லா.

R. சண்முகம், கோலாலம்பூர்.

P. முருகேசன், ராயபுரம், சென்னை.

வைத்தியர் சுவாமிநாத பிள்ளை
பாபநாசம், தஞ்சாவூர் ஜில்லா.

G. நடேச வைத்தியர், சீர்காழி.

பசுபதி வைத்தியர்
குடவாசல், தஞ்சாவூர் ஜில்லா.

M. வேலு வைத்தியர்
சேரமாதேவி, திருநெல்வேலி ஜில்லா.

K. ஆண்டியப்பவைத்தியர்
சேரமாதேவி திருநெல்வேலி ஜில்லா.

V. M. முத்துக்குமாரசாமி வைத்தியர்
பழையவண்ணாரப்பேட்டை சென்னை.

S. வீரமலைவைத்தியர், கான்பாளையம், மதுரை.

S. சிதம்பரவைத்தியர்
கீவளூர், நாகப்பட்டணம் தாலூகா.

S. வெங்கடாசலபதி வைத்தியர்
கருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

P. ராமையா வைத்தியர்
நாவல்பிட்டியா, சிலோன்.

P. K. வெங்கட்டகிருஷ்ண அய்யங்கார்
ஆயுள்வேத வைத்தியர், சென்னிமலை
கோயமுத்தூர் ஜில்லா.

R. அப்பாத்துரை பிள்ளை
சித்தவைத்தியர், வேலூர்.

S. சுப்பையா பண்டிதர் தல்லாகுளம், மதுரை.

P. ராமசுவாமி பண்டிதர் தென்காசி.

T. S. முத்துசுவாமி பண்டிதர்
கற்பதரு வைத்தியசாலை, திருநெல்வேலி.

K. A. தேவராயபண்டிதர், சைதாப்பேட்டை.

மருத்துவனுக்கு
முன்பணம் அனுப்பினவர்கள்

Dr. S. திருவேங்கடம் மெடிகல் ஆபீசர்
ராயகுடா, கஞ்சம் ஜில்லா.

Dr. S. சுந்தரம். மெடிகல் ஆபீசர்
சிந்தாப்பள்ளி.
நரசப்பட்டணம் (வழி)

Dr. M. P. சங்கர சுப்பு பிள்ளை
பத்தமடை திருநெல்வேலி ஜில்லா.

Dr. R. பீம்சிங்
காரைக்குடி ராமநாடு ஜில்லா.

Dr. T. R. மாணிக்கம் பிள்ளை
சப் அஸிஸ்டண்ட் சர்ஜன்
எல்லையபூர், சேலம் ஜில்லா.

Dr. P. R. நாயனர்
ஏனங்குடி, தஞ்சாவூர் ஜில்லா.

Dr. K. வெங்கட்டராமபண்டிதர்
கருப்பட்டி, சோழவந்தான்.

R. C. வெங்கட்டராமநாயுடு
கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

N. சுப்பையாதாஸ், கஸ்டம்ஸ் சப் இன்ஸ்பெக்டர்.
திண்டிவனம்.

G. துரைசாமி நாயுடு
5-3. ஹெட்குவார்டர் ஆபீஸ் ரோட்
கோயமுத்தூர்.

P. G. ஆந்திக், கிளார்க் & டீ மேக்கர்
ஸ்கார்பரோ, மஸ்கிலியா, சிலோன்.

V. S. சண்முகானந்த வைத்தியர்
36. மாகாளிப்பட்டி புதுரோட், மதுரை.

மதிப்புரை

"அருணோதய" மென்னும் ஒரு உயர்ந்த தமிழ்த்திங்கள் வெளியீடு வரப்பெற்றோம். இருட்டறையில் குருட்டுக் குழந்தையைப்போல் பொய்யான சாதி, மதமென்னும் அந்தகாரத்தில் மூழ்கி அன்பு, அறிவு என்னும் கண்கள் மறைந்து உழலும் நந்தமிழ் மக்களுக்கு மெய்க்கல்வி, ஆராய்ச்சி, கைத்தொழில், வாணிபம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் முதலிய கதிர்களோடுகூடி அருணன் (சூரியன்) உதய மாகா விடில், தமிழ்மக்களுக்கு அன்பும், அருளும் இன்னதென்று தெரியாது, நமது தமிழ்நாடும் தன்னரசு நாடாகாது; நமது மக்களும் உண்மை மக்களாக மாட்டார்கள், மற்ற நாட்டார்களும் நம்மை மதிக்கமாட்டார்கள். ஆதலால் அருணோதயம் போன்ற இந்த "அருணோதய" த்தை மகிழ்ச்சியுடன் தமிழர் எல்லோரும் எதிர் பார்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதன் ஆசிரியர் திரு எஸ். ஏ. சின்னப்பமுதலியார் அவர்கள்.

இதன் வருடசந்தா உள் நாட்டிற்கு ரூபா	1	4	0
வெளிநாட்டிற்கு சந்தா ரூபா	1	8	0

"அருணோதயம்" ஆபீஸ்
எட்டயபுரம், சேன் இந்தியா.

மருத்துவனுக்கு
நன்கொடை கொடுத்தவர்கள்

திருநெல்வேலி ஜில்லா மருத்துவர் சங்கத்தார் ரூபா	50	0	0
V. S. சண்முகானந்த வைத்தியர் தமிழ் வைத்தியசாலை 36. மாகாளிப்பட்டி புதுரோடு மதுரை ரூபா	10	0	0
சைதாப்பேட்டை M. சரவணபிள்ளை அவர்கள் ரூபா	10	0	0
திருநெல்வேலி ஜில்லா, ஆத்தூர், மருத்துவர் சங்கத்தார் ரூபா	10	0	0
மன்னார்குடி தாலுகா, பெருகவாழ்ந்தான் ரெங்கசாமி பண்டிதர் ரூபா	5	0	0
சேர்மாதேவி மு.வேலு வைத்தியர் ரூபா	1	0	0

அ. மருத்துவநூலும் மருத்துவ வழியும்
பெருகிய யிந்நாட் பெற்றியே தென்னின்
தமிழர் தந்நாட்டுத் தட்ப வெப்பத்
தகுதியிற் கேற்பச் சாற்றிய சித்தர்

கஉ. மருந்தும் வழியும் மறந்தன ராகி
யதன் பெரு மாண்பு மறியா ராகி
அயல் நாட்டவர்செய் யரிய மருந்தே
யமையு மென்றெண்ணி யளப்பரு நோய்க்கும்

கசு. இருப்பிட மாயின ரிதையுணர்ந் திரங்கிப்
பல்லோர் மருத்துவப் பழநூற் பெருக்கமுங்
கண்டறி திறலோன் கருணை யுருவன்
மருத்துவ ரிலக்கண முற்று முடையோன்

உ0. ஆனந்தப்பேர் தரும் ஆனந்தப்
பண்டிதன் சீரியன் பழங்குடி மருத்துவன்
நோயே யணுகா நேரிய வழியும்
அணுகிய நோயி னாற்றலுக் கேற்ப

உச. மருந்தும் வழியு மருளா வகையின்
மக்களுணர்ந்து தக்கனராகி
நல்வாழ் வுறுதற் காவன வரைந்து
"மருத்துவன்" எனும்பேர் திறம்படப் பொறித்துத்

உஅ. திங்க டோறுந் திரிவன வாகி
விடுத்தனன் சுவடி வியப்புற நமக்கே (அதுதான்)
நாளையும் நாளையும் நல்லனவாகிப்
பல்லோர் பயனுறப் பரந்து திகழ்தர

ஙஉ. யெல்லாம்வல்ல யிறைவனை வணங்கி
வாழ்த்துதும் யாமே வாழ்த்துதும்

ஙச. வாழ்க ஆனந்தர் வாழ்க அத்தாளே !

குரு - குமாரசாமி,
சமரச சன்மார்க்க நிலைய அமைச்சர்
அந்தணர் பேட்டை, சிக்கல்.

சுதேச வைத்திய ஆராய்ச்சிக்கழகத்தை (உஸ்மான் கமிட்டியை)பனகால் அரசர் ஏற்படுத்திய காலத்தில் ஆயுர்வேத யூனனிவைத்தியத்தோடு நந்தமிழ் நாட்டு சித்தமருத்துவ முறையையும் ஆதரிக்கவேண்டுமென நாம் கிளர்ச்சிசெய்தோம். அப்போது பனகால் அரசருக்கு முதலில் அது புதுமையாகவும், சிறிது வெறுப்பாகவுந்தோன்றியது எனினும், பின்னர் அதன் உண்மைகளையுணர்ந்து தமிழ் சித்த மருத்துவ முறையையும் ஆதரித்தார்.

சித்த வகுப்பில் சேர்ந்து படிக்கும் ஏழைமருத்துவ மாணவர் பலருக்கு சம்பள மில்லாமல் சேரும்படி செய்தார். இந்த உதவியைமருத்துவத்தொழிலை பரம்பரைக் குலத்தொழிலாகக்கொண்ட மருத்துவர்களும், மற்ற இந்திய மருத்துவர்களும் பனகால் அரசரை என்றும் மறவாமல் அவருக்கு நன்றிசெலுத்த கடமைப்பட்டவர்களாகின்றார்கள்.

மரணச் செய்தி

திருநெல்வேலி ஜில்லா மருத்துவர்சங்க அமைச்சர் தி. முத்துசாமி பண்டிதர் அவர்களின் சகோதரியும், டாக்டர் எஸ். திருவேங்கடம் பிள்ளை அவர்களின் மனைவியுமான திரு, பொன்னம்மை சிலநாள் நோயாயிருந்து காலஞ்சென்றதறிந்து மிகக் கவலைபடைகின்றோம் ; அதனால் நமக்கேற்பட்டுள்ள மனவருத்தத்தை அக்குடும்பத்தினருக்கு அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

பத்திரிகாசிரியர்.

"மருத்துவனு"க்கு வாழ்த்து

முந்நீர் சூழ்தரு மிந்நில வரைப்பின்
மக்கள் வாழ்க்கை மாண்புறல் கருதி
நோயிலா வுடலும் நுகர்ச்சிப் பெருக்கமும்

உடையவராத லுணர்ந்த நுண்ணறிவோர்
நோய்வராதிருக்கவு நோய்வரிற் றடுக்கவும்
இருவழி கோலிப் பெருமுறை மருந்துஞ்
செய்முறை வழியுந் தெரித்தனர் நமக்கே

பனகால் அரசர் விண்ணுற்ருர்!

பனகால் அரசரிடம் பொருமைகொண்டிருந்தவர்களும், அவரைப் புறங்கூறினவர்களும், அவரைப் பெரும்பகைவராக நினைத்து அவர் சாவை எதிர்பார்த்தவர்களுங்கூட, பனகால் அரசர் இறந்தார் என்று கேட்டவுடனே திடுக்கிட்டு மனமுருகி வருந்தினர்கள். அவருடைய அரசியல் அறிவையும், ஆற்றலையும் அவரிடமிருந்த மற்ற சிறந்தகுணங்களையும் நினைந்து நினைந்து சொல்லிச் சொல்லி வாயாரப்புகழ்ந்தார்கள், கண்ணீர் வடித்தார்கள், என்ருல் அவரைப்பற்றி நாம் சொல்லப்போவது ஒன்று மில்லை.

உயர்ந்த படிப்பாலும், பணத்தாலுமே ஒருமனிதன் உலகில்பெரிய வனுக முடியாதென்பதற்கும், மனிதனுக்கு எல்லா குணங்களும் படித்துப் பழகுவதனுலேயே வருவதல்ல வென்பதற்கும் பனகால் அரசர் சாட்சியாய் விளங்கினர். வேம்புக்குக் கசப்பும், மருவுக்கு மணமும் முளையிலேயே உடன் கலந்திருப்பதுபோல் ஒவ்வொரு மனிதரிடத்திலும் பிறவிக்குணங்கள் தனியே சில காணப்படுவது இயற்கை. அதுபோல் பனகால் அரசரிடம் நாம் கண்ட அரசியல் அறிவும், ஆற்றலும் அவர் உடன்பிறந்ததே ஆகும். அது அவரோடு மறைந்து போய்விட்டது. இனி அவ்வாற்றலையும் பெருமையையும் நாம் யாரிடமும் காணப் போகிறதில்லை. அவர் செய்த வேலையை இனியார் செய்வதென்று நெடுந்தூரம் நினைத்துப் பார்த்தாலும் நமக்கு முடிவு தெரியவில்லை.

நமது பனகால் அரசர் பிராம்மணரல்லாத பெரும்பகுதி மக்களுக்குத் தலைவராகவும், அரசியல் ஆற்றல் மிக்குள்ளவராகவும் சிறந்து விளங்கினர். "அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்" என்பதற்கிணங்க, இதனைக்கண்ட அரசாங்கத்தார் அவரைமதித்து அவருடைய சொல்லை விரும்பிக்கேட்டார்கள். அதனுல் பிராமணரல்லாதார் பலருக்கு பல உத்தியோகங்களையும், பதவிகளையும் பனகால் அரசர் வழங்கினர். இன்னும் ஓராண்டாவது இருந்திருப்பாராணுல் பிராமணரல்லாதார்க்கு அரசியல் சம்பந்தமாக பெரிய நன்மைகள் பல விளைந்திருக்கும்.

அவரால் செய்யப்பட்ட காரியங்களில் தென் இந்தியாவிலுள்ள கோயில்களின் சொத்துக்கள் தீயவழிகளில் செலவானதைக் குறைத்து அப்பொருள்களை நல்வழியில் செலவு செய்யும் நோக்கத்தோடு செய்து வைத்த இந்து அறநிலைய பாதுகாப்புக்கழகமும் (இந்து ரிலிஜியஸ் எண்டோவ் மெண்டு போர்டு,) ஒன்று, இந்தியநாட்டு வைத்திய பாடசாலையையும், வைத்தியசாலையையும் அரசாங்கத்தார் ஆதரித்து நடத்தி வரும்படி செய்தது இரண்டும் மிக இன்றியமையாததாகும்.

ஒரு அருமைத்திருமணம்
(கலப்பு விவாகமும் - விதவாவிவாகமும்)

8-12-1928-ஆம் நாள் மாலை 5-30-மணிக்கு சென்னை அண்ணுபிள்ளைத்தெரு 97-ஆம் எண்ணுள்ள தென் இந்திய பிரம்ம சமாஜமந்திரத்தில் மருத்துவ வகுப்பைச்சேர்ந்த சைவராகிய சீர்காழி வைத்தியர் S. வாசுதேவபிள்ளை அவர்கள் மகன் S. V. பாலகிருஷ்ணபிள்ளை அவர்கட்கும், தேவாங்க வகுப்பினராகிய T. முத்துச்செட்டியாரின் மகள் M. சீதாலெட்சுமி அம்மைக்கும் திருமணம் நடைபெற்றது. மேற்கண்ட மணமக்கள் இருவரும் பிரம்மசமாஜத்தைச்சேர்ந்த மருத்துவமாணவர்கள். மணமகள் M. சீதாலட்சுமி அம்மை அதிபாலியத்தில் விவாகம் நடைபெற்று கணவனை இழந்த பெண்.

இக்கலியாணம் பிரம்மசாஜத்தின் முறைப்படி சாதிவேற்றுமை அழியவும், பால்யவிதவைகளின் துன்பம் ஒழியவும், கூலிப்புரோகிதர், போலிப்புரோகிதர்களின் ஆதிக்கம் இன்றி, வீண் செலவின்றி, வீணான மூடச் சடங்குகளின்றி மிக அழகாக நடைபெற்றது. ஒற்றுமையற்ற நமது நாட்டுக்கு இது ஒருபடிப்பாக இருக்கிறது.

பாமரமக்களின் கட்டுப்பாட்டைத் தகர்த்தெரிந்து, மிக வீரத்தனமாக இத்திருமணத்தை செய்து காட்டிய இம்மணமக்கள் என்றும் ஒருவருக்கொருவர் அன்பு மாறாமல் இருந்து நமது நாட்டின் விடுதலைக்கு ஒருவழிகாட்டியா யிருப்பார்க ளென்று நம்புகின்றோம்.

இத்திருமணத்திற்கு ஆண் பெண்கள் பெருங்கூட்டமாக வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் சர் A. P. பாத்ரோ, திவான்பகதூர் J. வெங்கட்ட நாராயணா, திவான்பகதூர், T. வரதராஜலு நாயுடு, V. சுந்தரராஜலு நாயுடு, B. A. B. L. சுவாமி பிரமானந்தா, வித்வான் மணி திருநாவுக்கரசு முதலியார், வித்வான் பா. கண்ணப்ப முதலியார், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், எதிராஜலு நாயுடு, இன்னும் பல கனவான்களாவார்கள்.

மணவினை முடிந்ததும் இந்திய மருத்துவமாணவர்களால் மணமக்களுக்கு கதர் மாலைகள்சூட்டி வாழ்த்துப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. மணமக்கள் கதருடை அணிந்திருந்தார்கள்.

மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களும் பண்டிட் எஸ். எஸ் ஆனந்தம் அவர்களும் அத்திருமணத்தை வந்திருந்தவர்கட்கு விளக்கி அதன் அவசியத்தையும் அதனால் விளையும் நன்மைகளையும் எடுத்துக் கூறினார்கள். வந்திருந்தோர்களுக் கெல்லாம் சந்தனம், பூ, பழம் முதலியவைகள் வழங்கப்பட்டது என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

அகில இலங்கை மருத்துவர் மகாநாடு

கொழும்பு.

நிகழ்ச்சியும், வரவு செலவு கணக்கும்.

மருத்துவ ஞாயிறு (வைத்திய பாஸ்கரர்)

பண்டித எஸ். எஸ். ஆனந்தர்.

தென் இந்திய மருத்துவர் சங்கம் நிறுவியவர்; அதன் தலைவர்;

தென் இந்திய ஆயுர்வேத (சித்த) வைத்திய சங்க ஸ்தாபகர்;

சென்னை நகர் காப்புக் கழக அங்கத்தினர்;

"பாலர் பரிபாலனம்" நூலாசிரியர்;

'மருத்துவன்' ஆசிரியர்.

உ

தேன் இந்திய

மருத்துவகுல முதல் மகாநாட்டின்

வரவேற்புப் பத்திரம்

அறிவிற் சிறந்த பெரியோர்களே, அன்புள்ள சகோதரப் பிரதிநிதிகளே, வரவேற்புக் கழகத்தார் பிரதிநிதியாக இன்று தங்கள் அனைவரையும் வரவேற்கும் பெரும்பேறு நான் பெற்றமைக்குக் கழிபேருவகை கொள்கின்றேன். தங்கள் வரவு நல்வரவாகுக; தங்கள் நன்னோக்கங்கள் இறைவனருளால் இனிதே கைகூடுக.

நம் தென்னிந்திய மாகாணத்திற்குத் தலைநகராய், ஆங்கில அரசாட்சி நம் தேயத்தே நிலையுறுதற்கு அடிப்படையாய், பட்டணம் என்னும் பொதுப் பெயரைத் தனக்கே சிறப்பாகக் கொண்டதாய் திருமயிலை, திருவொற்றியூர் என்னும் இவ்விரு திவ்விய தலங்கட்கும் நடுநாயகமாய், தென்பாலிலே தெய்வப்புலவராம் திருவள்ளுவநாயனாரையும், வடபாலிலே முற்றுந் துறந்த பட்டினத்தடிகளையும் தனக்குத் தனிப்பெருந்துணையாகக் கொண்டதாய்ப் பெறலருந்திருவும், பெருங்கல்வி நலனும் பொலிவுறக்கொண்ட பெரியோர் பலரைத் தன்னகத்தே யுடையதாய்ச் சிறப்பின் அமர்ந்து செம்மை பெற்றொளிரும் இச் சென்னையம்பதியிலே நம் மருத்துவ மகாநாட்டின் முதற்கூட்டம் நிகழநேர்ந்தமைக்கு, நான் முழுமுதற் செழும்பொருளின் திரு

வருட் பாங்கினை யெண்ணி யெண்ணி இறும்பூதெய்துகின்றேன்.

நம் திராவிட நன்மக்கள் எளிதின் முன்னேற்றமுறுதற்கும், அரசியல் துறைகளிலும் பிற அதிகார ஸ்தானங்களிலும் எல்லா வகுப்பினரும் சமவுரிமை பெற்று இன்புற்று வாழ்தற்கும் தனிப் பெருந்துணையாய்த் தோன்றித் திகழும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் எனப் பெயரிய திராவிடப் பெருமக்களின் நல்லியக்கம் நம் நாட்டில் எஞ்ஞான்றும் நிலைபெறுவதாக.

மருத்துவகுல மகா நாட்டினரே,

ஒரு குலமானது தற்போது தாழ்ந்த நிலையில் உள்ளதாகக் காணப்படின், அஃது எக்காலத்தும் அவ்வாறே இருந்து வருவதாகக் கருதுதல்கூடாது. ஒரு குலம் ஒரு காலத்தே தாழ்வுறுதலும், பிறிதொருகாலத்தே அஃது உயர்வுற்று விளங்குதலும் இயல்பே. இது தேச சரித்திரம் உணர்ந்த எல்லோர்க்கும் உடன்பாடானதொன்றே. ஆதலின், மருத்துவகுல சகோதரசகோதரிகளே, தற்போது தாழ்வுற்ற நிலையில் உள்ளோராகக் கருதப்படும் நம்மவர்கள் ஆதிகாலந்தொட்டே அவ்வாறு இருந்து வருகின்றனர் என எண்ணுதற்குச் சிறிதும் இடனில்லை. மருத்துவ நூற்களின் முறையினையும் சங்கநூற்களின் உண்மைகளையும், புராண இதிகாச ஸ்மிருதிகளின் கருத்துக்களையும் ஆதாரமாகக் கொண்டு நாம் நம் முன்னோர்களின் வரலாற்றினைக் குறித்து ஆய்ந்து பார்க்குமிடத்து, அவர்களுள் பலர் புலவர்களாகவும், பக்தர்களாகவும், வீரர்களாகவும், அமைச்சர்களாகவும், அரசர்களாகவும் சிறந்து விளங்கியிருந்ததாகத் தெரிய வருகின்றது.

3

நமது தொழில்

மருத்துவகுலப் பெரியோர்களே,

சித்தவைத்தியம் என்னும் நம் தமிழ் மருத்துவ மானது மிகப் பழமையானது; தெய்வத்தன்மை பொருந் தியது; மருத்துவமுறையில் சாலச் சிறந்து ஒப்பற்றநிலையில் உள்ளது; சித்தகணங்களாலும், தவசிரேஷ்டர்களாலும் கையாளப்பெற்ற பெருமையை யுடையது. இஃது ஆதியில் சிவபெருமானாலே தம் அருட்சத்தியின் சார்பாக நந்தி கணங்களுக்கும், நந்திகணங்களின் வழியாக வித்தகச்சித்தர் கணங்களுக்கும் மூறையே உபதேசிக்கப்பட்ட தென்றும், அச்சித்தர்கள் நம்மனோர் உய்யும்பொருட்டு இதனை நூல் வழியாக இயற்றியருளினர் என்றும் மருத்துவ நூல்கள் உரைக்கின்றன. இது சித்தர்கள் கையாண்டுவந்தமையான் சித்தவைத்தியம் என்னும் பெயர்பெற்று ஒளிர்கின்றது.

இச்சித்தவைத்தியம் நோயைத்தீர்த்தற்கு மட்டுமன்றி நோய்கள் வாராமல் தடுத்தற்கும், தேகம் கற்பகாலம்வரை நிலைபெற்று நிற்றற்கும், யோகசித்தியால் ஞானம் பெற்றுப் பேரின்பவீட்டை அடைதற்கும் சிறந்த சாதகமாய் அமைந் துள்ளது. இது பிற மருத்துவ முறைகளைப்போல் இவ் வுலகவாழ்க்கைக்கு மட்டில் உதவாமல் என்றும் அழியாத பேரின்பவீட்டு நெறியினை விளக்கும் இவ்வொரு நன்மையி னாலேயே இதன் அருமை பெருமைகள் நமக்கு நன்கு தெரியலாகும்.

மேல்நாட்டு மருத்துவர்கள், மக்களின் தேகக் கூறு பாட்டினை அறியவேண்டி முதன்முதல் உயிருள்ள பிராணி களைச் சோதனை செய்தும், பின்னர்க் குற்றஞ்செய்த மனி தரை உயிரோடு சோதனை செய்தும் வந்து, முடிவில் அது

தகாதென உணர்ந்து பிணங்களை அறுத்துப் பரிசோதித்து வருதல் யாவரும் அறிந்ததொன்றேயாகும். நம் தெய்விகச் சித்தமருத்துவர்களோ வெனில் அவ்வாறு புரியாமல், தம் யோகக்காட்சி அனுபவமுறையானே மக்களின் தேக அமைப்பினையும், அதன் உள்ளுறுப்புகளின் இயக்க முறையினையும் கூர்ந்து உள்முகமாய் உணர்ந்து நமக்கு உணர்த்தியிருக்கின்றனர்.

நம் தேகத்தில் 3½கோடி உரோமங்கள் உள்ளனவென்றும் ரோமங்கள் குழல்போன்று பிராணவாயு சஞ்சரித்தற்கு ஆதாரமாய் இருத்தலின் அவைகட்குக் குழலெனப் பெயரும், சுகவாழ்வில் உள்ள ஒருவன் நாளொன்றிற்கு 21,600 முறை சுவாசம் விடுகின்றான் என்றும், தேகம் நோய்கொள்ளின் எட்டுவிதங்களான் பரீக்ஷை செய்தல் வேண்டுமென்றும், நம் தேகம் 72,000 நாடி நரம்புகளால் கட்டப்பட்டுள்ளதென்றும், அவைகளுள் சிறந்தன பத்து நாடிகளென்றும், அவற்றுள்ளும் மூன்றுநாடிகள் சாலச் சிறந்தன வென்றும், நாம் சுகித்திருத்தற்கு இன்றியமையாத வாதபித்த சிலேத்துமங்களின் நிலைகளை அவைகளே அறிவிக்கின்றனவென்றும், அவைகளின் ஏற்றத்தாழ்வுகளால் 4000 வியாதிகள் உண்டாகின்றன வென்றும் நம் சித்தர்கள் கண்டுபிடித்துள்ள இவ்வுண்மைகளால் நம் மருத்துவம் தெய்வத்தன்மை யுள்ளதென்பது சொல்லாமலே விளங்கும்.

நம் சித்த வைத்தியமானது நம் மதத்தை யொட்டியே நடைபெற்று வருகின்றது. நம் வீடுகளை நாம் கோஜலத்தாலும் கோமயத்தாலும் மெழுகுதலும் சுத்தம் செய்தலும் விடியற்காலையில் எழுந்து நீராடுதலும் உடம்பில் திருநீறு அணிதலும் சூரியவணக்கம் ஜபதபம் சந்தியாவந்தனம் முதலியன புரிதலும் பிராணயாமம் செய்தலும் விரதங்கள்

அநுட்டித்தலும் பருவங்கட்குத் தக்க வண்ணம் ஆகாரம் உட்கொள்ளுதலும் சிரார்த்த காலங்களில் பஞ்ச கௌவியம் உட்கொள்ளுதலும் மற்றும் பிறவும் மதசம்பந்தமான சடங்குகளாக விருப்பினும் அவை மருத்துவ முறையை அநுசரித்தே எழுந்தனவாகும்.

முற்கால நிலை.

தெய்விக சம்பந்தமுடையதும் சித்தர்களால் கையாளப் பெற்றதுமான இச்சிறந்த மருத்துவமுறையினை நம் முன்னோர்கள் தம் குலத்தொழிலாகக் கொண்டிருந்தமையான் அவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மிகுந்து சிறந்த ஞானமும் தெய்வ பக்தியும் உடையவர்களாய் சுத்த வைதிக சைவர்களாய் உயர்வுற்று விளங்கினார்கள். அதனால் அவர்கள் பண்டிதர்களென்றும் மருத்துவப் புலவர்களென்றும் ஆயுள் வைதியரென்றும் ஆமாத்தியப் பிராமணர்களென்றும் பொதுமக்களால் கொண்டாடப்பட்டு வந்தனர். மருத்துவர் உலகிற்கு இன்றியமையாதவர் என்பதை நன்கு உணர்ந்த அக்காலத்திருந் தநம் தமிழரசர்களும் அவர்களை மேன்மைப் படுத்தித் தம் அவைக்களத்திருந்த ஆலோசனைக் கூட்டத்தாரோடு சேர்த்துச் சம மரியாதை கொடுத்து ஆதரித்து வந்தனர். இதற்குச் சிலப்பதிகாரத்துள் "ஐம் பெருங் குழுவொடு எண்பேராயமும்" என்ற விடத்தே

"சாந்து பூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுகநெய்
ஆய்ந்த இவரெண்மர் ஆய்ந்தோர்—வேந்தர்க்கு [சர்
மாசனம் பார்ப்பார் மருத்தர் வாழ் நிமித்தரோடமைச்,
ஆசில் அவைக்களத்தா ரைந்து."

எனக் காட்டியிருக்கும் செய்யுளே சான்று பகரும். அன்றியும் அவர்கள் ஐம்பெருங் குழுவில் இருந்த காலத்து அரசர்கள் அவர்கட்குப் பரிசாகக் கொடுத்த பல ஊர்களுள்

இக்காலத்தும் இரண்டு கிராமங்கள் தஞ்சை ஜில்லாவில் கும்பகோணத்திற்கு அருகில் மருத்துவக்குடி என்னும் பெயரால் இன்றும் அழைக்கப்பட்டு வருதலாலும் அவ்வூரிலுள்ள நம் குலத்தவர் இக்காலத்தும் சுத்த சைவர்களாகவும் தீக்ஷாக் கிரமங்களுள்ளவர்களாகவும் இருந்து வருதலாலும் நாம் அறியலாகும்.

நம்முன்னோர்கள் கல்வித்துறையிலும் சங்கநூற் புலவர்களாய்த் தலைசிறந்திருந்தனர் என்பதற்கு

> "சிந்தி நீர்க்கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
> மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
> மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலால்
> தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு"

என்னும் அரிய செய்யுளால் தம்மருத்துவப் புலமையை விளக்கிக் காட்டிய மருத்துவன் தாமோதரனாரும், மலையனார் முதலிய புலவருமே போதிய சான்றுவார்.

நம்குலத்தவர்கள் இவ்வளவோடு அமையாது சிறந்த அடியார்களாகவும் பக்த சிகாமணிகளாகவும் சுத்தவீரர்களாகவும் பெரிய அரசர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதற்கு அவைக்களத்தே சிறந்த வீரராய் விளங்கி வாளால் மகவரிந்து இறைவனுக்கு இன்னமுதூட்டிய *சிறுத்

---

* இவர் மருத்துவர் என்பதைக் கீழ்வரும் செய்யுளினின்றும் அறிக.

"பல்கு மருந்துவாதிபர் செங்காட்டங் குடிவாழ் படைத்தலைவர் அமுதளிக்கும் பரஞ்சோதியார் மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழிநாடன் திருவருள் சேர்ந்தவர் வளருஞ் சீராளன் தன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கை சமைத்திடப்பின் நன்மதிச் சந்தனத் தாதி தலைக்கறியிட் டுதவப்
புல்கவரும் வயிரவர் தாமகிழ்ந்து மகவருளப் போற்றியவர் சிவனருளே பொருந்தினரே

தொண்டநாயனாரும் பத்தியில் ஈடுபட்டுக்கிடந்த இராமதாஸ் என்னும் பக்தரும் பல்லோரானும் புகழ்ந்து பேசப்படும் விக்கிரமாதித்த அரசருமே சிறந்த அத்தாட்சியாவர்.

இம்மருத்துவர்களுக்கு அமாத்தியர் என்ற பெயரும் பல இடங்களில் வழங்குகிறது.

"ஆரியர் மருத்துவர் ஆயுள் வேதியர்
வீரிய சித்தர் அமாத்திய விப்பிரர்
சீரிய அசுவினி தேவர் வாகடர்
பாரினிற் பிடகர் பண்டிதர் வைத்தியரே"

என்ற மருத்துவர்களின் பெயர்த் தொகுதிகளிலும் காணக் கிடக்கின்றது.

அமாத்தியர் என்ற குல முறையில் பார்க்கும்போது சைவசமயசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகளும் மருத்துவ வகுப்பினரெனக்கருதப் படுகின்றார்.

நம் வடநாட்டு மருத்துவர்கள் மன்னர்களுக்குச் சமையல் செய்வோரின் தலைவராயிருந்து அவர்கள் செய்யும் ஆகாரங்களை ஆய்ந்து பார்த்து உண்ணக் கட்டளையிட்ட பின்னரே அரசர்கள் உண்பது வழக்கம் என்பதற்குச் சக்கர பாணி பண்டிதன் என்னும் மருத்துவர் கி. பி. 1060-ம் ஆண்டு வங்க நாட்டில் நயபாலன் என்ற மன்னருக்கு மருத்துவராகவும் அடுக்களை (பாகசாலை) மேற்பார்ப்பவராகவும் இருந்துளார் என்பதே சிறந்த அத்தாட்சியாகும். அன்றியும் அவர் வடமொழி ஆயுர்வேதத்தின் தாய் நூலாய சரக சம்கிதைக்கு விரிவுரையும் எழுதியிருக்கின்றார். நிற்க, தற்போதும், வடநாட்டிலே சில விடங்களில், நம்மவர்கள், வேதியரில்லங்களில் சமையற் றொழில் செய்கின்றனர். மற்றும் சில விடங்களில் சிவாலய விஷ்ணுவாலயங்களிலும் நம்மவர்களே பூசை முதலியனவும் புரிகின்றனர். ஜகந் நாதம் என்னும் தலத்திலே நம்மவர்களே பூசை முதலிய

அனைத்தும் செய்வதுமன்றி தங்கள் கரங்களினாலேயே பிராமணருடையவாயினும் பிரசாதம் இடுகின்றார்கள். அன்றியும் நம்மவர்கட்குத் தெலுங்கிலே மங்கலவாடு என்றே பெயர் வழங்குகின்றது. இதற்குக் காரணம் அவர்கள் மங்கலமான தொழில்களைப் புரிவதேயாகும். நம் ஆண் மக்கள் வரலாறு இவ்வாறாக, அக்காலத்திலேயே நம் பெண் மக்களும் மருத்துவத் தொழிலில் தேர்ச்சியுற்று, பெண்மக்களுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்து வந்தனர் என்பது அவர்கள் இன்றும் அத்தொழிலைக் கையாண்டு வருதலால் நன்கு விளங்குகின்றது. மருத்துவச்சி என்னும் பெயர் அன்று தொட்டு இன்றுவரை இவர்களுக்கே சிறப்பாக வழங்குகின்றது.

பிற்கால நிலை.

மருத்துவத் தொழிலில் கைதேர்ந்திருந்த நம்மவரிற் சிலர் காய மருத்துவ சிகிச்சை இரண வைத்தியத்திலும் சிறப்புற்றிருந்தனர். சமய சம்பந்தமான சின்னங்கள் ஏற்பட்ட காலத்து மக்கள் தங்கள் தலைமயிரைக் களைந்து கொள்ளுதலையும் ஒரு சடங்காகக் கொண்டனர். இது வடநாட்டு ஒழுக்கமேயன்றி நம் தமிழரது ஒழுக்கமல்ல. இந்த ஆசாரம் நம் தமிழ் நாட்டில் பரவியபோது கூர்மையான கத்திகளுடன் பழகிய காய மருத்துவர்களைக் (இரண வைத்தியர்) கொண்டு முதன் முதல் மன்னர்களும் செல்வர்களும் பின்னர் பிறமக்களும் செளளம் என்னும் இச்சடங்கை நிறைவேற்றி வந்தார்கள். அதி நாளடைவில் அவரவர் விருப்பப்படி தங்கள் முகத்தை அழகு செய்துகொள்ளும் பழக்கத்தில் திரும்பிவிட்டது. இவ்வாறே இவர்கள் சங்கீதத் தொழிலிலும் பின்னர்ச் செல்லலாயினர்.

நம் மருத்துவ குலத்தவரின் பிற்கால நிலையானது

சிறந்து விளங்காமைக்குப் பல காரணங்கள் உண்டெனினும் அவற்றுள் முதன்மையானது அம்முறையினை ஆதரித்து வந்த நம் தமிழ் மன்னர்களின் அரசாட்சி அழிந்தமையே யாகும். அக்காலத்தே நம் நாட்டில் மகம்மதியர் அரசாட்சி குடிகொண்டிருந்தமையால் மகம்மதியர்கள் தங்கள் யுனானி வைத்திய முறையைப் பலவழியானும் பரப்ப முயன்றனர். "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்" ஆதலாலும் புதுமையில் எல்லோர்க்கும் விருப்பம் செல்லுதல் இயல்பாதலாலும் நம் மக்களுள் பலர் இந்த யுனானி வைத்திய முறையைப் பின்பற்றலாயினர். அதனால் மிக்க பெருமை வாய்ந்த நம் தமிழ் மருத்துவம் நாளுக்குநாள் குன்ற ஆரம்பித்தது.

பின்னர் ஆங்கிலேய அரசாட்சி நம் நாட்டில் நிலை பெற்ற காரணத்தால் மேல்நாட்டு மருத்துவமுறையே நம் மக்கள் பெரிதும் அநுசரிக்கத் தொடங்கினர். தம்மைத் தேடிவரும் விருந்தினரை உபசரித்தலிற் தலைசிறந்த நம் தமிழ் மக்கள் ஆங்கில அரசாட்சியை அன்புடன் ஏற்றுக் கொண்டதோடு அவர்கள் மருத்துவத்தினையும் போற்றிப் புகழ்ந்து மிகுதியும் கொண்டாடத் தலைப்பட்டனர். நமது ஆங்கில அரசாங்கத்தார் நம் தமிழ் மருத்துவத்தின் உயர்ந்த நிலையினையும் அதன் தெய்விகத் தன்மையினையும் சிறிதும் உணரார். ஆதலினால் அவர்கள் நமது வைத்தியமுறையினை ஆதரிக்கவேண்டும் என்னும் எண்ணம் சிறிதும் இல்லாதவராய் இருந்தனர். இத்தகைய காரணங்களால் நம் தமிழ்ச் சித்த வைத்தியமும் அதனைக் கையாண்டு வந்த நம் இனத்தவரும் தம் பெருமை குன்றித் தாழ்வுற்றனர்.

அன்பர்களே, இவ்வாறு நம்மருத்துவத்தின்பெருமை குறைந்து வந்தமையால் நம்மருத்துவகுலத்தவரில் சிலரும், இம்மருத்துவத்தொழில் புரியும் பிறரும் பல்லிடங்களிலும்

கூட்டங்கள்கூடி அரசாங்கத்தாரிடம் மனுச் செய்துகொண் டனர். இதனை அறிந்த அரசாங்கத்தார் நம்மருத்துவம் சிறந்ததொன்ரு? அதனை ஆதரித்தல் அவசியமா? என உணரவேண்டி டாக்டர் கோமன் அவர்களை அத்தொழிலில் அமர்த்தினர். அவர் அவ்விதமே சில மருத்துவரிடம் சென்று நம்மருந்தினைக் குறித்தும், அதனைக் கையாளும் முறையினைக் குறித்தும், நாடிநிர்ணயங்களைக் குறித்தும் வினவிப்பின் அவர் இது ஒருவகையில் சிறந்துள்ளதென்றும், பிறிதோர்வகையில் அத்துணைச்சிறப்பாக இல்லை என்றும், சில மருந்துகள் சீக்கிரத்தில் வேலை செய்கின்றனவென்றும், இம்மருத்துவர்கள் அநேக விஷயங்களைக்கூருமல் ஒளிக்கின் றனர் என்றும், நாடிநிர்ணயத்தில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும், இத்தகைய நிலையிலுள்ள இத்தேசவைத்தியம் ஆங்கில வைத்தியத்தைப்போல் உதவி செய்யாதென்றும் தமக்குத் தோன்றியவாறெல்லாம் கூறி முடித்தனர். அத னல் நம் அரசாங்கத்தார் நம் மருத்துவத்தினைக் கவ னித்தற்கு இடனில்லாமற் போயிற்று.

நம் நாட்டில் புதியசீர்திருத்தமுறை ஏற்பட்டபி[illegible]ர் அதிலுள்ள அமைச்சர்களும் அங்கத்தவர்களும் பெரும் பாலும் இந்துக்களாய் இருந்தமையால் அவர்கள் நம் கூக் குரலைக் கவனித்து சுதேசவைத்தியப் பரிசீலனைக் கழகம் ஒன்று ஏற்படுத்திப் பல ஆராய்ச்சிகள் செய்து முடிவில் நமது தேசவைத்தியங்களுள் சித்தவைத்தியமும் முக்கிய மானதென்று தீர்மானித்தி[illegible]ன்றனர்.

இனிச் செய்யவேண்டுவன

மருத்துவகுல சகோதரர்களே, சகோதரிகளே, நம் மினத்தவருள் தாழ்வடைந்துள்ள பலரை முன்னேற்ற முறச்செய்யவேண்டுமானல் நாம் அவர்கட்குக் கல்வியைப்

புகட்டவேண்டும். நம்நாட்டு மக்களுக்கு நம்மருத்துவகுல த்தவரின்மீதும், நம்மருத்துவத்தின்மீதும் பிற்காலத்தே மதிப்புருறைந்தமைக்கு, நம்குலத்தவருள் பெரும்பாலோர் கல்வியில் ஊக்கம் செலுத்தாது அதனை அறவே யொழித்துப் பழக்கத்தினையே பெருந்துணையாகக்கொண்டு மருத்துவத் தொழில் நடாத்துவதும் ஒருபெருங்காரணமாகும். ஆதலின் நம் மருத்துவ குலத்தவருள் உள்ள ஒவ்வொருவரும் கல்விகற்க முயலவேண்டும்.

அன்பர்களே, தற்போதுள்ள நம்மவர்களின் தொகையும், அதில் கல்விகற்றோரின் தொகையையும் நாம் சிறிது கவனிக்கலாம்.

தமிழ் நாடு

	ஆண்.	பெண்.
சென்னை.	1988	2260
செங்கற்பட்டு.	6902	6796
வட ஆற்காடு	11785	10022
சேலம்	10182	10806
கொயம்புத்தூர்	14866	15619
தென்னாற்காடு	11701	11930
தஞ்சை	11496	12856
திருச்சிராப்பள்ளி	11224	12225
மதுரை	10721	9149
இராமநாதபுரம்	7005	7022
திருநெல்வேலி	10031	12963
நீலகிரி	63	69
புதுக்கோட்டை	2635	2891
	110569 ஆ.	114608 பெ.

இருபாலரின் மொத்தத் தொகை.... 225177

தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்த ஆண் 16767 பெண்953, ஆங்கிலம் கற்ற ஆண்மக்கள் 241, பெண்கள் 25.

தெலுங்கு நாடு

	ஆண்.	பெண்.
ஏஜன்ஸி	960	895
கஞ்சம்	5289	6235
விசாகப்பட்டணம	16319	17082
கோதாவரி	8344	8219
கிருஷ்ணு	10945	11675
குண்டூர்	11941	10038
நெல்லூர்	6723	6114
கடப்பை	5757	5428
கர்னூல்	7125	6890
பெல்லாரி	4264	4752
அனந்தப்பூர்	6745	6205
சித்தூர்	6682	6157
பங்கனபல்லி	286	296
ஆகமொத்தம்	91380	89986

இருபாலரின் மொத்தத் தொகை .... 181366.

தமிழ்நாட்டினர், தெலுங்கு நாட்டினர் ஆகிய இவ்விரு நாட்டினரும் சேர்ந்து மொத்தந் தொகை 406543 நான்கு லட்சத்து ஆருயிரத்து ஐந்நூறு நாற்பத்து மூன்று.

இது நம் அரசாங்கத்தார் எடுத்துள்ள ஜனசங்கையின் படி குறிக்கப்பட்டது. ஆனால், நம் இனத்தவர் இவ்விரு நாடுகளிலும் இவ்வளவே என்று நீங்கள் எண்ணுதல் வேண்டாம். பிறர் வழங்கும் தாழ்வான பெயர் முறையில் அரசாங்கத்தார், நம்மைக் குறிக்கின்றபடியால் அதை நம்மவருள், அநேகர் ஏற்றுக்கொள்ளாமல் வேறு குலப்பெயர்

களைக் கூறிவிடுகின்றனர். அன்றியும் நம் குலத்தவர் மலையாளம், கன்னடம், துளுவம் முதலிய இடங்களில் சுமார் 3 லட்சம் பேர்கள் இருக்கின்றனர். இவர்களேயன்றி வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் நம்மவருள் சுமார் 5 லட்சம் ஜனங்கள் தென் ஆப்பிரிக்காவில் மடகாஸ்கர், சிங்கப்பூர், இரங்கூன், பினங்கு, குவாலாலம்பூர், கொழும்பு, நெட்டால், செம்பர்லி முதலிய பல இடங்களில் வசித்து வருகின்றனர். ஆகவே நம்மவரின் மொத்தத்தொகை சுமார் 12 லட்சத்திற்குமேல் இருக்கின்றது.

அன்பர்களே, நாம் மேலேபார்த்த கணக்கின்படி பெருந்தொகையினராயுள்ள நம் மருத்துவ குலத்தவருள் தங்கள் தாய்மொழியில் எழுதப்படிக்கத் தெரிந்தோர் நூற்றுக்கு ஒன்பது பேர்களுக்குமேல் இல்லை. அதிலும் ஆங்கிலம் கற்றோர் ஆயிரத்தில் ஒருவரேனும் இல்லை. ஆதலின் எல்லா நாட்டினரும், எல்லா குலத்தினரும் முன்னேற்ற முற்றுவரும் இக்காலத்தே நாம் இன்னும் இதே நிலையில் இருத்தல் கூடாது. அரசாங்கத்தார் நம் குலத்தொழிலாய சித்த மருத்துவத்தை ஆதரிக்க எண்ணியுள்ள இக்காலத்தே நாம் வாளா விருப்போமாயின் அது நம்முடைய குற்றமாகவே முடியும். ஆதலின் சகோதரர்களே, நம் குலத்தவர்கள் கல்வியில் சிறந்திருத்தற்கு வேண்டிய வழிகளைத் தேடுங்கள். நம்மவர்கள் எல்லோ[illegible] ஆங்கிலக் கல்வியையே கற்றுத் தேறவேண்டும் எ[illegible]தில்லை. நாம் முதலில் நம் குலச்சிறுவர்களைத் நம் த[illegible]ாழியில் வல்லவர்களாக்குதல் வேண்டும். நம் தா[illegible]ழியில் உள்ள மருத்துவ நூல்களையும், நீதிநூல்களையும் அவர்கள் கற்குமாறு செய்தல் வேண்டும். நம் சித்தவைத்திய வளர்ச்சியின்பொருட்டுப் பல மருத்துவ கலாசாலைகள் ஏற்படுத்துமாறு நாம் அரசாங்கத்தாரைப் பன்முறையும் கேட்டல்வேண்டும். அன்பர்

களே, தற்காலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டும் இதுகாறும் சட்டசபையில் நம் குலத்தவருள் ஒருவரையும் தேர்ந்தெடுக்கவில்லை. ஆதலின் நாம் அதைக்குறித்து நம் அரசாங்கத்தாரை மிகுதியும் மன்ருடிக் கேட்டல்வேண்டும்.

இவைகளே யன்றி நாம் நம் பெண்மக்களையும் கல்வியில் வல்லவராக்குதல் வேண்டும். தற்போது நம்மவருள் சிலர், பெண்மக்கள் மருத்துவச்சிகளாக விருப்பது இழிவென எண்ணி அவ்வேலையினின்றும் தங்கள் பெண்மக்களை நிறுத்திவருகின்றனர். அது பெருந் தவறு. மருத்துவச்சி வேலை எக்காலத்தும் இழிவானதல்ல. தற்போது மருத்துவச்சி வேலை புரியும் நம் பெண்மக்களுள் பலர் கல்வி யறிவு இல்லாதவர்களாகவும், சுகாதார விதியைத் தெரிந்துகொள்ளாதவர்களாகவும், ஆசாரத்தில் குறைந்தவர்களாகவும் இருத்தலே அம் மருத்துவச்சி வேலையை இழிவாகச் சிலர் எண்ணுதற்குக் காரணமாகின்றது. இம் மருத்துவச்சி வேலை பார்த்துவரும் மற்ற வகுப்புப் பெண்மக்களை ஒருவரும் இழிவாகக் கருதவில்லை அன்ருே? ஆதலின் நாம் நம் பெண்மக்களுக்குக் கல்வியை வளர்த்துச் சுகாதார விதிகளைக் கற்பித்து அவர்களை ஆசாரமுள்ளவர்களாகவும் இருக்கச் செய்தல்வேண்டும்.

அன்பர்களே,

மேற்கூறியவைகளே [illegible]யன்றி நாம் மிகுதியும் கருத்துடன் கவனிக்கவேண்டி[illegible] ஒன்றுளது. அஃதாவது நம்மவருள் பலர் சமயஞான[illegible]றிதும் இல்லாதவர்களாய் இருக்கின்றனர். நம் குலத்தொழிலாகிய மருத்துவம் நம் சமயத்தைச் சார்ந்தே ஒளிர்கின்றது என்பதை நாம் முதலிலேயே கவனித்திருக்கிருேம். ஆதலின் நாம் முன்னேற்ற முறவேண்டுமானல் நம் சமயக் கல்வியில் நாம் சிறந்திருத்தல்

வேண்டும். சகோதரர்களே, நாம் அதனைத் தெரிந்திருத்த லில் மட்டும் 'பயனில்லை ; அநுஷ்டானத்தில் கொண்டுவருதல் வேண்டும். அதாவது ஒவ்வொருவரும் சமயதீட்சைகளைப் பெறுதலும், காலை மாலை நித்தியானுட்டானங்களைத் தவறாது செய்தலும், அகச்சுத்தம் புறச்சுத்த முடையவராய் இருத்தலும், ஆலய வழிபாடு கடைப்பிடித்தலுமே யாகும்.

அருமைச் சகோதரர்களே !

உலகில் மற்ற நாட்டினர் எல்லோரும் தாங்கள் பிறந்த நிலப்பாகுபாடுகளாலும், தங்களின் மொழி (பாஷை) களாலும், சமயங்களாலும், நிலத்தியல்புக்கும் வெப்பதட்பங்களுக்கும் தக்க தங்கள் உடம்பின் நிறங்களாலும் இன்னொன்று உணரும் பொருட்டுப் பலவகுப்புகளாகப் பிரிந்திருக்கின்றார்கள். நமது இந்திய நாட்டில்மட்டும் பல்வேறு தொழில்களைச் செய்பவர்களெல்லாம் ஒரே பாஷைக்குரியவர்களாயினும் பல்வேறு ச[illegible]களாகப்பிரிந்து ஒற்றுமையின்றி சீர்குலைந்திருக்கிறார்க[illegible] நமது நாட்டினரில் கற்றறிந்த பெறியோர்கள் பலர் [illegible]ன்றி நமது நாட்டின் நலத்திற்கும், முற்போக்குக்கு[illegible]பருந்தடையாயுள்ள சாதி வேற்றுமைகளை ஒழிக்கும்[illegible]ற்சிகள் பல செய்துவரும் இக்காலத்தில் தாழ்ந்த நிலை[illegible]ள மக்கள் எல்லாம் முன்னேற்ற மடைவதற்கான [illegible]சிகள் பல செய்துவரவும் பொது மக்களின் உயிர[illegible]க்கும் உத்தமோத்தமமான மருத்துவத்தொழிலைப் [illegible] மருத்துவ வகுப்பினரும் அவர்கள் மருத்துவத் தொ[illegible]ம் தாழ்ந்த நிலைமையி லிருப்பதைக் கண்டு இறைவனருளால் இரண்டு ஆண்டுகட்குமுன் சென்னையில் மருத்துவகுல சங்கமென்னும் ஒருசங்கம் நிறுவப்பட்டது. அச்சங்கத்திற்குச் சென்னை நகரிதும் சென்னை

இராஜதானியிலுமுள்ள மருத்துவ வகுப்பினரில் கல்வி யறிவுடைய பெரியோர்களும், சிங்கப்பூர், பினங்கு, கோலாலம்பூர் முதலிய வெளிநாடுகளிலுள்ளமருத்துவகுலசகோதரரும் மருத்துவரல்லாத மற்ற வகுப்பினரில் பொது நோக்கமும், கல்வி, அறிவுமுள்ள நன்மக்களும் உதவிசெய்து வருகின்றனர். இவர்களே இன்று இங்கு நடைபெறும் மருத்துவர் மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்குக் காரணர்களாக இருக்கின்றார்கள்.

அன்பர்களே,

இன்று நடைபெறும் நம் மருத்துவகுல மகா நாட்டின் நன்முயற்சியால் நமது திராவிட வைத்தியமாகிய சித்த மருத்துவமும், அதனையே முதற்றொழிலாகக்கொண்ட மருத்துவர்களும் மேன்மை [illegible]டைந்து, அதனால் நம் நாட்டில் பிணி, அகாலமரணம் முத[illegible]ய துன்பங்கள் குறைந்து [illegible]ம் நாடும் பிறநாடுகளோடு [illegible] வுரிமையில் வாழுமாறு நம் அரசப்பெருமானாகிய ஜா[illegible]க்கிரவர்த்தியையும், எல்லாம் வல்ல இறைவனையும் போ[illegible] வணங்குவோமாக.